திருக்கோயில்

டிசம்பர் 1975
ரூ. 1

17 JAN 1976

மறவாதீர்கள்;

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

திருக்கோயில்

மாலை : 18 இராக்கத—கார்த்திகை மணி : 3

டிசம்பர்—1975



பொருளடக்கம்

1. பட்டம் அளிப்பு விழாப் பேருரை
—முதல்வர் டாக்டர் கலைஞர்
2. அபிராமி அந்தாதி
—கு. சுந்தர மூர்த்தி, எம்.ஏ.,
3. புகழ்மிகு பூம்புகார்
—புலவர் நடேச நாராயணன்
4. முருகப்ப-ராவுத்தர்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,
5. வார்த்திகன் கதை
—ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,
6. முருகன் பெருமை
—நா. ஆறுமுகம், எம்.ஏ.,
7. மந்திர யோகம்
—கு. வரதராச பிள்ளை, பி.ஏ.,
8. ஆனைக்கா அண்ணலும் அகிலம்மையும்
—நமசிவாயம் பிள்ளை
9. ஆடாய் ஊஞ்சல்
—மீனவன்
10. திருவேற்காட்டு மகாதேவர் கோயில் கல்வெட்டுகள்
—ஏ. ஏகாம்பரநாதன், எம்.ஏ.,
11. பஞ்சாமிர்தம்
—டி. என். சுகிசுப்பிரமணியன்
12. வேளிமலைக் குமார கோவில்
—எஸ். பத்மநாபன்
13. திருவண்ணாமலையும் கார்த்திகைத் தீப விழாவும்
—ஆசிரியர்
14. கருணையா? கடவுளா?
—கவியோகி சுத்தானந்த பாரதியார்
15. மனித மனம்
—கே. எஸ். ஜெகன்னாதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

ஆசிரியர்:
ந. ரா. முருகவேள்
எம்.ஏ., எம்.ஓ.எல்.,

துணை ஆசிரியர்:
கே. எஸ். ஜெகன்னாதன்

பட்டம் அளிப்பு விழாப் பேருரை

முதல்வர் டாக்டர் கலைஞர்

158609

பல்கலைக் கழக வேந்தரவர்களே!

இணை வேந்தர் அவர்களே!

துணை வேந்தர் அவர்களே!

பேராசிரியப் பெருமக்களே!

மாணவ உடன் பிறப்புக்களே!

மூத்ததொரு பல்கலைக் கழகம் இளமை முறுக்குடன் செயல் புரியப் புறப்படுங்கால் அதனை வாழ்த்திப் போற்றும் வாய்ப்பினைப் பெறுவதில், அங்கிருந்து கிளம்பிடும் அறிவுக் கதிர்களாம் பட்டம் பெற்ற மாணவர்களைக் கண்டு மகிழ்வதில், பெருமை கொள்கிறேன். சிந்தனைச் செல்வர்களின் கருத்துக் கருவூலங்கள் கால் முளைத்து நடமாடிய இடம் சென்னைப் பல்கலைக் கழகம் என்பதை நானிலமே அறியும். இதற்கோர் வரலாறு உண்டு. அந்த வரலாற்றுக்கோர் மாண்பும் உண்டு. மண்டிலங்கள் பலவற்றின் புகழ் மாலைகளை அணிந்த கழுத்துடன் உலா வரும் இதன் பெருமிதம் கண்டு பேருவகை கொள்ளாத நல்லார் இல்லை. இதன் வரலாற்று ஏட்டில் ஒரு திருப்புமுனையாகப் — பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு, இன்று, முதல் தடவையாகத் தமிழிலே நடைபெறுகிறது ; அதிலும் 117 பட்டமளிப்பு விழாக்களுக்குப் பிறகு இந்த நூற்றுப் பதினெட்டாவது பட்டமளிப்பு விழா தமிழிலே நடைபெறுகிறது ; தாய்மொழியில் நடைபெறுகிறது என்பதை எத்துணை வியப்புடன் கூற வேண்டியிருக்கிறது என்ற வேதனையைக் கண்டீரா! தமிழில்தான் என்னால் பட்டமளிப்பு விழா உரையைப் படிக்க இயலும் என்பதால் அல்ல; ஆங்கிலத்திலும் படித்திடுவேன் ; பேசுதற்கு இயலாவிடினும்! நிலை விளக்கமல்ல இப்போது தேவைப்படுவது! நமது நிலத்துக்குரிய வளமொழியாம் தமிழை, மணிமுடியில் வைப்பதற்கு நாமே தயங்கிடில் — தாயை இகழ்வதற்குச் சமமன்றோ! அதனால்தான் இந்தத் திருப்புமுனைத் திருவிழாவை, இன்றைக்கு நான் என் தமிழை வணங்கித் தொடங்கி வைக்கிறேன்.

உழைப்பில் பங்கு கொள்வீர் !

உலகின் பல பகுதிகளில் ஒருவரைப் பார்த்து ஒருவர் கையசைத்துக் காலசைத்து ஊளையிடுவதையே உரையாடலாகக் கொண்டு இருந்த பழம்பெரும் காலத்தில், ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலக்கண எழில் கொஞ்சும் மொழியாக இன்பத் தமிழ் மொழி இருந்ததென்கின்றனர். எடுத்துக்காட்டுக்கள் ஏட்டில் அடங்கா; எண்ணிறந்தவை! அம்மொழி—செம்மொழி—நம்மொழி—தமிழ் மண்ணில் எல்லா இடத்திலும் கோலோச்ச வேண்டுமென்பதே தமிழ் நெஞ்சு கொண்டவரின் விழைவு! அது விரைவாக நிறைவேறவே உழைக்கின்றோம். அந்த உழைப்பில் பங்கு கொள்ளப் பட்டம் பெற்றுள்ள உங்களையும் அழைக்கின்றேன்.

தாய்மொழிச் சிந்தனை !

தாய்மொழியில் பேசுவது, எழுதுவது சிறப்பல்ல என்று கருதிடும் பொல்லாக் காலம் ஒன்றிருந்தது. பிற மொழியில் திறன் இருப்பதைக் காட்டிக் கொள்வதே பீடு என எண்ணினர். ''கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே—இங்கு வேரிற் பழுத்த பலா'' எனப் பாவேந்தர் பாடியது இளம் கைம்பெண்ணின் வேதனை குறிக்க மட்டும் எனக் கொள்ளாது, தமிழின் நிலை குறித்தும் பாடியதாகக் கொள்ளின் தவறில்லை. வளர்ந்து வரும் உலகின் அறிவார்ந்த விஞ்ஞானப் புதுமைகளுக்கேற்பத் தமிழில் சொற்கள் இல்லையே என்று வாதிடுவது, தமிழரையும் தமிழ் மொழியையும் வளர்க்கின்ற கடமையினின்றும் வழுக்கிக் கொள்வது தவிர வேறு என்ன?

> ''சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச்
> சேர்ப்பீர்''

எனப் பாரதியார் முழங்கினாரே; எந்தச்செல்வம் சேர்ப்பது குறித்து; கனகமணியா? கட்டித் தங்கமா? பட்டை தீட்டிய வைரமா? பவளமா? முத்தா? அவைகளையல்லவே அவர் குறித்தது. அவையனைத்தையும் புறங்காணும் அறிவொளியாம் அழியாச் செல்வத்தைத் தமிழில் கற்றுக் கொள்ளும் முயற்சியை அல்லவா அந்த முண்டாசுப் புலவர் சுட்டிக் காட்டுகிறார்! தாயின் தோள் மீது ஏறிக் காதலிக்காக மரக் கிளையில் கனி பறிப்போர் இருப்பதாலேதான் தமிழை மிதித்துக் கொண்டு, பிற மொழியை எட்டிப் பிடிக்கத் தாவுகின்ற கொடுமை இங்கே நடைபெறுகிறது. உலகத்தோடு தொடர்பு கொள்ள அடுத்து ஒரு மொழி தேவைதான்.

அது ஆங்கிலமெனும் துணையாக இருப்பதில் தவறில்லைதான். அதற்காகத் தாய்மொழியில் சிந்திப்பதையே மறந்துவிடல் அநீதியன்றோ?

சங்ககாலச் சால்பு !

எத்துணைச் செழுமையைத் தமிழ் முன்பே பெற்றிருந்தால் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலக்கணத்தை உருவாக்கியிருக்கக்கூடும் என்பதை நினைத்துப் பார்த்திட வேண்டும். அதற்கும் சில பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த மொழி என்பதால் தானே, அதன் வாயிலாகத் தமிழரின் சால்பை உணர முடிகிறது! அறிவிற் சிறந்த கல்வியாளர்கள், புலவர் பெருமக்கள் சங்க காலத்துத் தமிழரசர்களால் போற்றப்பட்டது மட்டுமல்ல; அவர்தம் பொன்மொழி கேட்டுச் செங்கோலோச்சினர் என இலக்கியங்கள் இசைத்திடுகின்றன. புலி, தன் குட்டியைப் பாதுகாப்பது போல மக்களைப் பாதுகாத்த மன்னனின் பெருமை குறித்துப் புறநானூறு,

''புலிபுறங் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப''

என்று ஒலிப்பதையும் கேட்கிறோம் ; அதே வேளையில் அந்த மாமன்னர்களில் ஒருவனான பாண்டியன் நெடுஞ்செழியன் கல்வி அறிவின் மேன்மை குறித்துத் தன் நாட்டு மக்களுக்கு எழுதிக் காட்டிய புறநானூற்றுப் பாடலும் அக்காலத் தமிழ்ச் சமுதாயம், கல்வியின்பால் கொண்டிருந்த காதலை வெளிப்படுத்துகின்றது. அரசின் பண்பு எவ்வாறு இருந்திடல் வேண்டுமென்பதை நமது இலக்கியங்கள் கோடிட்டுக் காட்டுவது கண்டு மலைத்தல்லவா போகிறோம் —இன்றோ, நேற்றோ இல்லையே; இருநூறு முந்நூறு ஆண்டுகள் என்ற கணக்கும் இல்லையே —சங்க இலக்கிய மல்லவா தமிழர்களின் அரசுப் பண்பை வரையறுத்துக் கூறுகிறது! நால்வகைப் படை கொண்ட மாவீரனாயினும் அவன் கொற்றம், அறத்தையே அடிப்படையாகக் கொண்டதாம். தனது உற்றார் உறவினர் என்பதற்காக அவர்களைப் பேணலும், சுற்றமல்லாதார் என்பதனால் பேண மறுத்தலும் கூடாதென்பதை அந்நாள் தமிழ் வேந்தன் உணர்ந்து நடந்தானும்.

'' நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்!
அதனால் நமரெனக் கோல்கோ டாது
பிறரெனக் குணங்கொல் லாது.''

இந்தப் புறநானூற்று வரிகள் மீட்டிக் காட்டும் தமிழரின் பண்பு கீதத்தை நாளெல்லாம் கேட்டு மகிழலாமே!

தமிழால் முடியும்!

தொல் புவியில் தமிழினம் கொண்டிருந்த பெருமையை, நான் ஒன்றிரண்டு தொகுத்துக் காட்டுதற்குக் காரணம் ஒரு வரலாற்று நூலை உங்கள் கரங்களில் வழங்குவதற்காக அல்ல ; மங்கிய வரலாற்றை மீண்டும் எழுதிட நீவிர் வல்லவர் என்று தெரிந்திருப்பதாலேயே நினைவூட்டுகிறேன். அதற்குத் தமிழைக் கற்றால் பழைய வரலாறு புரியும். தமிழில் கற்றால் புத்துலகத்தோடு போட்டி போடும் புதிய வரலாறு எழுத இயலும். பத்தாண்டுகட்கு முன்பே, ''தமிழால் முடியும்'' என்ற உறுதி தோன்றியது. முயற்சி அரும்பியது. தமிழைப் பயிற்று மொழியாக்கும் நிலையை முழுமையாக்கிட ஏழாண்டுகட்கு முன்பு சூளுரை மேற்கொண்டோம். பயன் யாது? 'பயிற்று மொழி' உணர்வைக் கெடுக்க, ''வயிற்று மொழி'' உணர்வு தூண்டிவிடப்பட்டது. தமிழ், சோறிடாதோ? சோம்பிக் கிடக்குமோ? சோறும் தரும்—சுயமரியாதையும் தரும்—என்றுஎடுத்து வைத்த சான்றுகள் விழலுக்கிறைத்த நீராயிற்று—வெண்ணிலா, காட்டில் காய்ந்த கதையாயிற்று ; விறுவிறுப்பான வேலைநிறுத்த நடவடிக்கைகள், மாணவர்களின் உணர்ச்சியைத் தட்டிவிட்டு எழுப்பப் பெற்ற கிளர்ச்சிகள், விளக்கம் பெறுவதற்கான அமைதியான தன்மையைத் திரைபோட்டு மறைத்ததால் தமிழ்ப் பயிற்று மொழித் திட்டம் தயங்கி நின்றது. இந்தத் தயக்கம் முழுமையாகப் போக்கப்பட்டுத் தாய்மொழிச் சிந்தனைக்கு முதலிடம் அமைந்திட எதிர்காலத்தைப் படைக்கப்போகும் மாணவர்களும், அவர்கட்கு வழிகாட்டுவோரும் பணியாற்றிட வேண்டும். ஆங்கில மொழியில் மேதைகளாயிருப்போர் தமிழ்ப் பயிற்று மொழிக் கொள்கைக்குப் பகையாயிருப்பர் என்ற பொதுப்படையான வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். புலால் உண்ணாதவர்கள், மற்றவர்க்குப் புலால் உணவு சமைப்பதையும், பரிமாறுவதையும் பார்க்கிறோம் நம் அனுபவத்தில் ; ஆகவே ஆங்கிலம் படித்த அறிஞர்கள் தமிழ்ப் பயிற்று மொழியை விரிவாக்கி வெற்றி காண்பதில் நம் உணர்வுகளுக்குச் செயல்வடிவம் தருவர் என்றே நம்புகிறேன். அந்த நம்பிக்கையில் ஒன்றைத் தெரிவிக்கிறேன். இது, முழுமையான வெற்றிக்கு முதல் கட்டமாக அமையட்டும்.

இப்போதுள்ள பல்கலைக் கழகப் பாடத்திட்ட முறையில் புகுமுக வகுப்பு, இளநிலைப் பட்டப் படிப்பு (பி.ஏ., பி.எஸ்ஸி) இவற்றுக்கு மட்டும், தமிழ்ப் பயிற்று மொழி இருந்து வருகிறது. பட்ட மேற்படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்புக்களுக்கு (எம்.ஏ., எம்.எஸ்ஸி) தமிழ்ப் பயிற்று மொழி இல்லை. இதனால் தமிழில் பட்டப் படிப்பு பயின்றவர்கள், முதுநிலைப் பட்டப் படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொள்வதற்கு வாய்ப்பற்றுப் போகிறது. எனவே, முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு வருகிற திட்டத்தினைப் பல்கலைக் கழகத்தினர் தொடங்கி நிறைவேற்றினால் அளவிடற்கரிய மகிழ்ச்சியுடன் அரசு வரவேற்றுத் துணை நிற்கும்.

எம்மொழியில் பயில்வது என்ற கேள்விக்கே இத்தனை விளக்கங்களும், கருத்துக்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. இனி, எதனைப் பயில்வது என்பதும் விடை காண வேண்டிய தலையாய வினாவல்லவா?

கற்பவை தேர்ந்தெடுப்பீர் !

''கற்க கசடற'' என்ற வள்ளுவர், ''கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என வலியுறுத்தியிருப்பதை மேலெழுந்தவாரியாக நோக்குவது உரிய பொருளைத் தராது. கற்பவை எவை என்பதை முதலிலேயே தேர்ந்து தெளிந்திட வேண்டும். கசடறக் கற்க வேண்டுமென்பது பொதுவான அறிவுரை. கற்பவை எவை என முடிவு செய்து கொண்டு, கற்கத் தொடங்க வேண்டுமென்பதுதான் சிறப்பு மிக்க அறிவுரை. அந்த அடிப்படையில் கலையியல் மட்டுமே பயில்வோர், அறிவியல் பாடங்களிலும் ஒன்றைக் கட்டாயமாகப் பயில்வதும்—அறிவியல் மட்டுமே பயில்வோர் கலையியல் பாடங்களில் ஒன்றைக் கட்டாயமாகப் பயில்வதும் நிறைவான ஆற்றலை அளித்திட வல்லது என்பது என் கருத்து. அறிவியல், கலையியல் இரண்டு துறைகளிலும் இணைந்த அறிவு மாணவர்க்கு இன்றியமையாததாகிறது. அதற்கேற்ப இப்போதுள்ள பாடத் திட்டங்களில் மாறுதல் செய்வது பற்றி ஆய்ந்து முடிவெடுப்பது நலமென நான் சுட்டிக் காட்டுகிறேன்.

ஊர்ந்து செல்லும் குழந்தைப் பருவத்திலேயே பல் முளைக்கும்போது கிராமப்புறங்களில் கொழுக்கட்டை செய்து வைத்துப் படையலிட்டு, அகன்றதோர் தட்டில் அணிமணியும், கொழுக்கட்டையும் இட்டுக் குழந்தை எதனைத் தேர்ந்தெடுக்கிறது என்பதைக் கூர்ந்து கவனிக்கிறோம் ஆவல் மிகுதியோடு; இதனைப் புதிய யுகத்தை வரைய இருக்கும் மாணவரிடத்திலும் கண்டறிதல் தேவையன்றோ?

எல்லோருமே பேராசிரியப் பெருமக்கள் ஆகிவிடின், அவர்கள் இருந்து அறிவு போதிக்கும் கல்லூரிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்ற பொறியாளர் எங்கிருந்து வருவர்? வரலாற்று மேதைகள் தோன்றி ஆராய்ச்சிக் கருவூலங்களை அள்ளி வழங்கிடல் களிப்பூட்டுவதுதான் எனினும், விஞ்ஞானத் துறையில் முகிழ்த்திடும் அற்புதங்களைக் கற்றறிந்த வித்தகர்களின் வளர்ச்சியைப் புறக்கணித்து விட முடியாதே! எனவே, எல்லாத் துறைகளிலும் பரவலாக மாணவர் அணியினர் ஒளியுமிழ் கொற்கை முத்துக்களாக விளங்கிடுதல் வேண்டும். அதற்குத்தான் ''கற்பவை தேர்ந்து கற்றிடுக ; கற்றபின் அதற்குத் தக நிற்க'' எனப் பொய்யா மொழியார் புகன்றார்.

பட்டம் பெற்றோர் பணி :

அறிவுக் கூடங்களில் இருந்து பட்டம் பெற்று வெளிச் செல்வோர், பகுத்தறிவுக் கதிர் பரப்பி, நமது நாட்டு மக்களை—முன்னேறும் உலகத்தோடு இணைந்து நடைபோடத் தக்கவர்களாக ஆக்கிடப் பாடுபட வேண்டும். சாதியென்னும் சங்கிலி, தாளைப் பிணைத்திட — சம்பிரதாயங்கள் என்னும் பேரால் மூடப் பழக்க வழக்கங்கள் முடிசூடிக் கொள்ள — இனியும் இடம் தருவது, இளைய தலைமுறையையும் திட்டமிட்டுக் கெடுக்கிறோம் என்றாகும். அறிவுலகை மலரச் செய்திடத் தொடக்கக் கல்விப் பருவத்திலேயே புதிய மாற்றங்களைச் செய்திட வேண்டும். முயற்சி திருவினையாக்கும் என்பதை மறந்துவிட்டு, எல்லாவற்றுக்கும் பொறுப்பை நம்மை மீறிய ஒரு சக்தியிடம் ஒப்படைத்துவிட்டு — வாழ்நாட்களை எண்ணிக் கொண்டிருப்பவன், தானும் வாழாமல் பிறர் வாழவும் பாடுபடாத நடைப்பிணமாகிவிடுகிறான். இந்த இழிநிலை தவிர்க்கத்தான் அறிவாயுதம் கையில் ஏந்தியிருக்கிறீர்கள். அதனை மறந்திடாதீர் ; தொல்லைகள் புயலெனத் தாக்கிடினும் ஏற்ற கொள்கையில் நிலையாக நிற்பவனே இலட்சியவாதி. அந்தப் பட்டியலில் இன்று பட்டம் பெறுவோர் பெயரும் இடம் பெறுதல் வேண்டுமென விழைகின்றேன்.

இலட்சியம் பற்றி நான் கூறிடத் தொடங்கியதும், மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் 1967-ஆம் ஆண்டு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையில், இலட்சியம் பற்றி எடுத்துக் கூறிய கருத்துக்கள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன. அதனை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமென்பதால் சில வரிகளை நினைவூட்டுகிறேன்—

''கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக் கூடிய இலட்சியங்கள் நம் முன் நிற்கின்றன. ஆனால், அதே வரிசையில் வசீகரப் பூச்சுக்களுடன், மயக்கமூட்டத்தக்க பேச்சுக்களையும் குறிக்கோள் என்ற பெயரால் நிற்கவிடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும். நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள். அனைவரும் ஏற்கத் தக்கது ; இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன். நாட்டின் ஒற்றுமைக்காக — உன் மொழி, உன் மரபு அழிந்திடவும், ஒருப்பட வேண்டும்; பிறமொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது. தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது. இதனை இலட்சியமென்றோ திட்டமென்றோ கூறுவது, இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும். நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும்; அதற்கான முறையில் அனைவரும் உழைத்திட வேண்டும்—இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்க இலட்சியம். நாட்டுச் செல்வம் பெருகட்டும். அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்று உரைப்பது இலட்சியமாகாது — அதனைக் கேலிக் கூத்தாக்குவதாகும்.

''கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—இனிய எளிய இலட்சியம். கூடி வாழ்வோம் ; ''உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு'—என்று முறை வகுத்திடல் கூடிவாழ்வதாகாது. 'ஆட்டுக் குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், என்னோடு ஆடு ஒன்றாக இணைந்துவிட்டது. நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவது போன்ற முறையில், 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.''

அண்ணா அன்று கூறிய இந்த மணிவாசகத்தைத் தெளிவுற நன்குணர்ந்தால் இலட்சியத்தில் குழப்பத்திற்கு இடமேயில்லையல்லவா!

விஞ்ஞான அறிவு வளர்த்திடுவோம்!

கல்லூரிப் படிப்பும் பயிற்சியும் பெறுகிற மாணவர்க்கு வெளியிலிருப்போர் தக்க உதவி செய்திடின் மாணவர் பலரின் வேலை வாய்ப்புப் பற்றிய கவலை மறையும். நல்ல திறமையாளரும் குறிப்பிட்ட காரியங்களுக்குக் கிடைத்திடுவர். பெரிய தொழில் நிறுவனங்கள் (Big Industrial Houses) தங்கள் தேவைக்கேற்ற பயிற்சியுடன் மாணவர்களைப் படிக்க வைப்பதும், பயிற்சிக்கான செலவை ஒப்புக்கொள்வதும் பல நாடுகளில் இன்று மேற்கொள்ளப்பட்டுள்ள முறையாகும். ஆனால் நமது நாட்டில் தொழில் நிறுவனங்கள் இதற்கெனச் செலவிடுவது குறைவேயாகும். தொழிற் கல்வியும், விஞ்ஞானக் கல்வியும் அதையொட்டிய பயிற்சிகளும் மாணவர்கட்குக் கிடைக்கத் தொழில் நிறுவனங்கள் பங்கேற்பதோடு செலவுகளையும் ஓரளவு ஏற்றிட முன் வருதல் வேண்டும். எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் மாணவர்கள் கல்வி பயில இந்த முறை, உறுதியாக வாய்ப்பு அளிக்கும்.

பழைய முறைகளைக் களைந்துவிட்டு, விஞ்ஞான அறிவுக்கும் மனித சமுதாயத் தேவைகட்கும் ஏற்றவாறு கல்வி முறை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதோடு, அந்தக் கல்விக்கும் அன்றாட வாழ்வுக்கும் தொடர்பு இருந்திடத்தக்க சூழ்நிலையும் ஏற்படுத்தியாக வேண்டும். விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் பற்றிக் கோத்தாரி குழுவினர் கூறியவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்:—

" Science has radically transformed man's material environment. In the technologically advanced countries the average span of human life has increased by more than a third over the last hundred years. Science *is* universal and so *can* be its benefits. Its material benefits are immense and far-reaching—industrialisation of agriculture and release of nuclear energy, to mention two examples—but even more profound is its contribution to culture. Science is liberating and enriching of the mind and enlarging of the human spirit. Its fundamental characteristic has turned out to be the possibility of unlimited growth. Every advance in science deepens our understanding of Nature. But it also heightens the sense of ignorance. *Nature is inexhaustibly knowable*. Nothing comparable to the scientific revolution in its impact on man's development and outlook has happened since the Neolithic times."

புதிய பல்கலைக் கழகங்கள்!

கடந்த ஆண்டுகளில் கல்லூரிகளின் எண்ணிக்கை வளர்ந்துள்ளது. மாணவர்களின் தொகையும் வளர்ந்துள்ளது. அதற்கேற்பக் கல்வியின் தரமும் அமைந்திடல் வேண்டும். அது மட்டுமல்ல; பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப வருங்காலத்திற்கான கல்வித் திட்டத்தையும் இப்போதே வகுத்திடுதல் வேண்டும். கல்வியின் திறனை மேம்படுத்தக் கல்லூரிகட்குத் தன்னாட்சி வழங்கும் திட்டம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களின் கண்காணிப்புக் கட்டுப்பாட்டுக்குள் கல்லூரிகள் சுயாட்சித் தன்மையுடன் இயங்குவது, அவைகளின் ஆற்றலை அதிகப்படுத்திட உதவும். அதற்கெனத் தேவைப்படும் தகுதி பெற்ற கல்லூரிகள் இந்தப் பயனை விரைவில் பெற இருக்கின்றன.

கல்லூரிகளின் பெருக்கத்தை மனத்திற்கொண்டு, நிர்வாக வசதிக்காகவும், அந்த அடிப்படையில் பரவலாகக் கல்லூரிகளின் மீது சிறப்புக் கவனம் செலுத்துவதற்கு ஏற்ற வகையிலும் மேலும் இரு பல்கலைக் கழகங்களைத் திருச்சியிலும், கோவையிலும் அமைத்திடவும், விஞ்ஞானம் மற்றும் தொழிற் கல்விக்கான பல்கலைக் கழகத்தைச் சென்னையில் நிறுவிடவும் ஊக்கமுடன் முயன்று வருகிறோம்.

அரசும், பல்கலைக் கழகங்களும், கல்வித் துறையாளரும், படித்துக் கொண்டிருப்போரின் நிகழ்காலம் நம்பிக்கைக்குரியதாக இருந்திடவும், எதிர்காலம் ஒளிமயமாகத் திகழ்ந்திடவும், பட்டம் பெற்றுள்ள உங்களைப் போன்றோரின் உறுதுணை கிடைக்குமென்ற ஆர்வத்தில் திட்டங்களைத் தீட்டுவதைக் காண்கிறீர்கள்.

அறிவுச் சேமிப்பு வங்கியாவீர்!

மராட்டிய மாவீரன் சிவாஜியை வீரனாக்கிய அவன் தாய் ஜீஜிபாய் போல, மாணவர்களை ஆற்றலாளர்களாக்கிட ஆசிரியப் பெருமக்கள் அக்கறை காட்டுதல் வேண்டும். ''சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'' என்ற தமிழ்ப் பாடலுக்கேற்பத் தந்தையின் நிலையிலிருந்து மாணவச் செல்வங்களைச் சான்றோர்களாக மிளிரச் செய்திடல் வேண்டும்.

இன்று நாடெங்கும் கட்டுப்பட்டுத் தன்மை பற்றிப் பேசப்படுகிறது. ஒழுங்கும் கட்டுப்பாடும் இளந்தலை முறைக்கு மிக மிகத் தேவை என்பதையும், கடமை உணர்வும், கண்ணியமும் தேய்ந்து போகாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்பதையும், தொடர்ந்து நல்லறிஞர்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். சட்டத்தால் மட்டுமே எங்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று எண்ணிடாமல், சட்டம் தேவைப்படாமலே இளைஞர்கள், தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் தாங்களே நிறுத்திக் கொள்ள வேண்டும். துள்ளும் பருவமிது ; அறிவேன். அள்ளும் சுவை சேர் பாட்டுங் கூத்தும் நாடிடும் வயதுதான்; நான் மறுத்திட மாட்டேன். தடுத்திடவும் நினைப்பதில்லை. ஆனால்; இந்தப் பருவத்தில்தானே ஒரு நாற்பது ஐம்பது ஆண்டுக் காலத்திற்குத் தேவைப்படும் அறிவுச் சேமிப்பு வங்கியை நிறுவி, அதனை விரிவுபடுத்தும் திட்டங்களைத் தீட்ட வேண்டியிருக்கிறது! இந்தப் பருவத்தைக் கோட்டை விட்டுவிட்டால், பின்னர் எத்துணை இடர்ப்பட வேண்டியுள்ளது அந்தச் செல்வத்தைத் தேடிப் பெற்றிட, என்பதை மறந்திடலாகாது.

கல்வியெனும் ஏணி கிடைக்காததால் சமுதாயத்தில் உயர்நிலை அடைய முடியாமல் தாழ்த்தப்பட்டும், பிற்படுத்தப்பட்டும் கிடந்த மக்களுக்கு அறிவாரக் கல்வி வழங்கவும், அவர்கட்கு மேம்பாடு அளிக்கவும் பெருவாரியான சலுகைகள் வழங்கப்படுகின்றன. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையும், சலுகை வழங்கும் கொள்கையும் ஆழ்குழியில் கிடப்போரைக் கரையேற்றுவதற்குத் தானே தவிர, சாதிப் பிரிவுகளின் சர்ச்சைகளை வளர்க்கின்றவர்களை உற்சாகப்படுத்துவதற்காக அல்ல. கல்விக் கூடங்கள், நம் அனைவரையும் மனிதர்களாக—இந்த நாட்டுக் குடி மக்களாக—ஆக்குதற்குப் பயன்பட வேண்டுமேயல்லாமல், சாதிப் போரின் களங்களாக அமைந்திடலாகாது.

சாதி பேதக் கொடுமை—சாதிப்பற்று—இவைகளைச் சாடிடவும், சமுதாயத்தில் சமத்துவமும், பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வற்ற நிலையும் படைத்திடவும், பகுத்தறிவுக் கதிரை எங்கணும் பரப்பிடவும், நாடு, வீரர் கோட்டமாக, விவேகபுரியாக விளங்கிடவும், வளம் குலுங்கவும் இன்று—பட்டம் பெறும் நீவிர், தூய தொண்டுள்ளம் கொண்டு, பயணம் மேற்கொள்ள வேண்டுகிறேன். தாழாது முயற்சியில் நாட்டம் கொள்வோர், ஊழையும் வென்றிடுவர் என்ற குறள் மொழியை உம்மால் தான் மெய்ப்பிக்க முடியும் எனக் கூறி, வாழ்த்தி மகிழ்ந்து, விடைபெற்றுக் கொள்ளுகின்றேன்.

[சென்னைப் பல்கலைக் கழகத்தின் 118-ஆவது பட்டம் அளிப்பு விழாவில், நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிகழ்த்திய சிறப்புப் பேருரை, (20-9-75) இங்கு மிகவும் போற்றி எடுத்து வெளியிடப் பெறுகின்றது.]

—ஆசிரியர்.

அபிராமி அந்தாதி

திரு. து. சுந்தரமூர்த்தி எம்.ஏ

முன்னுரை :

தமிழ் மொழி இறைமணம் கமழும் இனிய மொழியாகும். இதன்கண் தோன்றிய சமய நூல்கள் பல அவற்றைச் சாத்திரம், தோத்திரம், புராணம் என மூவகைப்படுத்துவர். இம் மூவகை நூல்களுள்ளும் தோத்திர நூல்களே மிகுதியாகவுள்ளன. அவை விநாயகர், முருகன், சிவபெருமான், உமையம்மை முதலிய கடவுளரைப் பற்றியவையாகவும், அடியவர்களைப் பற்றியவையாக்வும், உள்ளன. அவற்றினுள் இவ்வபிராமி அந்தாதி திருக்கடவூரில் வீற்றிருக்கும் அபிராமியைப் பற்றியதாகும்.

அபிராமி அந்தாதி, காப்பு முதலாக 102 பாடல்களை உடையது. அம்மையின் தோத்திர நூல்களுள் பலரும் நாளும் ஓதி வரும் சிறப்பு உடையது இது. இதனை முறையாக நாளும் ஓதி வருவார்க்கு இவ்வம்மையின் அருள் கிட்டும் என்பது ஒருதலை. இந்நூலாசிரியரின் உறைப்பு, அம்மையின் பெயர்கள், அம்மையைத் தொழுவார்க்கு வரும் பயன்கள், அம்மையப்பருக்கு இடையே தோன்றிய ஊடற் சிறப்பு, திருமுறையிலும் சைவ சித்தாந்தத்திலும் உள்ள கருத்துக்கள் முதலியனவும் இந்நூலில் கூறப் பெற்று உள்ளன.

1. ஆசிரியர் அன்பின் திறம் :

ஆசிரியர் அபிராமியை அன்றிப் பிறரை வணங்காதவர். ''மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே'' 13. ''கொள்ளேன் மனத்தின் நின் கோலம் அல்லாது'' 23. ''பணியேன் ஒருவரை நின் பத்ம பாதம் பணிந்த பின்னே'' 24. 'சரணம்புயமுமல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமே'' 58. ''நின் புகழ்ச்சியன்றிப் பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப்பிரகாசம் அன்றிக் காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே'' 64. ''வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன்'' 81. ''இனி யான் ஒருவர் மதத்தேமதி மயங்கேன்'' 92. என வருவன இவ்வுண்மையை உணர்த்தும்.

2. அம்மையின் பெயர்கள் :

ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ என்பர் மணிவாசகர். அம்மையைக் குறித்தற்கு எத்துணையோ பெயர்கள் உள்ளன. அவற்றுள் இவ்வாசிரியர் குறிக்கும் பெயர்களாவன : சுந்தரி, அந்தரி, நீலி (8); மங்கலை, பிங்கலை (21); நாயகி, நான்முகி, நாராயணி, பஞ்சசாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, வாராகி, சூலினி, மாதங்கி (50); மலைமகள், செங்கண்மால் திருத்தங்கச்சி (61) ; பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, சண்டி, காளி, மாலினி, சூலி (77) ; கோமளவல்லி, யாமளவல்லி (96) ; ஆத்தாள், அபிராமவல்லி (62).

3. ஊடற் சிறப்பும், இன்பச் சிறப்பும் :

தோத்திர நூலாக விளங்கும் இவ்வழி பாட்டு நூலில், ஆசிரியர் ஆங்காங்கே இன்பச் சிறப்புத் தவழவும் பாடியுள்ளார். ஊடுதல் காமத்திற்கின்பம் என்றார் வள்ளுவர். அவ்வூடலகத்தே மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் தேடல் இயற்கை. ஆதலின் ஊடற் காலத்தே சிவபெருமான் உமையம்மையைச் சீறேல் என்று அவள் சீறடி பணிகின்றாராம். இதன் பயனாகக் கூடி முருகப் பெருமானைத் தோற்றுவிக்கின்றாராம். இக்குறிப்பைச் சுவைபட, (அம்மையின்) சரணாரவிந்தம்......எம்பிரான் முடிக்கண்ணியதே(11), திங்கட்பகவின் மணநாறும் சீறடி(35) தண்குறைதீர எங்கோன் சடையினில் வைத்த தாமரையே (72), தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரன் (97), எனப் பல பாடல்களிலும் குறித்துள்ளார். ஊடுதல் காமத்திற்கின்பம் ; அதற்கு இன்பம் கூடி முயங்குதலன்றோ ? அவ்வின்பச் சிறப்பையும் பல இடங்களில் குறித்துள்ளார். ''பவளக் கொடியிற் பழுத்தசெவ்வாயும் பனிமுறுவல் தவளத் திரு நகையுந் துணையா எங்கள் சங்கரனைத் துவளப் பொருது (38), ''இடங்கொண்டு விம்மி யிணைகொண்டிறுகி யிளகிமுத்து வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை நடங்கொண்டு கொள்கை நலங் கொண்ட நாயகி'' (42), என்பன போல வருகின்ற அரிய இனிய

அழகிய தொடர்கள் பல. இவ்வனைத்தும் இறைவன் போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிந்தருளும் மெய்ம்மையை உணர்த்த வந்தனவாகும்.

4. அம்மையை வழிபடுவோர்க்கு வரும் பயன் :

அம்மையை வழிபடுவோர்க்கு இம்மை, மறுமை, வீடு பேறு ஆகிய எல்லா நலன்களும் சித்திக்கும். இத்தகைய நலங்களைப் பெற

வேண்டும் எனில், அம்மையை முதற்கண் வழி பட வேண்டும் எனக் கருதுகின்றார்.

''பாரில் உன்னைச் சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே'' என்பது அவர் வாக்கு. இங்ஙனம் சந்தித்த பின் (வழிபடப் பெற்ற பின்) கிடைக்கும் பேறுகள் பல. வழிபடுவோர் மண்ணளிக்கும் செல்வமோ பெறுவாரா? மதி வானவர் தம் விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி — வீடுமன்றோ பெறுவார்? என்பர். அல்லும் பகலும் தொழுமவர்க்கு அழியா அரசும் செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்கும் என்பர். ''அவளைப் பணிமின்கண்டீர் அமராவதி ஆளுகைக்கே'' என்பர். நாயகி தன்னடியார் மரணம் பிறவி இரண்டும் எய்தார், இந்த வையகத்தே என்பர். சிவகாமி சுந்தரி சீறடிக்கே சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே என்பர். அடியிணையைப் பயன் என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும் பொன் சயனம் பொருந்தும் தமனியக் காவினில் தங்குவர் என்பர். தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி மங்குவர் என்பர். சகல கலாமயில் தன்னைத் தம்மால் ஆமளவும் தொழுவோர் எழுபாருக்கும் ஆதிபரே என்பர். முக்கண்ணியைத் தொழுவோர்க்கு ஒரு தீங்கில்லையே என்பர்.

5. தொழுதுய்ந்தார் :

இத்தகைய பேறுகளை வழங்கியருளும் அபிராமி அம்மையை முன்னர்ப் பலரும் தொழுதுய்ந்தனர்; நாமும் தொழக் கடவோம் என்று ''ஆதித்தன் அம்புலி'' என வரும் பாடலில் வற்புறுத்துகிறார். வழிபடுவோர் பெறும் பேறுகளை விளக்கிய ஆசிரியர், வழிபடாதார் தமக்குள்ள பேறுகள் யாவற்றையும் இழந்து விடுவர் எனவும், எச்சரிக்கின்றார். ''தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின் தோற்றம் ஒரு போதும் மனத்தில் வையாதவர், குடில்கள் தொறும் பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பார் எங்குமே'' என்று அறிவுறுத்திப் பாடி அருள்கின்றார்.

முடிவுரை :

அம்மையை வழிபட்டுப் பேரின்பம் பெற்றதால், தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் பெறவேண்டுமென்ற கருணையால், முழுமையாகத் தொழ இயலாதாயினும், தம்மால் ஆம் அளவாவது தொழுது பயன் பெறுதல் தகுதி என வற்புறுத்தியருளுகின்றார் ஆசிரியர். நாம் அவர் வழி நின்று வழிபடின், நமக்குச் செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்கும்.



சென்னை கோடம்பாக்கம் அருள்மிகு வடபழநி ஆண்டவர் கோயிலின் சார்பில், சித்த மருத்துவ மனை திறக்கப்பெற்றபொழுது, நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உரை நிகழ்த்துதல். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையார், எம்.எல்.ஏ., ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ.,பி.எல்.,ஐ.ஏ.எஸ். ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

புகழ்மிகு பூம்புகார்

புலவர் நடேச நாராயணன்

கண்ணகியைத் தந்த சோழப் புகார்:

வளங்கொழிக்கும் பொன்னிஎனும் நற்ருயால் இந்த
வையகத்தே சோறுடைத்தாம் சோணுட்டில் நந்தம்
உளங்கவரும் காவிரிப்பூம் பட்டினமாய்க் காணும்
உயர்வுமிகும் நகரதுவும் பூம்புகாரே யாகும்
''இளம்வயதில் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்தே
எழிற்றெய்வப் பேறுற்ருள்' எனச்சிலம்பு தானும்
விளம்புகிற கண்ணகியை வியனுலகுக்(கு) ஈந்த
விழுப்புகழ்சால் நகரதுவும் பூம்புகாரே யாகும். (1)

பைந்தமிழ் நூல் போற்றும் பல்பெயர்ப் புகார் :

'காகந்தி' 'புகழ்மூதூர்' 'வான்பதி'யாம், மற்றும்
கவின் 'சம்பா பதி''கோலப் பட்டின'மாம் என்றே
மோகம்செய் பெயர்பலவும் தான்பெற்றே யோங்கும்
முதியவள நகரதுவும் பூம்புகாரே யாகும்
மேகலையும் அகம்புறமும் முத்தொள்ளா யிரமும்
மேன்மையுறு நற்சிலம்பும் பட்டினப்பாலையும்
தாகம்தீர் தமிழ்நூல்கள் பலவும் நன்(கு) ஏத்தும்
தலைசிறந்த நகரதுவும் பூம்புகாரே யாகும். (2)

பிறமொழி நூல் போற்றும் பெருமை மிகு புகார் :

அரியமொழி பிராகிருத நூல்களிலே நல்ல
'அபிதம்ம அவதாரம்' 'புத்தவம்சாத் தகதா'
உரியதெனும் 'மிலிந்தபண' 'ஜாதகமாம் கதை'கள்
ஊர்சுற்றித் தாலமியின் பிளினியின் நூல்களொடே
'எரித்ராய்' நன் 'மெரி(சு)' என்னும் பிறநாட்டார் நூல்கள்
ஏற்றமுடன் போற்றியதும், என்றென்றும் நன்கு
தெரியும்வகை கல்வெட்டும் சிறப்பித்தேத் தியதும்
திகழும்நம் மாநகராம் பூம்புகாரே யன்ருே? (3)

மன்னர் பலர் ஆண்ட மாட்சிமிகு புகார் :

தூங்கெயிலை எறிந்தவனும் தொடித்தோட் செம்பியனும்
சோழர்குலத் திருவிளக்காம் மனுநீதி மானும்
ஈங்குயர்ந்த எழிற்கரிகாற் பெருவளத்தான், கிள்ளி
இணையில்லா முசுகுந்தன் போன்ருரும் யாதும்
தீங்கின்றிச் செங்கோலாம் ஆட்சிசெய்து நாளும்
சிறப்பாக ஓம்பியநற் றிருநாடாம் என்ருல்
ஓங்குபுகழ்ப் பூம்புகார்க்கும் இணையுண்டோ இந்த
உலகத்து நகர்களெலாம்? உரைத்திடுவீர் நன்றே! (4)

பண்புநிறை பழம் பெரும் புகார் :

உலகநகர் களில்ஈரா யிரமாண்டின் முன்னே
உயர்வுடைய நகரமென விளங்கியநன் னகர்தான்
திலகமெனும் படிதிகழ்ந்த பூம்புகாரே யாகும்
சீருடைய நகரமைப்பில் நாகரிகம் தன்னில்
குலவுகிற பண்பாட்டில் கலைத்திறத்தில் மக்கள்
கூடியுணும் வாழ்க்கையிலும் கொடையினிலும் கண்ட
நலமதனை விரித்துரைப்பின், 'யாமிதுபோல் சீரார்
நகரெதுவும் கண்டதிலை' எனவியப்பர் அம்மா! (5)

இருபிரிவுடை எழிற்புகார் :

ஏற்றமுடைப் பூம்புகார்தான் இருபிரிவாய்க் காணும்
இசைமருவூர்ப் பாக்கமுடன் பட்டினப்பாக் கந்தான்
தோற்றமுடை இளமரக்கா இடைவிளங்க நன்றே
தொடர்புற்றுத் திகழ்ந்ததுவே! அவ்விடையில் மக்கள்
போற்றும்நா ளங்காடி பொலிவுடனே ஓங்கும்
புனலெறியும் கடற்கரையில் மீனவரின் குடிலும்
ஏற்றிவரும் கலன்களது பொருளையெலாம் சேர்க்கும்
எழிற்'கொட்ட கார'மதும் இலங்கிடுமாம் கண்டீர் (6)

மருவூர்ப் பாக்கம் :

அணிசெய்யும் பொற்கொல்லர் மரஞ்செய்யும் தச்சர்
அழகுதரும் ஓவியரும் தையல்புரி வோரும்
துணிநெய்யும் நெசவாளர் பொம்மைசெய்வோர் தாமும்
தோல்வினைஞர் வெண்கலத்துக் கன்னாரும் நெஞ்சைப்
பிணிக்கின்ற இசைப்பாணர் அப்பம்முதல் பிட்டுப்
பிரியமுடன் விற்றிடுவோர் இறைச்சிவிற்போர் கூல
வணிகம்புரி மக்களும்வாழ் இடங்களெலாம் நன்றே
வரிசையொடு விளங்கிடுமே மருவூர்ப் பாக்கத்தே (7)

பட்டினப்பாக்கம் :

முறைசெய்யும் மன்னரொடு மாளிகைவாழ் வோரும்
முயற்சிமிகும் பெருங்குடியாம் வாணிகரும், ஓதும்
மறையவரும் மாண்புமிகும் உழவர்களும் மற்றும்
மருத்துவரும் சோதிடரும் மூவகைப்பா கருமே
உறைகின்ற வீதிகளும் சூதர், மா கதரும்
உளங்கவரும் கூத்தர்களும் வாத்தியமிசைப் போரும்
நிறைந்திட்ட வீதிகளும் மறவரது தெருவும்
நேர்த்தியொடு விளங்கிடுமே பட்டினப் பாக்கத்தே (8)

மன்றங்கள் நிறைந்த மாநகர் :

கள்ளரெலாம் தண்டனையால் பெரும்பொதியைத் தாங்கிக்
கழுத்தழுந்தச் சுற்றுதற்காம் வெள்ளிடைமன் றம்மே
எள்ளுகிற புலக்குறையும் உடற்குறையும் மூழ்கின்
ஏகிடச்செய் பொய்கையுடை இலஞ்சிமன் றம்மே
கொல்லுகிற நஞ்சாலும் பேயாலும் தளர்ந்தோர்
கும்பிட்டுச் சுற்றிவரின் குணம்நல்கத் தக்க
வெல்லும்நன் நெடுங்கல்லாம் மன்றம்காண் பீரே
விந்தை இவை போல்மற்றும் இருமன்றம் உண்டே. (9)

இரு மன்றங்கள் :

பொய்வேடம் பூண்டிடுவோர் ஒழுக்கமிலாப் பெண்டிர்
புறங்கூறிப் பொய்யுரைப்போர் பிறர்மனையை நாடும்
தெய்வத்துக்(கு) அஞ்சாதோர் தமைஅறைந்து கொல்லும்
திறல்பூதச் சதுக்கமெனும் மன்றமும்ஒன் றாமே
மெய்கூறும் அறத்தவைநன் னீதிபிழைத் தாலும்
மேன்மையுறும் ஆட்சியாளர் கோணினும்கண் ணீர்தான்
பெய்கின்ற பாவைமன்றம் மற்றொன்றும் காணீர்
பிறங்கும்இவ் வைந்தும்நம் பூம்புகாரில் அன்றோ? (10)

வனங்கள் நிறைந்த வளநகர் :

எழில்மிகுந்த வனங்கள்பல இந்நகரில் உண்டாகும்
ஏற்றமுடை அரசனொடு சுற்றமுந்தங் குதற்குப்
பொழிலென்ன இலவந்தி கைச்சோலை காணும்
புண்ணியத்துத் தேவர்உறை உய்யானம் காணும்
விழியீர்க்கும் சம்பாதி கவேரவனம் மற்றும்
வியப்புதரும் உவவனம்என் றோர்வனமும் காணும்
செழிப்போடு விளங்கியஇவ் வைந்துபெரும் வனங்கள்
சேர்ந்திருக்கப் பெற்றதுவும் பூம்புகாரே யாகும். (11

பலமதக் கோயில் கொண்ட சமரசப் புகார் :

பக்திமிகு நன்மக்கள் வாழ்ந்ததனல் இங்குப்
பலராமர் சிவபெருமான் மாசாத்தான் கோயில்
சக்திமிகு சூரியனும் முருகன்திரு மாலும்
சந்திரனும் இந்திரனும் தங்குமெழிற் கோயில்
முக்திபெற விரும்புகிற பௌத்தவிகா ரங்கள்
முறைமையுடைச் சமணர்பள்ளி முதலியவாம் கோயில்
ஒக்க நிறைந்திருக்கின்ற சமரசநன் னகரம்
உலகினிலே புகாரன்றிப் பிறிதொன்றும் உண்டோ? (12)

கொடி கட்டி ஆண்ட புகார் :

திருவிழவின் நலங்குறிக்கும் சிறப்புமிகும் கொடிகள்
சீருடைய பட்டிமன்றத் திறம்புகலும் கொடிகள்
திருச்சபைகள் இருப்பதனைத் தெரிவிக்கும் கொடிகள்
தேர்க்கொடிகள் கப்பல்உறை செழுங்கொடிகள் மற்றும்
தெருக்களிலே பலபண்டம் விற்பனைசெய் மக்கள்
தெரிவிக்கும் வெவ்வேறும் சீர்வணிகக் கொடிகள்
அருக்கனது கதிர்மறைப்ப நிறைந்திருந்த தென்றால்
அழகுபுகார் கொடிகட்டி ஆண்டதெனல் பொய்யோ? (13)

புகார் வணிகர் :

செம்பொன்னும் பவளமொடு நன்மணியும் முத்தும்
சிறப்பான மிளகோடு மணப்பொடிகள் பலவும்
தெம்பூட்டும் ஆடைகளும் கூலவகை மற்ற
தேசத்துப் பொருள்களும்அத் தெருக்களிலே விற்கும்
தம்பொருளும் பிறர்பொருளும் வெவ்வேறாய் எண்ணார்
தாம்கொளினும் மிகைகொள்ளார் கொடுப்பதிலும் குறையார். (14)
நம்பிக்கைக் குரியவராய் நியாயவிலை விற்கும்
நல்வணிகர் வாழ்ந்ததுவும் பூம்புகாரில் தானே

புகாரில்லாப் புகாரின் உழவர் :

வெவ்வேறு மொழிபேசும் வெளிநாட்டார் பல்லோர்
விதம்பலவாம் மதத்தவர்கள் இந்நகரில் ஒன்றாய்ச்
செவ்வியுடன் வாழ்ந்திருந்தார் என்றாலும் அம்மா!
சிறுமைதரும் ஒருபுகாரும் புகாரினிலே இல்லை
எவ்வாதும் புரியாமல் எப்போதும் உழைத்தே
ஏற்றமுடன் விருந்தினரை ஓம்பியதோ டன்றி
ஒவ்வாத புலால்மறுத்துக் கால்நடைகள் காக்கும்
உயர்உழவர் வாழ்ந்ததுவும் பூம்புகாரில் தானே. (15)

புகார்ச் செல்வர் :

பக்திமிகும் செல்வந்தர் முக்திபெற வேண்டிப்
பல்லறக்கூழ்ச் சாலைகளில் இரவலர்கள் வந்து
நித்தியமும் உண்ணுதற்காம் சோறளிப்பர், அந்த
நிறைசோற்றுக் கஞ்சிஎலாம் வீதிகளில் ஓடும்
சத்தியமாய்ச் சொல்லிடுவீர் எங்கேனும் இந்த
தர்மத்தின் சிறப்பைப்போல் பார்த்ததுண்டோ நீவிர்?
இத்தகைய அறங்கள்பல இயற்றிடுவோர் வாழ்ந்த
எழில்நகராம் பூம்புகாரின் புகழ்என்றும் வாழ்க! (16)

இத்தகைய சிறப்புடனே அந்நாளில் ஓங்கி
இருந்திட்ட பூம்புகார்தான் இந்நாளில் நன்றே
வித்தகர்கள் அனைவருமே போற்றுகிற வண்ணம்
விளங்கிடவே செய்கின்றார் தமிழகத்தை ஆள்வோர்
நித்தியமாய் நிலைக்கின்ற இப்பணியை ஊக்கும்
நிகரில்லாக் கலைஞரது நல்லாட்சி வாழ்க!
எத்திசையும் போற்றிடவே இந்நகரை ஆக்கும்
எல்லோரும் நலம்பெற்றே எந்நாளும் வாழ்க! (17)

முருகப்ப- ராவுத்தர்

ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ.எல்.,

முன்னுரை :

''முருகப்ப ராவுத்தர்'' என்னும் தலைப்பு, மிக்க வியப்பையும் திகைப்பையும் பலருக்கு விளைவிக்கக் கூடும். ''முருகப்பன்'' என்பது இந்துக்களுக்குரிய பெயர். 'ராவுத்தர்' என்பது முசுலீம் மக்களைக் குறிக்கும் ஒரு பெயர். ஆதலின், இத்தலைப்பு வியப்பையும் திகைப்பையும் விளைவித்தல் இயல்பே. இங்ஙனம் ஒரு தலைப்பு அமையும்படி வழி வகுத்துத் தந்தவர், அருட்பெருங் கவிஞர் ஆகிய அருணகிரிநாதர் பெருமானேயாவர்.

இராவுத்தர் :

'இராவுத்தன்' என்பது தமிழிற் கலந்து வழங்கி வரும் ஓர் அராபியச் சொல். இதற்குக் குதிரை வீரன் (Cavalier) என்பது பொருள் : இது 'ரவா', 'துதா' என்னும் இரு சொற்களினின்று தோன்றியதாக அறிஞர்கள் கூறுவர். ரவா—அரசன்; துதா—செய்தியாளன். அரசனுக்கு அல்லது அரசனிடமிருந்து, செய்தி கொணரும் குதிரை வீரன் என்னும் பொருளில், பண்டை நாளில் இச்சொல் வழங்கி வந்தது. இச்சொல் நாளடைவில், அராபியநாட்டினின்று தமிழகத்திற்குக் குதிரைகள் கொணர்ந்து விற்கப் போந்த, இசுலாமியர் குலப் பெருமக்களைக் குறிப்பதாயிற்று.

குதிரை வீரன் என்னும் பொருளையுடைய ''இராவுத்தன்' என்னும் இச்சொல்லின் அமைப்பும் தோற்றமும் பொருளும் பற்றிய ஆராய்ச்சி எவ்வாறாயினும், இஃது இந்நாளில் இசுலாமிய குலத்துப் பெருமக்களையே குறிப்பதாக வழங்கி வருவதனை அனைவரும் அறிவர். முசுலீம்களில் பலர், தம்முடைய பெயரோடு இச்சொல்லைச் சேர்த்துத் தம்மை வழங்கிக் கொள்ளுகின்றனர். முசுலீம்களில் ஒரு வகை இனத்தார்க்குரிய சிறப்புப் பெயராகவே, இந்நாளில் இச்சொல் பெரிதும் கையாளப் பெற்று வருகின்றது.

அருணகிரிநாதர் :

ஆயினும் இவ்வினிய சொல்லை, முருகனுக்கு உரிய பெயர்களுள் ஒன்றாக, முருகன் அடியார்களுள் தலைசிறந்த ஒருவர் ஆகிய அருணகிரிநாதர், விதந்தெடுத்து வழங்கி மகிழ்கின்றார்.

''கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மறவேன்;
முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடு
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி ஆட
வெஞ்சூர்க் கொன்ற ராவுத்தனே.'' (1)

''படிக்கும் திருப்புகழ் போற்றுவன் ;
கூற்றுவன் பாசத்தினற்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல்!
என்பாய்; பெரும்பாம்பில் நின்று
நடிக்கும் பிரான் மருகா! கொடுஞ்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே.'' (2)

—கந்தர் அலங்காரம்.

எனவரும் பாடல்களில், அருணகிரிநாதர் முருகப் பெருமானை ''இராவுத்தன்'' என்று சிறந்தெடுத்துப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம்.

முசுலீம் மக்களைக் குறிக்கும் 'இராவுத்தன்' என்னும் சொல்லால், அருணகிரிநாதர் முருகப் பெருமானைக் குறிப்பிட்டுத் துதித்துப்பாடியிருப்பது, நாம் பெரிதும் சிந்திப்பதற்கு உரியது. இஃது அவர்தம் கால நிலையினையும், அவரது சிறந்த சமரச மனப்பான்மையினையும் இனிது விளக்குவதாகும்.

சபாசு, சலாம் :

திருப்புகழ் என்னும் தெய்வ நலஞ்சான்ற சிறந்த இனிய பாடல்களைப் பாடியருளிய அருணகிரிநாதப் பெருமான், பிரபுடதேவ மாராயர் (கி.பி. 1427—1449) என்னும் விசயநகரச் சிற்றரசரின் காலத்தில் வாழ்ந்தவராகத் தெரிகின்றது. ஆதலின், அவர்தம் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டாகும். முசுலீம் மக்கள் தென்னகத்திற் பரவிப் பெருகி வாழ்ந்து வரத் தலைப்பட்டு, ஆங்காங்கே ஆட்சி செய்தும் வந்த காலம் அது! எனவே, அக்காலத்தில் இசுலாமியச் சொற்கள் பல, தமிழ் நாட்டு மக்களின் பேச்சு வழக்கிற் பரவிக் கலப்பனவாயிற்று. ''கடிசொல் இல்லை காலத்துப் படினே'' என்னும் தொல்காப்பிய நூற்பாவினைத் தழுவி, ஒரோவழி சபாசு (Shah Abbas), சலாம் (Salaam) என்பன போன்ற சில சொற்கள், தமிழ்க் கவிதைகளிலும் இடம் பெறலாயின.

''கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுற
சித்தர் விஞ்சையர் மாகதர் சபாசுஎனக்
கட்ட வெங்கொடு சூர்கிளை
வேர்அற விடும்வேலா.''

—திருநள்ளாற்றுத் திருப்புகழ் (1)

''சுராதி பதிமால் அயனெடு சலாம் இடு
சுவாமி மலை வாழும் பெருமாளே.''

—திருவேரகத் திருப்புகழ் (2)

என அருணகிரிநாதர் தாமே, தமது திருப்புகழ்ப் பாடல்களில் சபாசு, சலாம் என்னும் அயல்மொழிச் சொற்களை, வழங்கியிருத்தல் காணலாம்.

அருணகிரிநாதரின் அருள் உள்ளம் :

அருணகிரிநாதர், பரந்து விரிந்த சிறந்த உள்ளம் உடையவர் ; நல்ல சமரச மனப்பான்மை வாய்ந்தவர் ; எங்கிருந்தாலும் நல்லோரையும் நல்லனவற்றையும் இகழாது தழுவி ஏற்று மகிழும் இயல்புடையவர் ; மொழி சமயம் இனம் முதலியன பற்றிய குறுகிய நோக்கங்கள் இல்லாதவர். மக்களிடையே அன்பையும் ஒற்றுமையையும் பண்பாட்டையும் வளர்க்கும் குறிக்கோள் கொண்டவர். அவர்தம் திருப்புகழ்ப் பாடல்களில், செந்தமிழ் நலம் சிதையாமல், ஏற்றபெற்றி வடமொழியும் கலந்து, சந்தநலம் செறிந்து சிறந்தினிது நிற்கும்; சைவ வைணவ சமரச நோக்கும் போக்கும், அருணகிரிநாதரால் பெரிதும் போற்றப் பெற்றன : ''காசுக்குக் கம்பன், கருணைக்கு அருணகிரி'' என்பது பழமொழி. இறையருளில் திளைத்து இன்புற்ற அருணகிரிநாதரின் அருள் உள்ளத்தில், இன-மத வேறுபாடு முதலிய குறுகிய நோக்கங்கள் இடம் பெற்றில. அதனால், அவர் தமது வழிபடு கடவுளும் தமிழ்த் தெய்வமும் ஆகிய முருகனையே 'இராவுத்தன்' எனக் கூறி மகிழ்ந்து புகழ்ந்து போற்றுகின்றார்!

இஃது, அருணகிரிநாதர் பெருமான், 'காலநிலை தழுவியொழுகிய கவிஞர்பிரான்' என்பதனையுணர்த்தும் இனிய சான்று ஆகும். ஒரு சிறந்த கவிஞன் காலத்தால் படைக்கப்படுகின்றான்; காலத்தைப் படைக்கின்றான் ("A great poet is the creator and creature of his age." -W. H. Hudson) என்னும் உண்மை, இவ்வாற்றாற் புலனாதல் காணலாம்.

தமிழகத்தின் சமரச ஞானம் :

நம் தமிழகம், தொன்றுதொட்டே சமரச ஞான நன்னெறியைத் தழுவி ஒழுகிவரும் பெருஞ்சிறப்புடையது. திருவள்ளுவர் எல்லாச் சமயங்களும் ஏற்கும் வண்ணம், பொதுமறையாகத் தமது திருக்குறளை இயற்றியருளினார். இளங்கோ அடிகள், சிவபிரான்—திருமால்—கொற்றவை—முருகன்—அருகன் முதலிய பல சமயக் கடவுளரையும் வேறுபாடு இன்றி, ஆங்காங்கு ஏற்ற பெற்றி போற்றிப் புகழ்ந்து பாடிச் சென்றார். தாயுமானவர், வேதாந்த சித்தாந்த சமரச ஞான நெறியைப் பரப்பி அருளினார். இராமலிங்க அடிகளார், சத்திய ஞான சமரச சன்மார்க்க சங்கம் கண்டு, சமயம் கடந்த மோன சமரச நெறியினையே வலியுறுத்தி வளர்த்தார். அருளாளர்களின் நெறியனைத்தும் ஒன்றேயாகும் அன்றோ?

''இராவுத்தன்'' என்னும் சொல்லை, வீரன் என்னும் பொருளில் முருகனைக் குறிக்க அருணகிரிநாதர் வழங்கியிருப்பதும், இத்தகைய சமரச ஞான நன்னெறியின் பயனாய், இந்து முசுலீம் ஒற்றுமையை வளர்க்க விரும்பிய அவர் தம் திருவுள்ளச் சிறப்பினையே விளக்குவதாகும் எனலாம்.

முருகனின் தலங்கள் :

மேலும், முருகனுக்கும், முசுலீம் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதனைப் பழநி, கதிர்காமம் முதலிய இடங்களில் இன்றும் காணலாம். பழநியில் உள்ள முருகனை முசுலீம் பெருமக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர். இலங்கையில் இருக்கும் கதிர்காமம் என்னும் தலத்தில் உள்ள முருகனை, இந்துக்கள் மட்டுமே யன்றி, இசுலாமியரும் பௌத்தரும் கிறித்தவர்களும் கூட, மிக்க பக்தியுடன் திரளாக வந்து வழிபட்டுச் செல்கின்றனர். திருப்பரங்குன்றம் மலைமேல், முசுலீம்கோயில் ஒன்று, இன்றும் உள்ளது. திருத்தணிகையில் முருகன் கோயில் வாயிலின் தென்புறம் ''பிரசன்ன காதர் ஈசுவரர்'' சந்நிதி என ஒன்றுள்ளது. காதர் என்ற நவாபு ஒருவர், தனக்கு நேர்ந்த ஒரு பெரும் இடர்ப்பாடு தீரப் பெற்றதனால், இங்கு ஓர் இலிங்கத்தை நிறுவி வழிபட்டு, வாத்திய மண்டபத்தையும் கட்டி வைத்ததாகப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

சுவைமிகு செய்திகள் :

மற்றும், இங்கு ஒரு வகையில் இயைபுடைமை பற்றி, இந்து முசுலீம்ஒற்றுமை குறித்த சில சுவைமிகு செய்திகளும், அறிந்து கொண்டு இன்புறத் தக்கன. நாகூர் முதலிய பல இடங்களில், இந்துக்கள் எத்தகைய வேறுபாடும் கருதாமல் முசுலீம் தர்க்காக்களில் அன்புடன் வழிபாடு செய்தலைக் காண்கின்றோம். குணங்குடி மஸ்தான், கபீர் தாசர் முதலிய இசுலாமியப் பெருமக்களை, இந்துக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வருகின்றனர். மைசூரை ஆண்ட ஐதர் அலி, திப்பு சுல்தான் என்னும் மன்னர்கள் இருவரும், தாம் இசுலாமியராக இருந்தும் கூட, இந்து மதத்தில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர் எனவும், இந்துக் கடவுளருக்கு நன்கொடைகள் பல அளித்தனர் எனவும் தெரிகின்றது. நஞ்சன்கூடு என்னும் இடத்தில் உள்ள நஞ்சுண்டேசுவரர் கோயிலில் விளங்கும் சிவலிங்கத்தை, ஐதர் அலியே வழங்கினார். ஆதலால், அதற்கு ஐதர்லிங்கம் என்று ஒரு பெயரும் உண்டாம். மராத்தியப் படைகள் கொள்ளையிட முயன்றபோது, சிருங்கேரி மடத்திற்குத் திப்பு சுல்தான் தக்க பாதுகாப்புகளும் நன்கொடைகளும் பெரிதும் வழங்கினராம்.

மாணிக்க வாசகர் பொருட்டுச் சிவபெருமான் குதிரை கொணர்ந்தபோது, அரேபிய முசுலீமின் வடிவத்திலேயே வந்ததாகக் கொண்டு, ஆவணி மூலநாள் விழாவில் குதிரை கொணர்ந்து நிறுத்துவதற்காக மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் கோயிலில், இன்றும் ஒரு முசுலீம் அன்பரே இருந்து பணியாற்றி வருகின்ருராம். திருவரங்கம், திருநாராயணபுரம் என்னும் புகழ்மிக்க வைணவத் தலங்களில், பெருமாளின் காதலியாகத் துலுக்க நாச்சியார் என ஒரு திருவுருவம் இருப்பதும், அதற்கு ரொட்டியும் வெண்ணெயுமே நிவேதனம் செய்யப்படுவதும், நாம் இங்கு அறிந்து மகிழ்தற்குரியன.

இனி, வேறெரு முதன்மையான செய்தியும், இங்கு நாம் குறிப்பிடுவதற்கு உரியது. இந்து மதத்திற்குரிய பிரமாண நூல்களுள் உபநிடதங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளன என்பதை அனைவரும் அறிவர். 'பிரஸ்தானத் திரயம்' என்னும் நூல்களுள், உபநிடதங்களும் ஏற்றுத் தழுவிக் கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்து மதத்திற்குரிய உபநிடதங்களின் உயர்வும் சிறப்பும் அறிந்து போற்றி, அவற்றை உலகிற் பரப்பிய பெருமை, ஒரு முசுலீமுக்கே உரியதாகும். நம்முடைய நாட்டில் அரசு புரிந்த மொகலாய அரசர்களுள் ஒருவரான ஷாஜகான் என்பவரின் மூத்த புதல்வனும், அவுரங்கசீப் மன்னரின் அண்ணனுமான தாரா ஷுகோ என்னும் புகழ் பெற்ற சிறந்த பேரறிஞர், கி.பி. 1657-ஆம் ஆண்டில் பல புலவர்களின் உதவியைக் கொண்டு, ஐம்பது முதன்மையான உபநிடதங்களைப் பாரசீகத்தில் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பினைக் கொண்டே ஐரோப்பிய அறிஞர்கள் கி.பி. 1801-ஆம் ஆண்டில் இலத்தீன் மொழியில் முதன் முதலில் உபநிடதங்களை மொழி பெயர்த்தார்கள். அதற்குப் பிறகுதான், மேலை நாட்டில் இந்திய நாட்டு உபநிடதங்களின் பெருமைபரவலாயிற்று. இந்தியத் தத்துவ ஞான நூல்களாகிய உபநிடதங்களின் சிறப்பு, இங்ஙனம் ஒரு முசுலீம் மன்னவ குமாரனுல் உலகத்திற் பரவி வளரத் தலைப்பட்டதென்பது, ஒரு வகையில் வியப்பிற்குரிய செய்தியே யன்ருே!

முடிவுரை :

இத்தகைய சமய சமரச ஞானநல்லுணர்வு உலகமெங்கும் தழைத்து வளர்ந்தோங்கிப் பரவவும், மக்கட் குலமனைத்தும் ஒரு குலமாய்த் தக்காங்கு உவந்து இனிது ஒன்றி வாழவும், ''மயிலேறும் இராவுத்தன்'' ஆகிய முருகனின் மலர் அடிகளை வாழ்த்தி வணங்குவோமாக!

காலஞ் சென்ற சைவப் பெருஞ்சான்ருேர், தணிகை மணி இராவ் பகதூர் திரு. வ.சு. செங்கல்வராய பிள்ளை, M.A.,D.Litt. அவர்கள், ''எக்காலும் மக்காத சூர்க்கொத்து அரிந்த சினவேல் தச்சா! மயில் சேவல் ஆக்கிப் பிளந்த சித்தா! குறப்பாவை தாட்குட் படிந்து அமர்ந்த பெருமாளே'' என வரும் ஆண்டார் குப்பம் திருப்புகழ் வரிகளின் பொருளை விளக்கும் முறையில், ''முருகப்ப ஆசாரி'' என்னும் தலைப்பில், தாம் ஒரு கட்டுரை எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை ஒட்டி, இலங்கை யாழ்ப்பாணம் இந்து இளைஞர் மன்றத்தினர், நவம்பர் 14-15-16 தேதிகளில் கொண்டாடிய ''அருணகிரிநாதர் 600 ஆம் ஆண்டு'' விழாச் சிறப்பின் பொருட்டு, எழுதப்பெற்ற ''முருகப்ப ராவுத்தர்'' என்னும் இக்கட்டுரை, இங்கு வெளியிடப்படுகின்றது.
—ஆசிரியர்.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

நமது ''திருக்கோயில்'' பத்திரிகையின், டிசம்பர் மாத இதழாக வெளிவரும் இதன்கண், கடைசி பக்கத்தில்,

சந்தாதாரர் விவரக் கேட்புத்தாள் (Coupon)

ஒன்று அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

அதனைத் தனியே வெட்டி எடுத்து, அதன்கண் கேட்கப்பட்டுள்ள விவரங்களை நிறைவு செய்து, அதன் பின்புறம் உள்ள ஆணையரின் அலுவலக முகவரிக்கு, நூல் அஞ்சலில் (Book-Post), 20 காசு அஞ்சல் தலை ஒட்டி, இவ்விதழ் கிடைத்த ஒரு வாரத்திற்குள் தவருமல் அனுப்பிவைக்குமாறு, சந்தாதாரர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

புதிதாகச் சந்தாதாரர்கள் பட்டியல் தொகுத்துச் சரிபார்த்து அச்சிடுவதற்கும், இதழ்கள் சந்தாதாரர்களுக்குத் தவருமல் விரைவில் கிடைக்கச் செய்வதற்காக முழு முகவரிகளைத் தொகுப்பதற்கும், இவ்விவரப்பட்டியல் பெரிதும் தேவைப்படுகின்றது. ஆதலின், அன்பு கூர்ந்து சந்தாதாரர்கள் அனைவரும், உடனே இதனை நிறைவு செய்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். —ஆசிரியர்.

வார்த்திகன் கதை

ம.அ.முருகேசன்

சிலப்பதிகாரக் கதை நம்மில் பலருக்கும் தெரிந்ததே. அதில் வரும் ஒரு சிறிய கதை.

ஒரு புருவுக்காகத் தன் உடலையே நிறுத்துக் கொடுத்த சிபி என்ற மன்னன் இருந்து ஆட்சி புரிந்த ஊர் புகார். அது பூம்புகார் என்றும் காவிரிப் பூம்பட்டினம் என்றும் அழைக்கப்படும். அங்குதான் ஒரு பசுவின் மீது தேரை ஓட்டிக் கொன்றதற்காக, தன்னுடைய அருமந்த மகனையும் அதே இடத்தில் கிடத்தி அவன் மார்பு மீது தேரை ஓட்டிப் பசுவுக்கும் நீதி செலுத்திய மனுநீதிச் சோழனும் ஆட்சி புரிந்தான். காவிரி பாய்ந்து வளம் பெருக்கும் பெரிய வயல்களையுடைய சோழ நாட்டின் தலைநகரம் அது. அந்நகரிலே, கல்வி கேள்விகளில் வல்ல பராசரன் என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு அந்தணன், இரு பிறப்பாளன்—பார்ப்பான்.

அந்நாளிலே, வடநாட்டிலே குருகுல மன்னர்களுக்கிடையே ஏற்பட்ட பாரதப் போரின்போது பொதுவில் நின்று, போர் முடியும் வரை, இரு தரப்பாருக்கும் உணவு வழங்கிப் ''பெருஞ்சோற்று உதியன்'' என்று புகழ் பெற்ற சேரலாதன் சேர நாட்டை ஆண்டு வந்தான். அவன் மீது பாலை பாடிய கௌதமன் என்ற பார்ப்பனப் புலவர், பதிற்றுப்பத்தின் மூன்றும் பத்தாகிய பத்துப் பாடல்களைப் பாடினார். தமிழறிந்த சேரன் அப்புலவரைப் பாராட்டி, அவருக்குப் பரிசில் தர எண்ணி, அவர் விரும்பிய பரிசு என்ன என்று கேட்டான். அதற்குக் கௌதமர் ''நானும் என் மனைவி பார்ப்பனியும் வானுலகம் சென்று வசிக்க வகை செய்து தர வேண்டும், அதுவே நான் விரும்பும் பரிசில்'' என்றார். சேரனும் அதற்கு உடன்பட்டு, முதிய பார்ப்பன மறைவல்லாரைக் கேட்டு, அவர்கள் கூறியபடி பத்து வேள்விகளைச் செய்து கௌதமரின் விருப்பத்தை நிறைவேற்றினான்.

இதையெல்லாம் கேட்டறிந்த புகார் நகரத்துப் பராசரனுக்கு அச் சேரனைக் காண வேண்டும் என்ற ஆசை எழுந்தது. புகாரை விட்டுக் காடும் மலையும், ஊரும் கடந்து சேர நாட்டுக்கு வந்து சேரனைக் கண்டான். சேரன் அவையிலுள்ள பார்ப்பனர்கள் தாங்கள் செய்யும் அறு வகைத் தொழில்களையும் அவைகளின் முறைகளையும் பராசரனுக்கு விரித்துரைத்தனர். தன்னுடைய நாவன்மையால் அவர்களையெல்லாம் பராசரன் வென்றான். அதைப் பாராட்டி, அவனுக்குப் பொன்னும் மணியும் பொருளும் பரிசாகச் சேரலாதன் அளித்தான்.

பரிசில்களைப் பெற்றுக் கொண்டு சோழ நாட்டுக்குத் திரும்பிய பராசரன், வழியில் பாண்டிய நாட்டிலுள்ள தங்கால் என்ற ஊருக்குவந்து சேர்ந்தான். அந்த ஊரில் திருந்திய தொழிலை உடைய பார்ப்பனர் பலர் வாழ்ந்தனர். எனவே அவ்வூருக்குத் திருத்தங்கால் என்று பெயர் (இன்று அவ்வூர் முகவை மாவட்டத்தில் திருத்தங்கல் என்ற பெயருடன் விளங்குகிறது). அவ்வூரில் வார்த்திகன் என்ற புகழ் படைத்த பார்ப்பனன் ஒருவன் வாழ்ந்தான். அவன் மனைவி பெயர் கார்த்திகை. அவர்களுக்குத் தட்சிணாமூர்த்தி என்ற ஒரு புதல்வனிருந்தான். அந்த ஊர் நடுவே ஒரு பெரிய அரசமரம் நன்கு தழைத்துநிழல் பரப்பிக் கொண்டு நின்றது. அம்மரத்தின் நிழலில் பராசரன் தன்னுடைய கமண்டலம், தண்டம், பாதக் குறடு, குடை, பரிசில் மூட்டை முதலியவற்றை வைத்து இளைப்பாறினான். தனக்குப் பரிசில் கொடுத்த சேர மன்னனுடைய புகழைப் பாடினான்.

அம்மர நிழலில், சுருண்ட குழல்களையும், நீண்ட குடுமிகளையும், மழலை மொழிகளையும் உடைய பார்ப்பனச் சிறுமிகளும் சிறுவர்களும் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடன் வார்த்திகன் புதல்வன் தட்சிணாமூர்த்தி இருந்தான். அவர்களைப் பார்த்துத் தன்னுடன் சேர்ந்து தான் சொல்லுமாறு மறைகளை ஓதுவீர்களா என்று பராசரன் கேட்டான். அப்படி அவனுடன் ஓதுபவருக்குத் தான் கொண்டு வந்திருந்த பரிசில் மூட்டைகளையும் கொடுப்பதாகக் கூறினான். இதைக் கேட்ட தட்சிணாமூர்த்தி, பராசரனுடன் வேதம் ஓதுவதாக முன் வந்து அவனுடன் அவன் சொல்லிய படியே மறை ஓதினான். கேட்டு மகிழ்ந்த பராசரன் தான் பெற்று வந்த பரிசில்களைத் தட்சிணாமூர்த்திக்குக் கொடுத்து அவனை வாழ்த்தி விட்டு, தன் நாட்டுக்குப் போனான். வார்த்திகனும் அவன் மனைவியும் பரிசிற் பொருள்களைக் கண்டு மகிழ்ந்து அதிலுள்ள அணிகலன்களைத் தட்சிணாமூர்த்திக்குப் பூட்டி அழகு பார்த்து மகிழ்ந்தனர்.

அந் நாளில், பாண்டிய நாட்டை நெடுஞ்செழியன் ஆண்டு வந்தான். அவன் நீதி நெறி தவறாதவன், வீரத்தில் சிறந்தவன். அவனுடைய காவலர்கள் வார்த்திகன் மகன் அணிகலன்கள் பூண்டு திரிவதைப் பார்த்தார்கள். அவர்களில் இளையவர்களாகிய சிலர் வார்த்திகன் மீது பொறாமை கொண்டு சட்டத்துக்கு முரணாகப் புதையற் பொருளைக் கவர்ந்து கொண்ட பார்ப்பனன் இவன் (''கோமுறையன்றிப் படு

பொருள் வவ்விய பார்ப்பான் இவன்'') எனக் குற்றஞ் சாட்டி அதற்குரிய சிறையில் அடைத் தனர்.

வார்த்திகன் மனைவி கார்த்திகை, பொங்கி எழுந்து, அரற்றி, பாண்டியனுடைய நீதி முறையை வெறுத்துப் பேசினுள். அப்பத்தினிக் குற்ற துயரத்தைக் கண்டு மதுரையிலுள்ள கொற்றவை கோவிலின் கதவுகள் திறக்கப் படாதபடி தாமாகவே மூடிக்கொண்டன. அது கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் கொற்ற வைக்குற்ற குறையை ஆராயக் கட்டளையிட் டான். ஒற்றர் வார்த்திகன் சிறையிலடைக்கப் பட்டதை அறிந்து வார்த்திகனைச் சிறையிலிருந்து அழைத்து வந்து அரசன் முன் நிறுத்தினர். வார்த்திகன் வாயிலாக உண்மையை அறிந்து நெடுஞ்செழியன் மனம் வருந்தி ''என்னுடைய பணியாளராலே நீதி தவறியது; அதைப் பொறுக்க வேண்டும்'' என்று வார்த்திகனைப் பணிந்தான். அத்துடன் அமையாது, வார்த்தி கனுக்குப் புகழுரைகள் பலவும் சொல்லி, சிறி யோர் செய்த சிறு பிழையைப் பெரியோராகிய வார்த்திகன் பொறுத்தருள வேண்டும் என்று வேண்டி, திருத்தங்கல், வயலூர் என்ற வளம் மிக்க ஊர்களை அவனுக்கு முற்றூட்டாக வழங்கி, வார்த்திகன் அவன் மனைவி கார்த்திகை ஆகிய இருவர் முன்பும் நிலத்தில் வீழ்ந்து பணிந்தான். அதன்பின் கூடல் மாநகர் எங்கும் கேட்குமாறு பேரொலியுடன் கொற் றவையின் கோயிற் கதவுகள் தாமே திறந்து கொண்டன. இந்தச் செய்தியை அறிந்தவுடன் நெடுஞ்செழியன் மனமகிழ்ந்து, சிறையில்அடை பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்யுமாறும், இறைப் பொருள் (வரி) எதுவும் வாங்க வேண் டாமென்றும், கொடையாகப் பெற்ற பொரு ளானுலும், புதையல் எடுத்த பொருளானுலும் பெற்றவர்களே அவைகளைத் தமது உடைமை களாக அடையலாம் என்றும் (''இடு பொருளா யினும் படு பொருளாயினும் பெற்றவர்க்கு உற்றவர்க்கு உறுதி ஆம் என'') முரசு அறை வித்துத் தன் செங்கோன் முறையை மாந்தர்க்கு அறிவித்தான். இது தான் இளங்கோவடிகள் கூறும் வார்த்திகன் கதை. இதைச் சற்று ஆராய்வோம்.

இந்தக் கதையிலிருந்து அந்நாளைய அரசர் களின் வீரமும் கொடையும், சமுதாயப் பழக்க வழக்கங்களும், அரசியலும், நீதியும், சட்டமும் நமக்குப் பெரிதும் விளங்குகிறது. வடநாட்டு அரசர்களாகிய கௌரவர்களுக்கும் பாண்டவர் களுக்கும் சேர அரசன் பொது நிலையில் நின்று இருதிறத்தினருக்கும் உணவு அளித்தான் என்ப தும், ''பாலை பாடிய கௌதமனுக்கும்'' அவன் மனைவிக்கும் வேள்விகள் செய்து வானுலக வாழ்க்கையை அளித்தான் என்பதும் விளங்கு கிறது. இந்நிகழ்ச்சிகள் சேரனின் கொடைத் திறத்தையும் அவன் தமிழின்பால் கொண்டு இருந்த பற்றையும் காட்டுகின்றது. அதன்றி யும், பார்ப்பனர் கல்வி கேள்விகளிலும், மறை ஓதுவதிலும் வல்லவர்களாகவும், வேள்வி செய் பவர்களாகவும் இருந்தனர் என்று தெரிகிறது. வேள்விகள் செய்து வானுலக வாழ்க்கையைப் பெறலாம் என்று, அரசனும் மற்றையோரும் நம்பினதாகவும் தெரிகிறது. மேலும், அரசர் கள் நீதி செலுத்துவதில் மிக்க கருத்துடையவர் களாக இருந்து நீதி தவறிய இடத்து நீதியை நிலை நாட்டத் தாங்கள் எதுவும் செய்யத் தயங்கவில்லை என்பதும் புலனாகிறது.

அன்றியும், தன் பணியாட்களால் நேரும் தவறுகட்கும் அரசர்கள் பொறுப்பேற்று, அத் தவறுகளைத் திருத்தி, தவறுகளுக்குக் கழுவாய் தேடினர் என்பதும் விளங்குகிறது. இங்கு,

''மாநிலங்காவலனுவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக்கிடையூறு தன்னுல் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ''

என்ற சேக்கிழார் வாக்கு நினைவுக்கு வருகிறது. தன்னாலோ, தன்னுடைய ஆட்களாலோ, கள் வர்களாலோ, பகைவர்களாலோ, விலங்குக ளாலோ ஏற்படும் அழிவுகளை அரசன் நீக்க வேண்டும் என்பது சேக்கிழார் சொல்லும் அரச நீதி. இதுவே பண்டைத் தமிழ் அரசர்களின் நீதி முறையாக இருந்தது என்பதையும் இந்த வார்த்திகன் கதை காட்டுகிறது.

வார்த்திகன் கதை இன்னொரு சட்டத்தை யும் சொல்லுகிறது. வார்த்திகனைச் சிறையில் இட்ட அரசனது காவலர்கள் அவன் மீது ''கோமுறை அன்றிப் படு பொருள் வவ்விய பார்ப்பான் இவன்'' என்று குற்றம் சாட்டினர். படுபொருள் என்பது புதையல். அரசு விதி களுக்குப் புறம்பாக ,வார்த்திகன் புதையல் பொருள்களை எடுத்துக் கொண்டான் என்பது அவன் மீது சுமத்தப்பட்ட குற்றம். எனவே, புதையல் பொருள்களை எடுப்போர் அரசுக்கு அதை அறிவிக்க வேண்டும் என்ற சட்டம் இருந்ததாக ஏற்படுகிறது. புதையல் பொருளை அரசுக்கு அறிவித்து அதைச் சட்ட விதிகளுக்கு உட்பட்டுத்தான் அடைய வேண்டும் என்பது சட்டமாக இருந்தால்தான், அதை மீறியதாக வார்த்திகன் மீது குற்றம் சுமத்த முடியும். அப்படி வார்த்திகன் மீது குற்றம் சுமத்தப்பட் டதால், அவ்வாறு ஒரு சட்டம் இருந்திருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. இது இன்றைய புதையல் பொருள்களுக்கான சட்டத்தை (Treasure Trove Act) நினைவுபடுத்துகிறது. எனவே, இன்றைய (Treasure Trove Act) போல அன்றும் ஒரு சட்டம் இருந்திருக்கிறது என்று ஏற்படுகிறது. மேலும், வார்த்திகனுக்குச் செய்த அநீதிக்குக் கழுவாய் தேடிய பாண்டியன் நெடுஞ்செழியன் ''இடு பொருளாயினும், படு பொருளாயினும் பெற்றவர்க்கு உற்றவர்க்கு உறுதி ஆம் என'' முரசறைவித்தான் என்று இளங்கோவடிகள் சொல்லுகிருர். இதன் பொருள், கொடையாகப் பெற்ற பொருள்கள் அப்படிப் பெற்றவருக்கும், புதையல் எடுத்த பொருள் எடுத்தவருக்கும் உரிமையானது என்பது. அப்படி உரிமையாக்கினதாலே, இதற்கு முன் அப்படிப்பட்ட உரிமை இல்லை என்ருகிறது. இதுவும், புதையல் பொருள்களில் அரசுக்கு உரிமை உண்டு என்ற புதையல் சட்டம் (Treasure Trove Act) இருந்திருக்கிறது என் பதை வலியுறுத்துகிறது. அதல்லாமலும் ''கொடைப் பொருள்கள் பெற்றவர்களுக்கே சொந்தம்'' என்று அறிவித்ததிலிருந்து, கொடைப் பொருள்கள் பற்றியும் இன்றைய (Gift-Tax) போல ஒரு சட்டம் இருந்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது. ▽▽

முருகன் பெருமை

திரு. நா. ஆறுமுகம், M.A.,

மனித வரலாறு மூன்று நாகரிக நிலைகளைக் கடந்து வந்துள்ளது என்று அறிஞர்கள் கூறுவர். அவைகள் முதுமை நாகரிகம், காளை நாகரிகம், குழந்தை நாகரிகம் என்பன ஆகும். முதுமை நாகரிகத்தில் மனிதன் விலங்கு வாழ்க்கை வாழ்ந்தான்; காளை நாகரிகத்தில் அரக்க வாழ்வு —இரணியன், இராவணன், சூரபன்மன் — வாழ்ந்தான். இன்றைய குழந்தை நாகரிகத்தில் அன்பு வாழ்க்கை வாழ்கிறான்.

அன்பு வாழ்க்கையின் ஆனந்த வெளிப்பாடே முருகன் வழிபாடு! அன்புக்குக் கட்டுப்படும் முருகனின் எளிவந்த தன்மையை — எளிமையைத் — திருமுருகாற்றுப்படை விளக்குகிறது.

சிவனாற்றுப்படை, திருமாலாற்றுப்படை என்று நூல்கள் இல்லை. ஏன்? அவ்வளவு எளிமை முருகப் பெருமானுக்கு என்று கூறுவர். எளிமையே முருகன் பெருமை!

திருமுருகாற்றுப்படை என்பதற்கு முருகன் திருவருள் பெற்ற ஒருவர்; அவ்வருள் பெற விரும்பி நிற்பாரை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்தும் நூல் என்று பொருள் கொள்ளப்படுகிறது.

பொதுவாக ஆற்றுப்படை என்னும் துறையின் பொதுப் பெயர், ஆற்றுப்படுத்தப்படுவோரின் பெயராலேயே அமைந்து வழங்கும். சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை முதலிய நூல்களில் முறையே சிறுபாணன், பெரும்பாணன், பொருநர், கூத்தர் முதலியோர் ஆற்றுப்படுத்தப்படுகிறார்கள்.

ஆனால் திருமுருகாற்றுப்படை மட்டும் ஆற்றுப்படுத்தப்படுவோராகிய அன்பர் பெயரால் வழங்காமல் பாட்டின் தலைவராகிய முருகன் பெயரிலேயே அமைந்துள்ளது. ஏன்? அன்பர்களை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்துவதோடு, அன்பர்களிடத்தில் முருகனையும் ஆற்றுப்படுத்துகிறது இந்நூல். அன்பர்களைத் தேடி எதிர் நோக்கிச் செல்லும் எளிமையுடையவர் முருகன் என்பது கருத்து!

அன்பர்களை ஆற்றுப்படுத்துதல் :

முருகனுடைய அருள் பெற்ற ஒருவர், முருகனருள் பெற விரும்பும் மற்றவர்க்குக் கூறுவது போல நக்கீரர், எவ்வெவ்வாறு சென்றால் எங்கெங்கே முருகனைக் காணலாம் என்று கூறுகிறார். செவ்வேட் பெருமானின் சேவடி படரும் செம்மல் உள்ளமொடு சென்றால் திருப்பரங்குன்றிலும் முருகன் மனம் விரும்பி வீற்றிருக்கின்றான்.

அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதான்று

ஆறுமுகமும் பன்னிரு தோள்களும் பெற்று வள்ளியுடன் திருச்செந்தூரிலும் காட்சி தருகின்றான்.

உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைய பண்பே

முனிவரும் கந்தருவரும் முப்பெரும் கடவுளரும் தேவரும் சென்று வணங்கத் தெய்வயானையுடன் பழநி மலையிலும் தங்கியிருக்கின்றான்.

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன் குடி அசைதலும் உரியன்

ஆறெழுத்து மந்திரத்தைக் கூறி அந்தணர் வழிபாடு செய்யும் திருவேரகம் என்னும் ஊரிலும் உறைகிறான்.

விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிது வந்து
ஏரகத்து உறைதலும் உரியன்

குறிஞ்சி நில மக்கள் — வெறியாடும் வேலனும் கொலைத் தொழில் புரியும் வேடுவர் குலப் பெண்களும் — குரவைக் கூத்தாடும் மலைகள்தோறும் ஆடிக் கொண்டுள்ளான்.

மென்தோள் பல்பிணை, தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே

சீர்கெழு விழாவிலும், ஆர்வலர் போற்றத் தன் மனம் பொருந்துகின்ற இடத்திலும், வேலன் வெறியாடுமிடத்திலும், காடு சோலை ஆற்றிடைத்திட்டு, ஆறு, குளம் ஆகிய இடங்களிலும், முன் சொல்லப் பெறாத வேறு ஊர்களிலும், முச்சந்தி, நாற்சந்திகளிலும், கடப்ப மரத்திலும், மக்கள் கூடும் மன்றத்திலும், அம்பலத்திலும், மாடுகள் உராய்ந்து கொள்ளும் கல் தூணிலும் முருகன் தோன்றுகிறான்.

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே!

மலையின் உச்சியிலிருந்து இழுமென ஓசையுடன் விழும் அருவிகளையும், கனிகள் குலுங்கும் சோலைகளையும் உடைய பழமுதிர் சோலையிலும் முருகன் வாழ்கிறான்.

முருகனை ஆற்றுப்படுத்தல் :

குறிஞ்சி நிலத்தில் வாழும் குறமகள் அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடி, முழங்குகின்ற அருவியின் இசையுடன் இனிய இசைக் கருவிகளும் ஒலிக்கச் செந்நிறப் பூக்களைத் தூவி. இரத்தச் சிவப்பு கலந்த தினையினையும் பரப்பி, முருகனுக்கு விருப்பமான இசைக் கருவிகளை வாசித்து, இறையுண்மையில் மாறுபட்டோரும் அஞ்சும்படி, முருகனை வரும்படி வழிப்படுத்தின அகன்ற நகரில் வேண்டுநர் விரும்பியபடியே வரம் பெற்றவராகி வழிபாடு செய்ய அந்தந்த இடங்களிலும் முருகன் தங்குகிறான்.

''குறமகள்,

முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடி, பலவுடன்
....
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் உரியன்''

''முருகாற்றுப்படுத்த'' என்னும் உயிர்த் தொடர்—உயர் தொடர்—நூலுக்குப் பெயர் தந்த தொடர்—எளிய குறமகளின் வழிபாட்டுக்காக, அவள் வழிப்படுத்தின இடத்துக்கு அன்பை நாடி வரும் எளியன் முருகன் என்பதைச் சிறப்புற விளக்குகிறது.

அன்பர்களிடத்தில் அவர்கள் வழங்கும் அன்பைப் பெற்றுக் கொள்ள முருகனைக் குறமகள் ஆற்றுப்படுத்துகிறாள். குறமகள் கூறிய வழியில் வந்து அன்பர்களிருக்கும் இடத்தை அடைந்து அருள் செய்யும் எளியார்க்கு எளியனாகிய தன்மையையே நக்கீரர் கூறுகிறார்.

அருளும் முருகன் :

''உன்னை அளந்தறிதல் எம்மனோர்க்கு அருமையாகும்; உன்னடியை நினைத்து வந்தோம்; உனக்கு ஒப்பாரும் மிக்காரும் இலர்'' என்று கூறி முடிப்பதற்கு முன்னரே முருகன் வருவார். கண்டார் அஞ்சும் தெய்வத் தன்மையை அடக்கி வருவார் ; தெய்வ இள நலங் காட்டுவார். காட்டி, 'அஞ்சல் ஓம்புமதி, அறிவல் நின் வரவு; நீ விடுபெற நினைத்து வந்திருந்த நினைவை யான் முன்பே அறிவேன் ; உனக்கு அது கிடைக்கும்'' என்று அருளுவார்.

அரிய முயற்சியால் முருகனருளை உரிமையால் பெற முயல்வார்க்கு முயற்சியின் முடிவில் எளியனாய்த் தோன்றி அருள் பாலிக்கிறார்.

''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' ''ஏழையர்க்குச் செய்யும் தொண்டே இறைத் தொண்டு'' என்று உறுதி கொண்டு அன்போடு ஒழுகுவோர்க்கு அவரிருந்த இடத்தில் முருகனே வந்து எளியனாய்க் காட்சி அளிக்கிறார்.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்''

அன்பு நிறைந்த அடியார்கள் — தொண்டர்கள் — வாழ்கின்ற ஊருக்கே அவர்களைத் தேடிச் சென்று முருகன் அருளுவார் என்கிறார் அருணகிரியாரும். ''மாசில் அடியார்கள் வாழ்கின்ற ஊர்சென்று தேடி விளையாடி யங்ஙனே நின்று வாழ்கின்ற வீரனே செந்தில் வாழ்கின்ற பெருமாளே''. மேலும் அன்புக்காகத் தொண்டாற்றும் வீர சேவகன் என்றும் முருகன் போற்றப்படுகின்றார். ''மயிலேறிய சேவகனே ; செந்தில் மேவிய சேவகனே ; மலையொடு பொருத முழுச் சேவகனே (திருப்புகழ்); சம்பரனைப் பொரு சேவகன் வந்தான் (குமரகுருபரர்). இந்தச் சேவகனுக்குக் கூலி அன்பு ; அதையே யாசிக்கிறார் முருகன். நாம் கூப்பிட வருபவன் சேவகன். இந்தச் சேவகனுக்கு வழி சொல்லி ஆற்றுப்படுத்துகிறார் நக்கீரர்.

'கண்ணன் என் சேவகன்'—என்னும் பாரதியார் பாடலும் இங்கே நினைவுகூரத் தக்கது!

வேண்டும் வாம் :

'அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவு' என்னும் தொடரில், அஞ்சல் ஓம்பு மதி என்பது முருகனின் எளிமையையும், அறிவல் நின் வரவு என்பது அவருடைய அருமையையும் —பேராற்றலையும்— விளக்கி நிற்கும் அழகை நினைந்து மகிழலாம். இந்தத் தொடரின் மூலம் கோயிலுக்குச் செல்வோர் —இறையன்பர்— எவ்வாறு இறைவனை வணங்கித் துதிக்க வேண்டும் என்பதை நக்கீரர் விளக்குகிறார்.

இறைவனுக்கு முன்னால் நின்று கொண்டு நம் குறைகளைப் பட்டியல் போட்டுக் கூற வேண்டுவதில்லை. நமக்கிருக்கும் குறைகள் அவருக்குத் தெரியாவா? எங்கும் இருந்து எல்லாம் அறிந்து எல்லாம் இயக்கும் இறைவன் நம் குறை உணரமாட்டாரா? ஆகவே இறைவன் முன்னால் வணங்கி நின்று, ''உம்மை விரும்பி வந்தேன், உம் அருளே எனக்கு வேண்டும்'' என்று வாழ்த்தி, இறைவனருளையே வேண்ட வேண்டும். இது திருமுருகாற்றுப்படை கூறும் முருகன் பெருமையாகும்.

மந்திர யோகம்

திரு. த. வரதராச பிள்ளை, B.A.,

ஆசிரியர் திருமூலர் அட்டாங்க யோகம் கூறிப் பின் யோக வகைகளில் சிறப்பாகக் கேசரி யோகம், பரியங்க யோகம், சந்திர யோகம் ஆகியவை பற்றி விளக்கி மந்திர யோகம் கூறுகிறார். மந்திர செபமும்இறைவனை அடைவதற்குரிய சாதனமாகும். யோக சாதனையால் சாதகர் இறைவனை அகண்டமாகத் தியானித்துக் கண்டநிலை நீங்கி அகண்டமாய்த் திகழ்வர். மந்திர செபத்தால் புறத்தே உருவம் அமைத்து அங்கே இறைவன் எழுந்தருளியிருப்பதாகப் பாவித்து வழிபாடு செய்து தேவதா வடிவம் பெறுவர். உருவ வழிபாட்டில் ஆசிரியர் சதாசிவ மூர்த்தியின் வழிபாட்டைச் சிறப்பித்துப் பேசுவார். ஆலயங்களில் அமைக்கப் பட்டிருக்கும் இலிங்க வடிவம் சதா சிவமூர்த்தியின் வகையைச் சேர்ந்தது. இறைவன் அட்சர வடிவமாகச் சக்கரத்தில் எழுந்தருளியிருப்பதாக எண்ணி அங்கு வழிபடுவதும் புற வழிபாட்டைச் சேர்ந்த ஒன்றாகும். சக்கர வழிபாட்டில் திருவம்பலச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரி சக்கரம் முதலியவற்றைச் சிறப்பாக ஆசிரியர் கூறுகிறார். இலிங்க வழிபாட்டிலும் சக்கர வழிபாட்டிலும் ஆரம்ப நிலையில் மந்திரங்கள் சாதனமாக உள்ளன.

மந்திரம் என்றால் நினைப்பவனைக் காப்பது என்று பொருள். யோகம் என்றால் சேர்க்கை. மந்திர யோகம் என்றால் நினைப்பவனைக் காத்து இறைவனோடு சேர்ப்பது என்று பொருள். மந்திரங்களில் தலையாய மந்திரம் ஓம் என்ற பிரணவமாகும். மேலும் ஓம் என்பது எல்லா மந்திரங்களுக்கும் முதலில் சேர்த்து உச்சரிக்க வேண்டிய ஒன்றாகும். சாதி குல சமய வேறுபாடின்றி எல்லோரும் செபித்தற்குரியது என்று பதஞ்சலி யோக சூத்திரம் கூறுகிறது. "Word is God" (விவிலியம்).

ஓம் என்பது தாரக மந்திரமாகும். தாரகம் என்றால் தாண்டச் செய்வது என்று பொருள். கப்பலுக்குத் தாரகம் என்ற பெயர் உண்டு. எவ்வாறு கப்பலானது கடலைக் கடக்க உதவுகிறதோ அவ்வாறு உலகியலாகிய கடலைக் கடக்க இப்பிரணவம் உதவுகிறது.

ஓம் ஏகாட்சரமாகும். யாப்பிலக்கணத்தில் மெய்யெழுத்தைக் கணக்கிடுவதில்லையாதலின், ஓம் என்பது ஒரெழுத்தொரு மொழியாகும்.

ஓம் என்பதற்குப் பல பொருள்கள் உள்ளன. ப்ர : மிகவும், நவ : புதுமையானது. மிகவும் புதுமையானது.

ப்ர : மிகவும், நவ : புதுமையை விளைவிக்கக் கூடியது. இது செபம் செய்பவரின் அஞ்ஞானத்தை நீக்கிப் பரமானந்தத் தன்மையை அளிக்கக் கூடியது.

ப்ர : பிரபஞ்சம், ந : இல்லை, வ : உங்களுக்கு. இதைச் செபம் செய்யும் உங்களுக்குப் பந்தத்தைச் செய்யும் பிரபஞ்சம் இல்லை. இவ்வாறு பிரணவம் என்பதற்கு அநேகப் பொருள்கள் உள.

உலகிலுள்ள எல்லாச் சாத்திரங்கட்கும் மூலம் பிரணவம் என்பர். ஓம் என்பதிலிருந்தே எல்லா வேதங்களும் மந்திரங்களும் பிறந்தன. ஆதலால் இதனைச் செபித்தால் எல்லா மந்திரங்களையும் செபிப்பதால் உண்டாகும் பயனை அடையலாம். பிரம தேவர் ஓங்காரத்தைச் செபித்துப் பிரமப் பட்டம் பெற்றதாகக் காசி காண்டம் கூறும். இந்த ஓங்காரத்துக்குப் பொருள் சொல்லத் தெரியாததால் பிரமன் முருகப் பெருமானால் குட்டிச் சிறையிடப்பட்டான் என்று கந்த புராணம் கூறுகிறது. இந்தப் பிரணவத்தையேதான் முருகக் கடவுள் சுவாமிநாதனாகச் சிவபெருமானுக்கு உபதேசம் செய்தார். உலக சிருட்டிக்காகச் சிவன் கையிலுள்ள உடுக்கையும், விஷ்ணுவின் கையிலுள்ள பாஞ்சசன்னியமும், சதா பிரணவஒலியை எழுப்பிக் கொண்டிருக்கின்றன. இப்பிரணவத்தைச் சைவர்கள் சூட்சும பஞ்சாட்சரி என்றும், வைணவர்கள் சூட்சும அஷ்டாட்சரி என்றும் கூறுவர்.

ஓங்காரத்தின் உள் நிலைகளே ஐம்பூதங்களும், ஐம்பூத நாயகர்களும், சரம் அசரமாகிய எல்லாமுமாகும். ஆன்மாவின் நிலை ஓங்காரத்தின் உச்சியில் உள்ளது. அதனால் ஓங்காரம் சீவர்களுக்கும் மேலான ஆன்மாவாகிய பரத்துக்கும் சிவத்துக்கும் உருவை அளிப்பதாக உள்ளது.

"ஓங்காரத் துள்ளே உதித்தஐம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே உதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்றும் உற்றன
ஓங்கார சீவ பரசிவ ரூபமே."

—மந். 2677.

ஓம் என்பது அ உ ம என்ற மூன்று பாதங்களையுடையது. அஃது அகரமாகிய முதல் பாதத்தால் உலகமெல்லாம் பரவி அதுவதுவாய் விளங்கி இரண்டாவது பாதமாகிய உகரத்தால் உடம்பினுள் பொருந்திச் சிவசக்தியாய், மூன் ருவது பாதமாகிய மகரத்தால் தோன்றுகின்ற ஒளிப் பொருளைச் சீவர்கள் அறியாது மயக் கத்தைப் பொருத்தும்படி செய்தது. இதனைச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என்று கூறுவர். அஃதாவது விழிப்பு, கனவு, உறக்கநிலை என்பர்.

''ஓரெழு தாலே உலகெங்குந் தானுகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே.''

—மந். 885.

இனிப் பிரணவத்தை ஐந்தெழுத்தாகக் கூறுவர். அஃதாவது அ உ ம விந்து நாதம் என்பதாகும். அ உ ம என்பன தூல நிலை : விந்து நாதம் சூக்கும நிலை. அ உ ம என்ற தூல நிலையைக் கடந்து சீவன் விந்து நாதங்களை உணர்ந்த போது துரியம் துரியாதீத நிலைகளைப் பொருந்தும். (விந்து — ஒளி, நாதம் — ஒலி). இத்தகைய சூக்கும பிரணவமாகிய விந்து நாதங்களை அறிவினுல் அடைந்து சமாதி கூடலே, மனிதன் எடுத்த பிறவியின் பேறு என்று திருமந்திரம் பல இடங்களில் வற் புறுத்திச் சொல்லுகிறது.

திருவைந்து எழுத்து:

அடுத்து ஆசிரியர் பஞ்சாட்சரத்தை விரி வாக விளக்கி அதன் பயனைக் கூறுகிருர். பஞ் சாட்சரம் என்பது ஐந்தெழுத்தால் ஆகியது. வேத நெறியில் புறவழிபாட்டுக்குக் கூறிய ஐந்தெழுத்து நமசிவாய ஆகும். கிரியையில் நமசிவாய என்பதைத் தூல பஞ்சாட்சரம் என்பர். நகரம் பிருதிவியையும், மகரம் அப்பு வையும், சிகரம் தேயுவையும், வகரம் வாயுவை யும், யகரம் ஆகாயத்தையும் குறிப்பனவாகும். உடம்பில் சுவாதிட்டானம், மணிபூரகம், அநா கதம், விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆதாரங்கள் முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகா யம் ஆகிய ஐம்பூதங்களுக்குரிய இடங்களாகும். ஆகவே நமசிவாய என்பது உடம்பில் சுவாதிட் டானம் முதலாகிய இடங்களில் நிற்கும் நிலை யாகும். இதனை ஆசிரியர் நந்தியின் நாமம் என்பர்.

''நகாரம் முதலாக நந்திதன் நாமமே''

என்பது அவர் வாக்கு.

''காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓதவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும்மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.''

என்ற திருஞானசம்பந்தர் வாக்காலும் நமச் சிவாய என்பது, நாதன் நாமம் என்று புலனு கிறது.

இனி பஞ்சாட்சரம் என்பதைத் தூலம், சூக்குமம், அதிசூக்குமம், என மூவகையாக ஆசிரியர் திருமந்திரத்தில் விளக்குகிருர். தூல பஞ்சாட்சரம் அல்லது தூல ஐந்தெழுத்தாவது சிவாயநம ஆகும். சிவாயநம என மானசீகமாக செபிக்கின் சூக்கும அசைவுகள் ஆகாயத்தில் பொருந்தி மூலாதாரம் முதலாக நிற்கும் நம சிவாய என்ற தேவனைத் தேகத்தில் பொருந்து மாறு செய்துவிடும்.

அஃது எவ்வாறு பொருந்தும் என்பதை அடுத்துக் கூறுகிருர். சிவாயநம என்ற பஞ்சாட் சர செபத்தால் ஆகாயத்தில் உண்டாகும் உணர்வு அலைகள் படர்ந்து விரிவதில் அவை மேலும் கீழுமாகவும், வட்டம் வட்டமாகவும், வாய்க்குக் கீழான கண்டத்தையும், நெஞ்சத் தையும், நாபியையும், இலிங்கத்தையும் அடை கின்றன. கூர்மாசனம் முதலிய ஆசனத்தில் அமர்ந்திருப்பதால் அவை மேலும் விரிவடை யாமல் மூலாதாரம் சுருக்கப்பட்டு இலிங்கத்தின் வழியாக நேரே பிரமரந்திரத்தை (சிரசு உச் சியை) அடையும்.

''வாயொடு கண்டம் இதய மருவுந்தி
ஆய இலிங்க மவற்றின்மே லேயவ்வாய்த்
தூயதோர் துண்ட மிருமத் தகஞ்செல்லல்
ஆயதி ருமைந்தோ டாமெழுத் தஞ்சுமே.''

—மந். 2701.

இவ்வாறு மூலாதாரத்தை அடைந்து நேரே பிரமரந்திரத்துக்குச் சுழுமுனை வழியாகச் செல்லும் உணர்வுதான் வாசியாகும். இந்த அமைப்பில் நமசிவாய என்ற சோதி உருவம் நீண்டு உயர்ந்து எழும். இதுவே பஞ்சாட்சர தரிசனமாகும். இவ்விதமாக நமசிவாய உதிப் பில் ஆகாயமண்டலம் சிறப்புற்று விளங்கி விந்து நாதங்கள் பொருந்தும். மானிட உடலி லுள்ள ஐம்பது எழுத்துக்களும் ஐந்தெழுத்தாய், பிரணவமாய் மாறி விந்து நாதங்களை உண்டாக்கு வதில் சகல வேதாகம ஞானமும் அடங்கிவிடும். ஆகவே ஆசிரியன் சிவாயநம என்று ஒரு தரம் கூறுங்கள் என்று ஆணையிடுகிருர். அவ்வாறு கூறினுல் தெளிந்த அமுத மயமான ஒளி உண் டாகும். அவ்வாறு உண்டாகும் அமுதத்தைப் பருகாதவர் பிறவியில் பட்டுழல்வர்.

''தெள்ளமு தூறச் சிவாய நமவென்
றுள்ளமு தூற வொருகால் உரைத்திடும்
வெள்ளமு தூறல் விரும்பியுண் ணுதவர்
துள்ளிய நீர்போற் சுழல்கின்ற வாறே.''

—மந். 2704

அதனுல் பிறவியை நீக்குவதற்குரிய வழி ஐந்தெழுத்தாகும்.

''நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற் றேன்
தேனய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய் தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத் திடவே.''

—திருவாசகம்—திருவேசறவு—10.

என்ற மாணிக்கவாசகர் வாக்கை ஒப்புநோக்குக.

மேலும் மனம் தடுமாற்றத்தை அடையும் வண்ணம் தீவினையால் உண்டாகும் துயரம் வந்தபோது சீவனில் செறிந்துள்ள சிவத்தைப் பிரகாசிக்கச் செய்ய ஐந்தெழுத்தை ஓத வேண்டும்; சிவாயநம என ஓதுவார்க்கு நாத வெளிப்பாடு கிட்டிச் சிவரூபம் கிடைக்கும். நாடோறும் உறங்கும்போதும், திருவைந்தெழுத்தை நினைத்திருப்பின்சிவனருள்கிட்டும். அது மரணம் வந்தகாலைப் பாதுகாவலாகத் துணை செய்யும்.

''மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போது
மரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே.''

—மந். 2702

''துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்தினும்
நெஞ்சகநைந்து நினைமினுடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த் தவந்தகூற்
றஞ்சவுதைத்தன அஞ் செழுத்துமே.''

—திருஞானசம்பந்தர்.

என்ற ஞானசிரியர் திருஞானசம்பந்தர் ஆணை மொழியையும் ஒப்பிட்டுணர்க.

இனி சிவாயநம என்பதை ஒளியாக நினைந்து ஓதுதல் சூக்கும பஞ்சாட்சரமாகும்.

''ஒளியை உன்னி உருகும் மனத்தராய்த்
தெளிய வோதிச் சிவாய நமவென்னும்''

—மந். 2709.

சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தில் சிகரம் சிவனையும், வகரம் சத்தியையும், யகரம் சீவனையும், நகரம் மனத்தையும், மகரம் மாயையையும் குறிக்கும். இப்பஞ்சாட்சர செபத்தால் துன்பத்தைக் கொடுக்கும் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐம் மலங்களும் நீங்கும். சிகர வகரத்தால் உணர்த்தப்பெறும் சிவன் சத்தியுடன் யகரமாகிய சீவன் பொருந்தவே துன்பத்தைத் தருகின்ற நகர மகரத்தால் உணர்த்தப்பெறும் மலமாயை சீவனைப் பற்றுதொழியும்.

''சிவன் சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலமைந் தகலச்
சிவன்சத்தி தன்னுடன் சீவனர் சேர
அவம்சேர்த்த பாசம் அணுககி லாவே.''

—மந். 2710.

மேற்கூறியவாறு சிவாயநம என்று செபிப்பதில், நமவால் குறிக்கப்பெறும் மலமாகிய இருளகன்று குண்டலியின் பிடிப்பினின்றும் நீங்கிச் சிற்சத்தியால் யகரமாகிய ஆன்மாவுக்குத் தீமையில்லாத சிவஞான யோகம் கிட்டும்.

''ஓதிய நம்மலம் எல்லாம் ஒழித்திட்டவ்
வாதிதனைவிட் டிறையருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதுஞ் சிவாய மலமற்ற உண்மையே.''

—மந். 2712.

அப்போது சிவாய என்ற ஒளியைப் பூசிப்பதே மலம் நீங்கிய உண்மை நிலையாம்.

இம்மந்திரத்தைத் தியானம் செய்யும் முறையை அடுத்துக் கூறுகிறர். சிவாயநம என்ற திருவைந்தெழுத்தைச் செபிக்கும் முறையில் நம என்ற எழுத்துக்களை நாவினுள் கண்டப் பிரதேசத்தில் அடக்கி சிவ என்னும் நாமத்தைச் சிரசின் மேல் மன மண்டலத்தில் நினைக்க வேண்டும். அவ்வாறு நினைப்பின் ஆன்மவொளி பெருகிப் பிறவி நீங்கும்.

''நமவென்று நாமத்தை நாவில் ஒடுக்கிச்
சிவவென்னு நாமத்தைச் சிந்தையு ளேற்றப்
பவமது தீரும் பரிசும தற்றால்
அவமதி தீரும் அறும்பிறப் பன்றே.''

—மந். 2717.

சிவாய சிவசிவ என்பது அதி சூக்கும பஞ்சாட்சரமாகும். அஃதாவது இருளைவிட்ட ஆன்மா சிவசக்தியைத் தாரகமாகக் கொண்டு அழிவற்ற நிலைபெறும் என்பதாம். ஒளியின் நினைப்பும் அற்று அடங்கி நிற்றலே அதிசூக்கும பஞ்சாட்சர தரிசனமாகும்.

சிவாயநம என்று செபித்துச் சித்தத்தைப் புறத்தே செல்லாது அக நிலையதாக்கி, மலத்தாலாகிய துன்பத்தை நீக்கிச் சிவத்துக்கு அடிமையாக்கி, சிவாய சிவசிவ என்று பலமுறை சித்தத்தில் எண்ணி அச்சம் நீங்க ஆனந்தம் உண்டாகும்.

''சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.''

—மந். 2718.

அவாயம் அறுதலாவது, நமக்கள் நீங்குதல், சிவாய சிவசிவ என்பது மலம் நீங்கிய சீவன் சிவசக்தியோடு ஒளி மயமாய் நிற்றல் என்றபடி. அஃதாவது, மலம் நீங்கிய சீவன் சிவசத்தியோடு பொருந்தி ஆனந்த நிலையில் இருக்கும் என்க.

''சிவாயநம என்று சிந்தித் திருப்பார்க்கு
அவாயம் ஒருநாளும் இல்லை.''

என்ற முதுமொழியும் ஒப்பிட்டுணர்க.

அதிசூக்கும பஞ்சாட்சர தரிசனத்தால் மூலாதாரத்திலுள்ள அக்கினி சூரிய மண்டலத்தைக் கடந்து சென்று, தோளுக்கு மேல் விளங்கும் சந்திர மண்டல ஒளியில் ஐம்புல அறிவுகளும் அடங்கும் முறையில் பொருந்தியிருக்கின்ற சாதகர், சிவத்தைப் பிரியாதிருக்கும் நிலையை அடைவர். இதுவே இம்மந்திரத்தால் பெறும் யோகமாம்.

''செஞ்சுடர் மண்டலத் தூடுசென்றப்புற
மஞ்சண வும்முறை யேறி வழிக்கொண்டு
துஞ்சு மவன் சொன்ன காலத்திறைவனை
நெஞ்சென நீங்கா நிலைபெற லாகுமே.''

—மந். 2719.

இறுதியாகப் பஞ்சாட்சரத்தின் பெருமையினை, மீண்டும் வலியுறுத்திக் கூறி, ஞானமில்லாதார் இதனை அறியாது கெடுகின்றனரே என்று ஆசிரியர் வருந்துகிறர்.

***

உ

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவத்தானம்

திருச்செந்தூர்

கோடி அர்ச்சனை

ஆறு படை வீடுகளிலும், தனிச் சிறப்புற்று விளங்கும் திருச்செந்திலம்பதியில் விற்றிருக்கும் அருள்மிகு சண்முகப் பெருமானுக்கு உலக நலனை முன்னிட்டுக் கோடி அர்ச்சனை 4—12—75-ல் துவங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கோடி அர்ச்சனையில் ஒரு சகஸ்ர நாம அர்ச்சனைக்கு ரூ. 20-00 (இருபது) வீதம் மணியார்டர் அல்லது டிராப்ட் மூலமாக,

நிர்வாக அதிகாரி,
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,
திருச்செந்தூர் : : தமிழ்நாடு

என்ற விலாசத்திற்கு அனுப்பிப் பக்தர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண் டப்படுகிறது. வெள்ளி தங்க டாலர் வேண்டுவோர் முன்கூட்டி எழுதிப் பெயர் பதிவு செய்து கொள்ளலாம். கோடி அர்ச்சனையில் பங்கு பெறுபவர்களுக்கு விபூதி, குங்குமப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு அருள்மிகு சண்முகப் பெருமான் திருவருள் பெற்று உய்யு மாறு வேண்டப்படுகிறது.

திரு. ஆ. கருப்பையா, எம். எல். ஏ.,
திரு. டி. ஆர். சுப்பிரமணியம்,
அறங்காவலர்கள்.

எஸ். பி. முனுசாமி,
உதவி ஆணையர்—நிர்வாக அதிகாரி.

ஆனைக்கா அண்ணலும் அகிலம்மையும்

திரு. நமசிவாயம் பிள்ளை

முன்னுரை

இவ்வுலகத்திலேயே தேவாலயங்கள் நிறைந்த நாடு நம் தமிழகம். அதிலும் காவிரி பாயும் சோழ மண்டலம், தன்னிரகற்ற கோயில்கள் பலவற்றைத் தன்பால் கொண்ட சிறப்புடையது. பொன்னியாறு பாயும் நன் னிலம் புவிக்குச் செந்நெல்லை மட்டுமல்ல, புனித மான சமய உணர்வினையும், தத்துவ ஞானத் தையும்கூடப் புகட்டிய பெருமை சான்றது. அத்தகைய புண்ணியத் தலங்களுள் பெருஞ் சிறப்புடைய திருவானைக்கா, மிகத் தொன் மையானது என்பது வெறும் உபசார வழக்கு அன்று.

கடைச் சங்க காலச் சோழனான கோச்செங் கணன், உறையூரைத் தலைநகராகக் கொண்டு தென்னகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் அர சாண்ட காலத்திலிருந்தே தன் பெருமை குன் றாது விளங்குவது திருவானைக்கா. இத்தலத்தின் தெய்வம் ஆகிய சம்புகேசுவரர், செங்கணாரின் வழிபடு தெய்வமாகப் பூசிக்கப் பெற்றார். முன் பிறப்பில் கோச்செங்கணான் சிலந்தியாக இருந்த போதும் கூட, மெய்யன்போடு வழிபட்ட திறத்தைப் புராணங்கள் பலபடப் பேசிப் புகழும். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவச் சான்றோராகிய அப்பரடிகள் பிரசித்தி பெற்ற தம்முடைய திருவிருத்தத்தில், ''சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து, உலந்த வண் இறந்த போதே கோச்செங்கணானுமாகக், கலந்த நீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள், குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே'' என்று பாடிப் பரவு கின்றார்.

நால்வர்

ஆயிரக் கணக்கான ஆலயங்கள் அமைந் திருப்பினும், அவற்றுள் திருமுறை என்று பேசப் படும் தமிழ் மறையால் சிறப்பிக்கப்பட்ட தலங் களையே புண்ணியத் தலங்கள் என்று பெரிதும் கொண்டாடுவது நம் நாட்டு மரபு. சைவ சமயாசாரியர்கள் என்று சிறப்பிக்கப்படுவோர் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரமூர்த்தி கள், மணிவாசகர் என்னும் நால்வர் ஆவர். இந்நால்வரும் ஒரே காலத்தவர் அல்லர். ஞானசம்பந்தரும் நாவுக்கரசருமே சம காலத் தவர், அவர்களில் இருவருமே சென்று துதித்த தலங்கள் சிலவே. நமது ஆனைக்கா, நால்வர் நற்றமிழ் மாலைகளையும் பெற்றுக் கொண்ட பெருமைக்குரியது. திருவாசகம் குறிப்பிடும் பெருமை பெற்ற மிகச் சில தலங்களுள் ஆனைக் காவும் ஒன்றாகும். ''முன்னானை மூவருக்கும் முற்றுமாய் முற்றுக்கும், பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின், மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத், தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை, என்னானை என் அப்பன் என்பார்கட்கு, இன்னமுதை, அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்'' என்று பாடுகிறது மணிவாசகரது திருவாசகத்திலுள்ள திருவம்மானை.

சம்பந்தர்

சைவ சமயக் குரவருள் தலையாயவரான ஞான சம்பந்தரோ, தமது இரண்டாம் திரு முறையில் ''செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர்கோன், அங்கட் கருணை பெரியதாய வனே, வெங்கண் விடையாய் எம் வெண்ணாவல் உளாய், அங்கத் தயர் வாயினள் ஆயிழையே'' என அகத்துறைப் பாடலால், இத்திருக் கோயிலிலே மிக்க ஈடுபாடு கொண்டிருந்த சங்க காலச் சோழ மன்னனாகிய கோச்செங்கணானை யும், தலவிருட்சமாகிய வெண்ணாவல் மரத்தை யும் குறிப்பிடுகிறார். இப்பாடலிற் சம்பந்தர், திருக்கோயிலில் மூலவர் இருக்கும் கருவறையை ஒட்டிப் பழங்காலந் தொட்டு விளங்கும் வெண்ணாவல் மரத்தின் சிறப்பை மறக்காமல் குறிப்பிடுவது காணலாம்.

சம்பு முனிவர் என்பவரின் தலையில் முளைத்து, எம்பெருமானுக்கு என்றென்றும் இயற்கையாக அமைந்த திருக்கோயிலாக விளங்குவது அவ்வெண்ணாவல் மரம் எனப் பேசப்படுகிறது. இன்னும் அம்மரம் மிகப் பழமையினைத் தனது உருவப் பொலிவில் காட்டிக் கொண்டு, நன்னிலைமையில் இருப் பதைக் காண்கிறோம். பல நூறு செய்யுளாக விரித்துரைக்கும் தல புராணக் கதை, ஞான சம்பந்தர் திருமுறையில் குறிப்பாகப் பேசப் படுகிறது. மேலும் அவரே தாம் மீண்டும் பாடிடும் மூன்றாம் திருமுறைப் பதிகத்தில் ''ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்ப வர், ஏனைக்காவல் வேண்டுவோர்க்கு ஏதம் ஏதும் இல்லையே'' என்று திருவானைக்கா தெய் வத்தை வணங்குவார்க்கு எவ்வித பயமும், பகையும் இல்லை என்று கூறுகிறார்.

அப்பர்

சம்பந்தரின் சம காலத்தவரான, திரு நாவுக்கரசர் தமது ஐந்தாம் திருமுறையில் ''வஞ்சமின்றி வணங்குமின் வைகலும், வெஞ் சொலின்றி விலகுமின் வீடுற, நைஞ்சு நைஞ்சு நின்று உள்குளிர்வார்க் கெல்லாம், அஞ்சலென் றிடும் ஆனைக்கா அண்ணலே'' என உலகினர்க்கு உறுதி கூறி, எல்லோரையும் ஆனைக்கா அண்ணலை வணங்க அழைக்கின்றார். மேலும் தமது ஆறும் திருமுறைத் திருதாண்டகத்தில் ''எத்தாயர்? எத்தந்தை? எச்சுற்றத்தார்? எம்மாடு சும்மா டாம்? ஏவர் நல்லார், செத்தால் வந்து உதவு வார் ஒருவரில்லை சிறு விறகால் தீமூட்டிச் செல் லாநிற்பர், சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித் திருவானைக்காவுடைய செல்வா! என்றன், அத்தா! உன் பொற்பாதம் அடையப் பெற்றால் அல்லகண்டம் கொண்டு அடியேன் என் செய் கேனே'' என்று கம்பீரமாகப் பாடுகிறார். இதில் ஒரு நயம் இருப்பது சிறப்பாகும். எதிர்காலத் தில் சிவபெருமானே, தான் ஒரு சித்த புருஷனாக இவ்வூருக்கு வந்து தன் கோயில் பொன்னி என் னும் காவிரியாற்றின் வெள்ளத்தாற் சேதமுறா மல் காக்க மிகப் பிரம்மாண்டமான கருங்கல் மதில் ஒன்றை எவ்விதமான அரசர், செல்வந்தர் உதவியும் இல்லாமலேயே கட்டி முடித்த சிறந்த வரலாற்றை முன்னறிவிப்பதாக உள்ளது. ''சித்தாய வேடத்தாய்'' என்ற அப்பரடிகளின் தேவாரத் தொடர், கையில் பணங்காசு ஏதும் இல்லாமலேயே, மதில் கட்டிய தொழிலாளர் களுக்கு மாலையில் தாம் கொடுக்கும் திருநீறு அவரவர் வேலைக்கேற்ற கூலிப் பணமாக மாறும்படிச் செய்து அப்பெரிய திருமதிலைக் கட்டி முடித்த வரலாற்றைப் பேசும்.

சுந்தரர்

மேலும் ஏழாம் திருமுறையில் சுந்தர மூர்த்தி சுவாமிகள், ''தாரமாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத்தும் நீரில் நின்றடி போற்றி நின்மலா! கொள் என ஆங்கே ஆரங்கொண்ட எம் ஆனைக்காவுடை ஆதியை நாளும் ஈரமுள்ளவர் எம்மையும் ஆளுடை யாரே'' என்று உறையூர்ச் சோழ மன்னன், காணாமல் போன தன் விலை உயர்ந்த முத்து மாலை, திருமஞ்சனத்தோடு சிவலிங்கத்தின் மீது விழுந்து அதை அணிசெய்யக் கண்டு, அருமை யான பொருள்கள் அனைத்தையும் ஆண்டவ னுக்கே அர்ப்பணிக்க வேண்டிய தன்கடமையை உணர்ந்து அம்மாலையைஆனைக்கா அண்ணலுக்கே அணி செய்யத் தந்ததொரு செய்தி விளங்கப் பாடுகிறார்.

சமயாசாரியர்களாகிய நால்வர் மட்டும் அல்ல, ஐயடிகள் காடவர்கோன் என்ற அடியா ராக வாழ்ந்த அரசரும், தம்முடைய பாடலில் ஆனைக்காவின் சிறப்பைப் பாடிப் பரவுகிறார். பின் 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிராட்சச கச்சியப்ப முனிவர் என்ற திருவானைக்காப் புராண ஆசிரியர், சக்கரவர்த்தித் திருமகனை இராமபிரான் ஆனைக்கா அண்ணலின் சிறப்பு உணர்ந்து வணங்கி வழிபட்டதை அழகுறப் பாடுகிறார். இராமபிரான் அகழ்ந்த பெருங் குளமான இராம தீர்த்தமும், அவன் வழிபட்ட நீல விண்டீசர் என்னும் சிவலிங்கமும் இன்னும் இங்கு உள்ளன.

அகிலம்மை

திருவானைக்காவில் கோயில் கொண்டுள்ள சம்புகேசுவரரின் சிறப்புக்கள் இவ்வளவாக, அவர்தம் அருள் வடிவமாக வீற்றிருக்கும் அம்மை அகிலாண்ட நாயகியைப் பற்றிய பெருமையைச் சற்றே கவனிப்போம். தேவி அகிலம்மை மற்ற சிவத் தலங்களில் உள்ளது போல் சிவபெருமானின் இடப் பாகத்திலுள்ள தேவியாக மட்டுமின்றி, இவ்வூரில் சிவபிரானைப் பூசிக்கும் சிவ பக்தையாகவும், அவனைத் தனது ஞான குருவாகக் கொண்டு உபதேசம் பெற்ற நல்ல மாணவியாகவும் இருக்கிறாள். இன்னும் நண்பகல் பூசையில், அம்மை ஆலயத்திலிருந்து, பூசகர் அம்மையின் உருவம்போல் பெண்மைக் கோலத்தோடு சுவாமி கோயிலுக்கு வந்து அம்மையாகவே தம்மைப் பாவித்துக் கொண்டு சிவபூசை செய்யும் சிறப்பு காணத்தக்கது. என்றென்றும் சிவ குருவிடம் ஞான உபதேசம் பெறும் மாணவியாக இருப்பதால், இங்கு மற்ற தேவாலயங்களில் உள்ளது போல் திருக்கல் யாண விழா நடைபெறுவது கிடையாது. மேலும் இன்றைக்குச் சுமார் 1,200 ஆண்டு களுக்கு முன் வாழ்ந்து அத்வைத மதத்தைப் பரப்பியவர் என்று சிறப்பிக்கப்படும் ஆதி சங்கர பகவத்பாதர், தம் திருக்கரத்தால் அம்மையின் இரு காதுகளுக்கும் அணிபெறச் செய்த சக்கரதாடங்கம், காண்போர் கண்ணைக் கவரும் பெருமை உடையது. அட்சரமாலிகை என்னும் அகரவரிசைப் பதிகம், சங்கரர் இவ் வம்மையைக் குறித்துப் பாடிய வடமொழித் தோத்திரமாகும்.

புலவர்கள்

பதினைன்காம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறந்த நகைச்சுவைக் கவிஞரான காளமேகம் கற்ற கல்வியே, அகிலாண்ட நாயகியின் திரு வருள் என்பது வரலாறு. திருவானைக்கா உலா என்றதொரு நூலும், பல தனிப் பாடல்களு மாகப் பாரெல்லாம் அகிலம்மையின் புகழ் பரவுமாறு கவி காளமேகம் பாடிய பாடல்கள் கற்றவர்கள் நெஞ்சத்தை எல்லாம் கொள்ளை கொள்ளத் தக்க இத்தலத்தின் சிறப்பைக் கூறிக் கொண்டு இன்னும் தமிழ் இலக்கியத்தில் நின்று நிலவுகிறது. இன்னும் பதினேழாம் நூற்றாண் டில் இங்கிருந்த சதாசிவ தீட்சிதர் என்னும் அந்தணப் பெரியார், அகிலாண்ட நாயகியை வழிபட்டு பல சித்துகள் செய்ததாகச் சரித்தி ரம் பேசுகிறது. அவர் நிறுவிய ஏகாட்சியம்மன் கோயில் கீழ்ப்புறம் சுந்தரபாண்டியன் கோயி லுக்கு அருகில் உள்ளது. அந்தணரான அப் பெரியார் இக்கோயிலுக்கு நாயக்க மன்னர் களின் ஆதரவில் செய்து வைத்த திருப்பணிகள் பலவாகும்.

மேலும் முருகன் பெருமையை உலகறியத் தம் திருப்புகழ்ப் பாடல்களால் பரப்பி வந்த சந்தப் புலவர் அருணகிரி நாதர், இக்கோயில்

முருகனை இரண்டு பாடல்களால் சிறப்பிக்கிருர். கோயிலுக்குள் சில வடிவுள்ள தெய்வத்தை மட்டுமல்லாமல் தென்புறம் வாயிலருகே உள்ள சம்பு தீர்த்தக் கரையில் புடைச் சிற்பமாகப் போர்க் கோலத்துடன் வில்லேந்திய வேலவனுக விளங்கும் முருகனைக் கூட, அப்பெரியார் தம் திருப்புகழில் குறித்துள்ள பெருமை நாம் உணர்ந்து வியக்கத் தக்கது. இளைய பிள்ளையார் புலவர்கள் பாடலால் பெருமை யுறுவதுபோல, மூத்த பிள்ளையாரான விநாயகர் சிற்பத் திறமையால் சிறப்புற்று இக்கோயிலில் இருப்பதும் ஒரு பெருமை. தென்னகத்தில் வேறு எங்குமே இல்லாத அற்புதச் சிற்பம், சுவாமி கோயில் இரண்டாம் சுற்றிலிருக்கும் வல்லபை கணபதியின் உருவம். அம்பாள் கோயிலில் உள்ள மிகப் பெரிய திருவுருவமான சந்நிதிப் பிள்ளையாரையும், தென்மேற்கு மூலையிலுள்ள ஐம்முகக் கணபதியையும் காண்பார் பரவசமடைவது திண்ணம். மேலும் நமது காலத்துக்குச் சற்று முன் வாழ்ந்த கல்விக் கடலான மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள், அகிலாண்ட நாயகிக்குச் சாற்றி மகிழ்ந்த அகிலாண்ட நாயகி பிள்ளைத் தமிழ், அகிலாண்ட நாயகி மாலை என்னும் இரண்டு நூல்களும் இன்னும் தமிழ் நாடெங்கும் கவிதை மணம் பரப்பிக் கொண்டு இருப்பது தமிழ்ப் புலமை உள்ளோர் அறிவர். பல பல வடமொழித் துதி நூல்களையும், தமிழ்த் துதி நூல்களையும் பெற்றுள்ள இத் தலம், காலம் சிதைக்கினும் சிதையாமல் என்றும் புகழுடன் விளங்குகிறது.

முடிவுரை

திருவரங்கத் தலத்தைக் குறித்த ''கோயிலொழுகு'' என்னும் வரலாற்று நூலில் திருவானைக் காவைப் பற்றிய பல குறிப்புகள் அறியக் கிடக்கின்றன. இதை யெல்லாம் விரிக்கிற் பெருகும். இன்னும் இக்காலத்துக் கவிஞர் கலைவாணன் அவர்களால் பாடப்பெற்ற காவை முருகன் பிள்ளைத் தமிழ், இவ்வூர்ப் பெருமையைப் புதுக்கிக் கொண்டிருப்பது காணலாம். இவை எல்லாம் ஒரு புறமிருக்க ஆடி, தை வெள்ளிக்கிழமைகளில், ஏன்? சாதாரண வெள்ளிக்கிழமைகளிலும் அகிலம்மையைத் தரிசிக்கக் கூடும் பெருந் திரளான கூட்டமே, வணங்கத் தக்க தலங்களில் திருவானைக்கா ஒப்பற்றது என்பதை விளக்கும். வாருங்கள் நீங்களும் எங்கள் திருவானைக்காவுக்கு ஒரு முறை; வந்து ஆனைக்கா அண்ணலையும் அம்மையையும் தரிசித்துப் புண்ணியம் பெறுங்கள். இம்மை மறுமை நலன்களை அடையுங்கள்.

**

158609

அருள்திரு அருணுசலேசுவரர் திருக்கோயில்

திருவண்ணுமலை : : வடஆற்காடு மாவட்டம்

திரு. அண்ணுமலைக்கு ஒரு யாத்திரை

தமிழகத்தில் எத்தனையோ புண்ணியத் தலங்கள் இருப்பினும், இருந்த இடத்தில் இருந்தபடியே நினைக்க முத்தி அளிக்கும் திருத்தலம் இத்தலமாகும். பஞ்சபூதத் தலங்களில் மிக முக்கியமான 'அக்கினி' தலமும், சமயப் பெரும் புலவர்களாகிய அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர்களின் திருநாவினுல் புகழ்ந்து பாடப்பெற்ற தலமும் ஆகும். சமயப் பெரியவர் என்றும், 'வாக்கிற்கு அருணகிரி' என்றும் போற்றப்படும் அருணகிரிநாதர் அவதரித்த சிறப்புத் தலம் இத்தலம். இத்தனை சிறப்புக்களையும், பெருமையையும் உடைய இத்தலத்தில் சுமார் 26 ஏக்கர் நிலப்பரப்பில் அமர்ந்து, வந்தோரை ''வா'', ''வா'' என்று அழைத்து வாழ வைக்கும் அண்ணல்தான் ''அண்ணுமலை''. இத்தகைய இப்பெரும் கோயில் இந்தியாவிலேயே மிகப் பெரிய 217 அடி உயரமான இராஜகோபுரத்தைப் பெற்றுள்ளது. இத்திருக்கோயிலில் தற்போது 50 லட்ச ரூபாய் செலவில் திருப்பணி வேலைகள் நடந்தேறி வருகிறது. இப்பெரும் பணியில் ஒரு பகுதி, 'தமிழக அரசின்' மானியத்தினுலும், ஒரு பகுதி நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் நன்கொடையாலும், ஒரு பகுதி இதர ஆலயங்களில் இருந்து அளிக்கும் நன்கொடைகளினுலும், மிகுதி உள்ள பெரும் பகுதி பக்த கோடிகளின் நன்கொடைகளாலும் நிறைவேறி வருகின்றன. இந்தப் பெரும் பணியைச் செய்து முடித்து அடுத்த தமிழ் வைகாசியில் மகா கும்பாபிஷேகம் மிகவும் நன்முறையிலும், சீரும் சிறப்புடனும் நிறைவேற ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு நன்கொடையை அளித்து அண்ணுமலை அண்ணலின் நல்லாசியைப் பெற வேண்டுகிறேம்.

—திருப்பணிக் குழுவினர்

இராமேசுவரம் அழைக்கிறது!

இராமேசுவரம்......

புண்ணிய பாரதத்தின் நாற்பெருந் திருத்தலங்களுள் ஒன்று!
பன்னிரு ஜோதிர்லிங்க ஆலயங்களுள் ஒன்று!
மூர்த்தி தலச்சிறப்புடன் புனித தீர்த்த மகிமையும் கொண்டது!
சிறப்புகள் பலவற்றில் சில இதோ:

* *சிறிய தீவினில் ஒரு பெருங்கற் கோவில்*
** *கவினுறு சிற்பங்கள்*
*** *விதானத்தில் அழகிய ஓவியங்கள்*
**** *எண்ணி எண்ணி வியக்கவைக்கும் மாபெரும் மூன்றும் பிராகாரம்—இது கட்டிடக் கலைக்கு ஓர் முத்தாய்ப்பு.*

தொடர்ந்து நடைபெற்று வருகிறது திருப்பணி.

இதற்கு வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விலக்கு உண்டு.

அருள்மிகு இராமநாதசுவாமிக்கும், அம்பாள் பர்வதவர்த்தினிக்கும் செய்யப்படும் கோடி அர்ச்சனையில் பங்குகொண்டு (சகஸ்ரநாமம் 1-க்கு கட்டணம் ரூ. 10-00) வெள்ளிக்காசும், திருவருள் பிரசாதமும் பெற்று மகிழ வேண்டுகிறோம்.

திருக்கோயில் விற்பனைக் கூடத்தில் கோடி தீர்த்தம், பிரசாதம், புகைப்படங்கள், தலவரலாற்று நூல்கள், முதலியன கிடைக்கும். எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடத் திருக்கோயில் நுழைவாயிலில் கட்டணச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

சேதுக்கடலோரம் தேடிமால் செய்த திருக்கோயில் நாடிவந்து நலமெலாம் பெற்றுய்ய அன்பர்களை அழைக்கின்றோம்.

அறங்காவலர் குழுத்தலைவர் :
திரு. எஸ். இராமநாத சேதுபதி,
(இராமநாதபுரம் ராஜா)

அறங்காவலர்கள் :
திரு. எஎல். ஏஆர். சோமனாதன் செட்டியார்,
தேவகோட்டை.
திரு. டி. கே. சிறைமீட்டான், எம்.எல்.ஏ.,
பரமக்குடி.
திரு. ஆர் எம். முருகப்ப செட்டியார்,
நடராஜபுரம்.
திரு. ஏ. டி. எம். இராமநாதத் தேவர்,
அஞ்சுக்கோட்டை.

தா. வேணுகோபால், பி. ஏ.,
நிர்வாக அதிகாரி.

ஆடாய் ஊஞ்சல்

மீனவன்

பொன்னிலங்கு மணிமாடம் பொலிந்து தோன்றும்
புகழ்மதுரைத் திருநாடாள் பாண்டி மன்னன்
தன்னரிய திருமகளாய் நெருப்பிற் பூத்த
தளிர்க்கொடியே! இளங்குயிலே! மரகதஞ்சேர்
மின்னுருவே! மீனாட்சி என்னும் தாயே!
மென்தென்றல் குழல்தழுவக் குழைக ளாட
என்னுளத்தில் இருப்பவளே! ஆடாய் ஊஞ்சல்
எழுதரிய எழில்வடிவே! ஆடாய் ஊஞ்சல். (1)

மணிநெடுந்தேர் தனிலேறி வெற்றி கொண்ட
மரகதமே! தமிழ்வடிவே! மலயத் தென்றல்
அணிசெய்யும் கொடிமாட மதுரை நாட்டின்
ஆடரங்கில் வஞ்சியர்கள் மயில்போ லாடத்
தணியாத முறுவலிள மூரல் காட்டித்
தான்காணும் பெண்ணமுதே! தேவ மாதர்
பணிசெய்ய இருமருங்கும் கவரி வீச,
பரமனுக்கு வாய்த்தவளே! ஆடாய் ஊஞ்சல். (2)

சத்தியத்தின் வடிவான தாயே! கிள்ளை
சார்ந்திருக்கும் கையாளே! ஆழி தந்த
முத்துநகை மான்விழியே! சொக்கர் நெஞ்சில்
மோகனப்பண் இசைப்பவளே! காணுந் தோறும்
புத்துருவாய் இலங்கியருள் பூத்துத் தோன்றும்
பூமேனி இளங்குயிலே! பொதியச் செல்வீ!
எத்திசையும் வாழ்கவென ஆடாய் ஊஞ்சல்!
இந்துமுக மீனாட்சி ஆடாய் ஊஞ்சல். (3)

கற்றபெரும் புலவரெலாம் உன்னைப் பாடக்
கடல்நிகர்த்த பிறவியிதைக் கடக்க வேண்டி
நற்றவத்தால் உன்னடியை நாடி நிற்க
நாடாண்ட சுந்தரியே! நெஞ்சில் தோன்றும்
பற்றறுத்த துறவியரும் பற்று வைத்துப்
பரிந்தடிகள் நாடிவரப் பார்க்குந் தேவி!
வெற்றிபல கண்டவளே! ஆடாய் ஊஞ்சல்
வேதத்தின் தனிப்பொருளே! ஆடாய் ஊஞ்சல். (4)

கார்பூத்த மேனியினன் அரவ மீது
கண்வளரும் மாமாயன் தங்கை யாகி
ஏர்பூத்த மதியணிந்து கங்கை சூடி
இயலரவப் பணியணிந்த கைலை நாதன்
சீர்பூத்த கரம்பற்றி மாலை சூடச்
செழுந்தமிழர் தவக்கொழுந்தாய் வந்த தாயே!
பார்பூத்த உயிர்வாழ ஆடாய் ஊஞ்சல்
பரமனிடப் பாகத்தாய் ஆடாய் ஊஞ்சல் (5)

மீனுண்ட விழியாளே! உலகு வாழ
மீனாட்சி ஆனவளே! மலர்கள் சிந்தும்
தேனுண்ட சொல்லாளே! சொல்லி லெல்லாம்
திகழ்கின்ற பொருளாளே! கன்னி நாட்டைத்

தானுண்ட இளங்கொடியே! வான நாட்டுத்
தாமரைப்பூ முகமாதர் கூடி நின்று
வானுண்ட புகழ்பாட ஆடாய் ஊஞ்சல்
வையைவளர் கண்மணியே! ஆடாய் ஊஞ்சல். (6)

பண்படைத்த தமிழிசைப்பா மாந்தி என்றும்
பரம்பொருளாய் உலகமெலாம் காக்குந் தேவி!
கண்படைத்த பயனுன்னைக் காணல் என்றும்
கைபடைத்த பயனுன்னைப் பணிதல் என்றும்
எண்படைத்த வேதங்கள் இயம்பும்; அந்த
இயல்புடனே பணிவார்தம் இதய மேறி
மண்படைத்து விண்படைத்த தாயே! எங்கள்
மனந்தழைக்க அருள்சுரந்தே ஆடாய் ஊஞ்சல். (7)

மின்னிலங்கும் அணிவயிரக் கால்கள் நாட்டி,
மேலான செம்பவள விட்டம் பூட்டி,
பொன்னிலங்கும் இரத்தினப்பூம் பலகை சேர்த்து,
பொலிவயிர முத்துவடம் பின்னி ஆர்த்து,
கன்னலெனச் சொல்பயிலும் மாத ரோடு
கலைமகளும் திருமகளும் கலந்து வாழ்த்த,
பன்னகத்தான் இடப்பாவை ஆடாய் ஊஞ்சல்
பாண்டிகுல விளக்கானாய் ஆடாய் ஊஞ்சல். (8)

நெருப்பிடையில் பூத்தகொடி; தேவா ரத்தில்
நிலைத்தகொடி; கும்பமுனி நின்று வாழும்
பொருப்பிடையில் வளர்ந்தகொடி; மதுரைக் கோயில்
புகுவார்தம் மனத்திலுறை கொடியே! வாயில்
சிரிப்பெழுந்த காலத்தில் நிலவு காட்டும்
சிறுமுரல் முல்லைநகை மானே! கொன்றை
தரிப்பானின் மனைவிளக்கே! ஆடாய் ஊஞ்சல்
தமிழ்பயின்ற திருநகரில் ஆடாய் ஊஞ்சல். (9)

அலைதுயின்ற கடல்மாயன் நீரை வார்க்க
ஆர்க்குமறை வேதனுயர் மறைகள் ஓத
மலைவளர்த்த கையானை, கைலை என்னும்
மலையானை, மானேந்து கையி னானை,
சிலைதிகழும் புருவநுதல் படைத்த தேவி!
செங்கரத்தால் பற்றிமணங் கண்ட தாயே!
மலைவளரும் தேனமுதே! ஆடாய் ஊஞ்சல்
மரகதப்பூஞ் செழுங்குயிலே! ஆடாய் ஊஞ்சல். (10)



திருவேற்காட்டு மகாதேவர் கோயில் கல்வெட்டுகள்

திரு. ஏ. ஏகாம்பரநாதன் எம். ஏ.,

தொண்டை நாட்டில் சைவ சமயக் குரவர்களால் பாடல் பெற்ற தலங்களுள் திருவேற்காடும் ஒன்றாகும். இத்தலத்திலுள்ள கருமாரியம்மன் கோயிலுக்கு மேற்காக, சற்றுத் தொலைவில் வேதபுரீசுவரர் கோயில் என்னும் சிவன் கோயில் ஒன்றுள்ளது. கல்வெட்டுகளில் இக்கோயில் திருவேற்காட்டு மகாதேவர் கோயில் எனவும், வேற்காடுடையார் கோயில் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில் இத்தலத்தின் சிறப்பினையும், ஆங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெருமையினையும் இனிது கூறியுள்ளார். சைவ சமய நாயன்மார்களுள் ஒருவராகிய மூர்க்க நாயனார் இத்தலத்தில் பிறந்தவராவார். இவர் உருளாயச் சூதாட்டத்தில் பிறரை வென்று, அதில் கிடைத்த பொருளைக் கொண்டு, வேற்காடுடையார் கோயிலுக்குவந்த சிவனடியார்களுக்கு உணவளித்து மகிழ்ந்ததாகப் பெரிய புராணம் பகரும்.

தூங்கானை மாடக் கோயில் வகையைச் சார்ந்த இக்கோயிலின் கருவறையில் இலிங்கத்திற்குப் பதிலாக அம்மையும், அப்பனும் அமர்ந்த வண்ணம் காட்சியளிக்கின்றனர். தேவகோட்டங்களில் கணேசர், தக்கணாமூர்த்தி லிங்கோத்பவர், நான்முகன், கொற்றவை ஆகியோரது எழில் மிக்க சிற்பங்கள் இடம் பெற்றுஉள்ளன. கோயிலில் கொடுங்கைக்கு மேலுள்ள விமானத்தின் பகுதி தற்காலத்தில் புதுப்பிக்கப் பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

வேதபுரீசுவரர் கோயிலின் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் அடித்தளத்திலும், வெளிச்சுவர்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சோழ அரசர்களுள் இரண்டாம் இராசேந்திரன், வீர ராசேந்திரன், முதலாவது குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் ஆகியோர் காலத்தில் இக்கோயிலுக்குத் தானங்கள் வழங்கப்பட்டமையைக் கல்வெட்டுகளால் அறிய வருகிறோம். தெலுங்குச்சோழ அரசனாகிய திம்ம சித்தன் காலத்திலும், சம்புவராய சிற்றரசர் ஒருவரது ஆட்சியிலும் இக்கோயிலுக்கு நிவந்தங்கள் பல செய்யப்பட்டுள்ளன. மேலும் அரசர் பெயர்கள் குறிக்கப்படாத கி.பி. 12-ம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் சில இக்கோயிலுக்கு நிலங்கள் தானமாக விடப்பட்டதைக் குறிப்பிடுகின்றன.

கோயில் வரவு செலவு கண்காணிப்பு

இரண்டாம் இராசேந்திரனது ஆட்சியில் சோழ மூவேந்த வேளான் என்னும் அதிகாரி திருவொற்றியூரிலுள்ள திருக்காவணம் என்னுமிடத்திலிருந்து கொண்டு, திருவேற்காடுடையார் கோயிலுக்குரிய வரவு செலவு கணக்குகளையும்; கோயிலுக்குச் சொந்தமான ஊர்களாகிய திருச்சிற்றம்பல நல்லூர், மும்முடிச் சோழநல்லூர் ஆகியவற்றிலிருந்து கிடைத்த வருவாயைக் கொண்டு கோயிலுக்காகச் செய்யப்பட்ட செலவுகளையும் சரி பார்த்துள்ளார். (386). இதுபோன்று வீர ராசேந்திரன் காலத்தில் காஞ்சிபுரத்திலுள்ள திருமயானம் உடையார் கோயிலிலுள்ள (திருக்கச்சி மயானம்) கங்கை கொண்ட சோழன் மண்டபத்திலிருந்து கொண்டு, அதிகாரியொருவர் திருவேற்காடு கோயில் கணக்குகளைச் சரிபார்த்துள்ளதாகத் தெரிய வருகிறோம். மேலும் இவ்வதிகாரியிடம், முன்னர் சோழ மூவேந்த வேளார் என்னும் அதிகாரியால் திருவேற்காடுடையார் கோயிலில் ஆனித் திருவாதிரை விழாவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாதென்று முறையிடவே, இவர் இராசாதிராசன் தாகுக் கூலி முதலிய சில வரிகளைக் கோயில் செலவிற்குப் பயன்படுமாறு செய்துள்ளார். (387).

நிலங்கள் வழங்கியமை

முதலாவது குலோத்துங்கன் ஆட்சியில் தூதுவன் கொம்மையன் என்பான் மும்முடிச் சோழநல்லூரிலுள்ள ஒரு நிலத்தை வாங்கித் திருவேற்காடுடையார் கோயிலுக்குத் தானமாக வழங்கியுள்ளான். இந்நிலத்தை இறையிலி தேவதானமாக்குவதற்குத் திருவேற்காட்டு ஊரார் அவனிடமிருந்து ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டனர். (389). இதுபோன்று கங்கைகொண்டான் சோழவிச்சாதரப் பல்லவரையன் என்பவனால் வழங்கப்பட்ட நெய்தல் வாயில் என்னும் ஊரிலுள்ள நிலங்களை, அவனிடமிருந்து 16 காசுகளைப் பெற்றுக்கொண்ட பின்னர், இறையிலி நிலமாக ஆக்கியுள்ளனர். (392). கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலும் கேசவன் அத்தியூர் என்பவனால் நெய்தல் வாயிலிலுள்ள சில நிலங்கள் இக்கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன (388). சம்புவராய சிற்றரசராகிய வென்று மண்கொண்டான் என்பவராட்சியில் ஆகுதி நாட்டிலுள்ள ஓரிரு நிலங்கள் கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ளன. (393).

சந்தி விளக்கு, நந்தா விளக்கு

திருவேற்காடு மகாதேவர்கோயிலில் நந்தா விளக்குகள் எரிப்பதற்கும், சந்தி விளக்குகள் வைப்பதற்கும் காசு, பசுக்கள், நிலங்கள் முதலியன கொடுக்கப்பட்டுள்ளன. திருச்சிற்றம்பலம் உடையான் என்பவன், இக்கோயிலில் சந்தி விளக்கொன்று வைப்பதற்காக 2.5 பழங்காசுகளை வழங்கியுள்ளான். (394). தூதுவன் கொம்மையன் என்பவன் ஒரு சந்தி விளக்கிற்காகத் திருச்சிற்றம்பல நல்லூரிலுள்ள ஒரு நிலத்தைத் தானமாக அளித்துள்ளான். (389). கி.பி. 1219-ஆம் ஆண்டில் கருப்புளான் சாத்தனது மகனுகிய ஆகாண்டை என்பவனும், அவனது சிற்றன்னையாகிய நங்கையாணராள் என்பவளும் சந்தி விளக்கொன்று வைப்பதற்கு இரு பழங்காசுகளைக் கொடுத்துள்ளனர். (396).

முதற் குலோத்துங்கனது ஆட்சியில் குகமாயப் பெருமாள் நங்கை என்னும் பெண்மணி ஒரு நந்தா விளக்கெரிப்பதற்காகச் சிலபசுக்களைத் தானமாகக் கொடுத்துள்ளார். (391). மேலும் மும்முடிச் சோழநல்லூரிலுள்ள சில நிலங்கள் நந்தா விளக்கெரிப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளதையும் அறிய வருகிறோம். (389).

கோயில் செலவிற்கு வரிகள் ஒதுக்கீடு

இரண்டாம் இராசேந்திரன் காலத்தில் தரகுக் கூலி முதலிய சில வரிகள் ஆனித் திருவாதிரைத் திருவிழாச் செலவுகளுக்கும், அத்திருவிழாவின்போது வந்த சைவத் துறவிகளுக்கு உணவளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. (387). சம்புவராய சிற்றரசனுட்சியில் புறக்கலனை, சாதம் முதலிய வருவாய்கள் இறைவழிபாட்டிற்கும், பிற செலவுகளுக்கும் சர்வமானியமாக வழங்கப்பட்டுள்ளன (393). திம்மசித்தன் என்னும் தெலுங்குச் சோழன் காலத்தில் திருவேற்காட்டுப் பகுதியிலிருந்து வசூலிக்கப்பட்ட சில வரிகள் கோயில் செலவிற்கு ஒதுக்கப்பட்டதையும் அறிய வருகிறோம். (396).

ஆட்சிப் பிரிவுகள்

வேற்காடுடையார் கோயில் கல்வெட்டுகளில் கோட்டம், நாடு, ஊர் முதலிய ஆட்சிப் பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தொண்டை நாட்டின் வட பகுதியிலுள்ள ஆமூர்க் கோட்டம், ஈக்காட்டுக் கோட்டம், புழற்கோட்டம் ஆகியவை பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இவையன்றி வேற்காடு நாடு, உழுந்தூர் நாடு, பாண்டி குலாசனிவள நாடு, ஆகுதி நாடு, மாங்காட்டு நாடு என்னும் நாட்டுப் பிரிவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டின் உட்பிரிவுகளாகிய ஊர்களுள் முக்கியமாக திருவொற்றியூர், திருச்சிற்றம்பலநல்லூர், மும்முடிச்சோழநல்லூர், பஞ்சநதிவாணபுரம், வாணிகமங்கலம், இரையூர், இராசராசநல்லூர் (நெய்தல்வாயில்), ஆயலூர், உய்யக்கொண்டான் சோழபுரம் ஆகியவையும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன.

திருவேற்காட்டிற்கு முன்பு மும்முடிச் சோழநல்லூர் என்னும் பெயரும் (389), சக்தயரண்யா என்னும் பெயரும் (395) வழங்கப்பட்டிருக்கிறது. கல்வெட்டுகளில் இக்கோயில் திருவேற்காடுடைய மகாதேவர் கோயில் எனவும் வேற்காடுடையார் கோயில் எனவும் குறிக்கப்பட்டுள்ளதேயன்றி, வேதபுரீசுவரர் கோயில் என்று குறிப்பிடப்படவில்லை. எனவே வேதபுரீசுவரர் கோயில் என்னும் பெயர் பிற்காலத்தில்தான் இக்கோயிலுக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

(பி.கு. : அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்ட எண்கள் 1958—59-ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையிலுள்ள கல்வெட்டுகளின் எண்களாகும்).

சங்கரரின் வேண்டுகோள்

O Lord, Pardon my three sins.

I have in contemplation clothed in form
Thee who art formless :

I have in praise described
Thee who art ineffable :

And in visiting temples, I have
ignored Thine omnipresence.

—Translated by A. C. Bouquet

மூன்று பிழைகள் புரிகின்றேன்,
முதல்வா! என்னைப் பொறுத்தருள்க!

தோன்றும் உருவம் இலாதநின்னை
உருவின் வைத்துத் தொழுகின்றேன்!

ஏன்றிங் கியம்ப வொணுதநின்னை
எளியேன் புகழ முயல்கின்றேன்!

சான்றுய் எங்கும் பரந்தநின்னைக்
கோயில் சார்ந்து தடவுகின்றேன்!

—தமிழாக்கம், ந. ரா. முருகவேள்

பஞ்சாமிர்தம்

டி.என்.சுகிசுப்பிரமணியன்

நலம் பேணுவோம்

நலம்.

அற்புதமான சொல்.

சுயநலம்.

அசங்கியமான சொல்லாகும்.

நம்முடைய நலமான எண்ணங்களை, நலமான வாழ்நாளை மிகப் பெரிய சாதனைக்குப் பயன் செய்தல் வேண்டும். நாம் உலர்ந்து சருகாகப் போய் உதிர்ந்து போகு முன்னதாக, சமுதாயத்திற்கு நாம் பயன்படுதல் வேண்டும். உதிரும் சருகுகள் கூட எருவாகி, மண்ணுக்கு உரம் தருகின்றன; மற்றொரு செடிக்கு வளம் தருகிறது.

மனிதனும் அவன் மனமும்?

தன்னலத்தை மறந்துவிட்டால், அதுவே இன்பமாகும். பிறர் வாழ உரம் தரும் உறு துணைச் செயலாகும்.

இன்பம்? இது என்ன வென்று ஒருவர் மற்றொருவருக்கு விளக்கிச் சொல்ல முடியாது. இன்பம் என்பது தனி மனிதன் மன மகிழ்ச்சி யாகாது. இருவர் பங்கு வைக்க வேண்டியது எதுவோ இன்பம்; உதாரணம் காதல். இருவருக்கும் மேலாகப் பலரும் சேர்ந்து அடையும் பணிகளே மிகச் சிறந்த இன்பமாகும்.

உடலைச் சார்ந்த இன்பத்திலும் உளம் சார்ந்த இன்பம் பேரின்பமாம்.

தனி மனிதன் — பொது வாழ்க்கையில் மூழ்கிவிட்டால், தன்னைச் சந்தனக் கட்டையாக அரைத்துக் குறைத்துக் கொண்டால், பிரம்மாண்டமான காரியங்களைத் தூண்டும் சக்தியாக விளங்கினல், அதுவே அவன் பெறும் இன்பம்.

மக்கள் ; கருத்துக்கள்; காரியங்கள்; பணிகள் இவற்றில் ஈடுபடுவதும், பிறரை ஈர்த்து வந்து நிறுத்துவதும் இன்பத்தின் ஒரு பகுதியாகும்.

இன்பத்தை அடையும் ஆசையுள்ளவர்களுக்கு ஒரு வகைப் பசி இருக்க வேண்டும். வயிற்றுப் பசி அன்று. பிறருக்கு வழி காட்டும் அறப் பசி இருக்க வேண்டும். தனிமையில் உழலும் மனப்பாங்கும் இவர்களிடமிருந்து விடுதலையடைய வேண்டும். தம் குறிக்கோளைக் குன்றமெனச் சுமக்க வேண்டும்; சுடர் விடும் வண்ணம் செயலாற்ற வேண்டும்.

நன்மைக்குக் கூட்டஞ் சேர்க்கவல்ல மனப்பான்மையுள்ளவர்கள் தன்னலமில்லாத பெரியோர்கள். தீமைக்குக் கூட்டஞ் சேர்க்கும் திறமைசாலிகள் தன்னலமுள்ள நரிகள்.

உயிர் வாழ்க்கை என்பதே சமுதாயத்திற்கும் நமக்கும் நடக்கும் பேரம் நிரம்பிய வாழ்க்கைதானே.

வாழ்க்கை நமக்குப் பயனைத் தருகிறது. சமுதாயத்திற்கு நாம் பயனை நல்க வேண்டும்.

பிறரது நலத்துக்கு, நன்மைக்கு, வாழ்க்கைக்கு நம்மைக் கரைத்துக் கொள்வதில் இன்பம் இருக்கிறது; இனிமை இருக்கிறது; இதயமும் அதற்காக நம்மிடம் துடிப்புடன் இருக்கிறது.

துடிப்பை நிறுத்தி விட்டுத் துயரம் துயரம் என உழலாதீர்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே சமயப் பண்பாடு.

> ''பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
> இறப்பு நீங்கி இங்கு இன்பம் வந்தெய்தி
> விடும்.''
>
> — அப்பாடிகள்.

நன்மையும் தீமையும் :

உலகம் முழுவதும் நன்மை மட்டும் இல்லை. தீமையும் நன்மையும் விரவி வருவது உலக இயக்கம்.

ஒளி — இருள்

நன்மை — தீமை

வெற்றி — தோல்வி

பொறுமை — பொருமை

இவ்வாறு எல்லாம் மறையும், எதிர்மறையுமாகவே நடைபெறுகின்றன.

ஒருபால் உலகத்திற்கு நன்மை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

மற்றொருபால் உலகத்திற்குத் தீமைகள் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

உண்மைச் செடி வாடாமல், மெய்ம்மை எருவை இட்டுக் கொண்டிருக்கின்ற உலகில், பொய்ம்மைச் செடியை வளர்க்கக் கலப்பு உரம் தூவுகிறவர்கள் இருக்கிறார்கள்.

நன்மைக்குத் தீனியாகத் தீமை இருக்கிறது.

பொய்ம்மையும் புளுகுத் தன்மையும் இல்லாத இடம் இல்லை.

இதனை இனம் காண வேண்டும். இதனை இனம் கண்ட பின்பு, உண்மை ஒளிக்கு நெஞ்சாரச் சிறிது இடம் கொடுக்க வேண்டும்.

மனத்தில் இருக்கலாம் பொய்; செயலில் இருக்கலாம் பொய்.

இருந்த பொய்யை இல்லாதபடி ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எத்தனையோ நோய்கள் உலகில் இருந்தன. விஞ்ஞானிகள் இந்த நோய்களுக்கு மருந்துகளைக் கண்டுபிடிக்கிறார்கள். இதுதான் முயற்சியுள்ளவர்கள் செய்யும் அற்புதச் செயல்கள்.

தவறுகளைத் திருத்தவும், பொய்யைக் களையவும் மீண்டும் இவற்றுள் ஈடுபடாதிருக்கவும் மனத்திட்பத்தை நாட வேண்டும்.

இருக்கும் தவறுதலை உணர்வது ஒரு நிலை. இருக்க வேண்டிய உயர்ந்த பண்புகளை வேண்டி நிலை நிறுத்தப்படுவது அடுத்த நிலை.

ஒவ்வொரு மனிதனும் இந்த இரு நிலைகளையும் கடைப்பிடிக்கிறான். இவற்றில் வெற்றி பெறுவது சுலபம். முதலில், தன்னிடம் இருக்கும் குணக்கேடுகளைக் களைந்தெறிந்தாலே முக்கால்வாசி வெற்றி.

விளக்கை எடுத்து வந்தால் இருள் போன இடம் தெரிவதில்லை.

நம்மிடமுள்ள குறைபாடுகளை நாம் நீக்கிவிட்டால், ஒட்டடையடித்த வீடு போல சுத்த மனத்தவராய் விளங்குவோம்.

குறைகளையும் குரோதங்களையும் உணராமல் நிறைவுகளையும் நினைப்புக்களையும் வளர்த்துக்கொள்ள முடியாது. உள்ளம் பளிங்காக வேண்டும். உண்மை அங்கு ஒளி மயமாகக் குடியிருக்கும்.

''உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.''

அரசனா? ஆண்டவனா?

காந்தபுர நகரத்தில் ''ராஜா இருப்பதால் எல்லாம் சுபிட்சமாக நடக்கிறது; அவர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது''—இவ்வாறு சொல்லும் ராஜபக்தன் இருந்தான்.

அதே நகரத்தில் ''எல்லாம் முருகப் பெருமான் அருள்; அவன் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது''—இவ்வாறு சொல்லும் கடவுள் பக்தன் இருந்தான்.

இவ்விருவரும் அடிக்கடி சண்டைபோட்டுக் கொள்ளுவார்கள்.

ராஜபக்தி பலன் தரும் என்பான் ஒருவன்.

கடவுள் பக்தி பலன் தரும் என்பான் மற்றவன்.

மாறுவேடத்தில் வந்த அரசன் இவர்கள் இருவர் சண்டையையும் கவனித்தார்.

கடவுள் பெரியவரா?

தான் பெரியவரா?

இவ்வாறு சந்தேகம் அரசருக்கு எழுந்தது.

பூஷணிக் காய் ஒன்றை எடுத்துக் குடைந்தார். அதற்குள் சில தங்க நாணயங்களையும் வைரங்களையும் போட்டார். அதனைக் குடைந்தெடுத்த இடம் தெரியாமல் மூடியும் விட்டார்.

தம்மைப் புகழ்ந்த ராஜ பக்தனைக் கூப்பிட்டார். பரிசாகக் கொடுத்தார்.

அரசர் தந்த பூஷணிக் காயை எடுத்துக் கொண்டு நடந்தான். மகிழ்ச்சியும் அதிகம். வருகின்ற வழியில் அதனை ஒரு ரூபாய்க்கு விற்றுவிட்டு வீடு திரும்பினான்.

அதே வீதி வழியாகக் கடவுள் பக்தன் போனான். பூஷணிக் காயைப் பார்த்தான். கடையிலிருந்து ஒண்ணரை ரூபாய்க்கு விலைக்கு வாங்கினான். வீடு திரும்பினான்.

பூசணிக்காயைக் கறிக்காக நறுக்கச் சொன்னான்.

அதிலே பத்திருபது தங்க நாணயங்கள். சில வைரக் கற்கள்.

ஆச்சர்யம் தாங்கவில்லை! கடவுள் பக்தன் அதனைக் கடவுள் தந்ததாக நினைத்துப் பத்திரப் படுத்தி வைத்தான்.

மறுநாள் வந்தார்.

அரசர் கடவுள் பக்தனையும், ராஜ பக்தனையும் அழைத்து வர ஆள் அனுப்பினார்!

''உனக்கு ஒரு பூசணிக்காய் கொடுத்தேனே என்ன செய்தாய்?''

''அதை ஒரு ரூபாய்க்கு விற்றேன்.''

ராஜா வாயை மூடிக் கொண்டார்.

''அரசே! நேற்று நான் கடைவீதிக்குப் போனேன். அங்கே ஒரு பூசணிக்காய் வாங்கினேன். அதில் இருபது பவுன் நாணயங்களும் வைரக் கற்கள் பலவும் இருந்தன''—இவ்வாறு சொன்னான் கடவுள் பக்தன்.

''ஆண்டவன் அருள் மிகப் பெரிது. அரசன் அருள் பயனற்றது'' என்று அரசர் சொன்னார்.

ராஜபக்தனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இந்த நாட்டு மக்களை நான் அரசாட்சி செய்யவில்லை. ஆண்டவன் ஆட்சி செய்கிறான்'' என்று அரசன் சொல்லிவிட்டு, இருவருக்கும் பரிசுகள் கொடுத்து அனுப்பினான்.

''அவனன்றி ஓர் அணுவும் அசையாது.''
—தாயுமானவர்.

வேளிமலைக் குமார கோவில்

திரு. எஸ். பத்மநாபன்

''முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய'' சிலம்பு, முருகனின் சிறப்பிடங்களாகப் பாண்டி நாட்டுச்செந்தில், கொங்கு நாட்டுச்செங்கோடு, சோழநாட்டு வெண்குன்று, சேரநாட்டுத் திருவேரகம் என்ற நான்கையும் குறிப்பிடுகின்றது. அம்முருகனின் அருள் பெற்று அத்திருவருளைப் பிறரும் பெறுதல் வேண்டும் என்னும் நோக்குடன், முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நக்கீரரின் திருமுருகாற்றுப்படையில் அவனுக்கு உரியவை என்று ஆறுபடை வீடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றத்தில் சூரனை வென்ற வெற்றியைக் காணலாம். திருச்சீரலைவாயில் ஆறுமுகங்களையும் பன்னிரு கைகளையும் காண்கிறோம். திருவாவினன்குடியில் முனிவர்கள் உண்ணா நோன்பு இருந்து எலும்பும் தோலுமாகக் காட்சி தருகின்றனர். திருவேரகத்தில் மறை முழக்கம் கேட்கின்றது. அங்கு வழிபடும் அந்தணர் இயல்பை வேறு எங்கும் காணமுடியாது. அடுத்த பகுதியில் குறிஞ்சித் தலைவன் குன்றுதோறும் ஆடுதலைக் காண்கிறோம். ஆறாம் பகுதியாகிய பழமுதிர் சோலை, முருகவேள் விரும்பும் விழாக் களமாகத் திகழ்கிறது. இவ்வாறு நக்கீரர் முருகனின் ஆறுபடை வீடுகளை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இளங்கோவடிகளும் நக்கீரரும் நமக்குக் காட்டும் இடங்களுள், செந்திலும் திருவேரகமும் பொதுவாக அமைந்துள்ளன. திருவேரகம் என்பது தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமி மலை என்பர். ஆனால் தமிழகத்தின் தென் பகுதியான நாஞ்சில் நாட்டில் அமைந்துள்ள வேளிமலைதான் திருவேரகம் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. மேலும் வேலன் வேடனாகவும், விருத்தனாகவும் வந்து வள்ளியம்மையாரை மணமுடித்ததும் இந்த மலையிலேதான் என்பதற்கும் பல ஆதாரங்கள் கிடைக்கின்றன.

''சீர்கெழு செந்திலும், செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்'' என்று சிலப்பதிகாரக் குன்றக் குரவை கூறும் வேலவனின் நான்கு இடங்களுள் வெண்குன்றைச் சுவாமிமலை எனக் கூறி, திருவேரகம் மலை நாட்டகத்ததொரு திருப்பதிகளில் ஒன்று என்று உரைக்கிறார் அரும்பத உரையாசிரியர். மேலும் ''ஏரகத் துறைதலுமுரியன்'' (முருக 189) என்றவிடத்து, ஏரகம் மலை நாட்டகத்தொரு திருப்பதி என்று கூறுகிறார் நச்சினார்க்கினியர்.

இவற்றிலிருந்து வெண்குன்றே சுவாமிமலையென்றும், திருவேரகமும், வெண்குன்றும் வேறு வேறு திருப்பதிகள் என்றும், திருவேரகம் என்பது சுவாமிமலை அன்று என்றும் தெளிவாகப் புலப்படும்.

பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய அருணகிரி நாதர், சேர நாட்டை ஒதுக்கி வைத்துக் ''குடகாவிரிக்கு வடபாலார் திருவேரகம்'' என மலைமண்டலத்துத் திருப்பதியைச் சோழ மண்டலத்திற்குக் கொண்டு சென்றார். தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலை இயற்கையால் அமைந்த மலையன்று. செயற்கையாக அமைக்கப்பட்ட குன்றின்மேல்தான், சுவாமிநாதர் கோவில் அமைந்துள்ளது.

வேளிமலைக் குமாரகோவில், நாகர்கோவிலிலிருந்து பத்து மைல் வடக்கே இயற்கையாக அமைந்த மலையின் அடிவாரத்தில் சிறப்புடன் விளங்குகின்றது. இக்கோவிலைச் சூழ்ந்துள்ள புதிய வயல்களும், ஓங்கி வளர்ந்த தென்னை மரங்களும், இயற்கையான மலைகளும், காண்போர் மனத்தைக் கவர்வனவாம். இவ்வாறு இயற்கையன்னை களிநடம் புரியும் வேளிமலைதான், செவ்வேள் குமரனின் நான்காவது படைவீடான திருவேரகம் எனத் துணிந்து கூற முடியும்.

திரு ஏர் அகம் என்ற சொற்கள் சேர்ந்து திருவேரகம் என்றாயிற்று. நாஞ்சில் நாட்டின் மறு பெயர்தான் திருவேரகம். நாஞ்சிலும் ஏரும் ஒரே பொருள் குறிக்கும் இரு சொற்கள். ஏரினாலாகிய உழவுத் தொழில் மிகுந்தஇடமான நஞ்சை கொழிக்கும் நாஞ்சில் நாட்டில் அமைந்துள்ள வேளிமலையைத்தான் இளங்கோவடிகளும் நக்கீரரும் ஏரகம் என அழகுறக் கவிதை நயம்படக் கூறியுள்ளனர்.

தமிழகத்தில் தென் பகுதியாகக் குறுகிக் கிடக்கும் நாஞ்சில் நாடு, முன்பு மலைநாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இந்நாடு நாஞ்சில் வள்ளுவன் ஒருவனால் ஆளப்பட்டு வந்துள்ளது என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்துப் பாடற்றொகையான புறநானூற்றில் நமக்குச் செய்திகள் கிடைக்கின்றன. நாஞ்சில் வள்ளுவன், ஒருசிறைப் பெரியனார் (புறம் 137); மருதன் இளநாகனார் (புறம் 138, 139); ஔவையார் (புறம் 140); கருவூர்க்கதப் பிள்ளை (புறம் 380) என்னும் புலவர்களால்

பாராட்டப்பட்டவன். இவ்வாறு புலவர்கள் ஏத்தும் வள்ளுவனை ஆட்சித் தலைவனாகக் கொண்ட நாஞ்சில் நாட்டின் எல்லையை அழகிய பாண்டியபுரம் பெரிய முதலியார் வீட்டு ஓலைப் பிரமாணங்கள், ''மங்கலம் முதல் மணக்குடி வரை'' எனக் குறிப்பிடுகிறது. மங்கலமென்பது விளவங்கோடு வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூர். வள்ளுவன் கோடே விளவங்கோடாகத் திரிந்தது என்பர். கோடு என்பது மலை. இம்மாவட்டம் மலையும் மலைசார்ந்த இடமுமாக இருப்பதால் கட்டிமாங்கோடு, மேலாங்கோடு, திக்கணங்கோடு, திருவிடைக்கோடு, இடைக்கோடு, தேவிக்கோடு, பன்றிக்கோடு, வெள்ளிக்கோடு போன்று கோடு என்னும் சொல்லை ஈறாகக் கொண்ட பல ஊர்களை இங்குக் காணலாம்.

வேளிமலை, மலைநாட்டகத்தொரு பகுதியென அங்கிருந்து மூன்று மைல் வடமேற்கே உள்ள கேரளபுரத்திலே ''மலைமண்டலத்து செழுங்கழு நீர்வள நாட்டில் நயினுர் முத்தளக்குறிச்சியான ஸ்ரீ வீரகேரளபுரத்துக் கோவிலில் .....'' என வரும் கல்வெட்டும், அதனை அடுத்துள்ள திருவிதாங்கோட்டில் கிடைத்த ''மலை மண்டலத்து திருவிதாங்கோட்டு இரவிவன் மராய குலசேகரப் பெருமாள் பெருந் தெருவில் செட்டு வேலாயுதப் பெருமாள்...'' என்ற கல்வெட்டுத் தொடரும், வேளிமலையிலிருந்து பத்து மைல் வடகிழக்கே உள்ள திரு நந்திக்கரையில் அகப்பட்ட ''இராஜாதித்த தேவர் பெரும்படை நாயகர் மலைநாட்டு நந்திக் கரைப் புதூர் . . .'' என்ற தொடரும் தெரிவிக்கின்றன.

திருவேரகத்தில் வழிபடுபவர்களை நக்கீரர் ''புலராக் காழகம் புலர உடீஇ உச்சிக் கூப்பிய கையினர்'' என்று கூறுகிறுர். நக்கீரர் சுவாமி மலையை ஏரகம் எனக் கூறியிருப்பின், சுவாமி மலை அருகே ஓடும் காவிரியாற்றைப் பெயர் சூட்டிப் பாடாவிட்டாலும் ஆறு என்ற அளவிலாவது பாடியிருப்பார். ஆனல் புலவரின் கூற்று, இங்கு ஏதோ சிறு நீர்நிலையில் நீராடிய உணர்வையே தருகின்றது. நக்கீரரின் கூற்றுக்கு ஏற்றாற்போலக் காலைப் பொழுதில் கோவிலின் அருகிலுள்ள ஒரு நீர்நிலையில் ஆடவரும், பெண்டிரும் நீராடி, நனைந்த உடையானது உடம்பிலே தோய்ந்து உலரும்படியாக உடுத்து, இரு கைகளையும் தலைமேல் குவித்து வேளிமலைக் குமரனை வழிபடுவதை இன்றும் காணலாம். இச்சிறப்பை வேறு எந்தப் படை வீட்டிலும் காணமுடியாது. எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் குறிப்பாகத் தமிழ்மாதத்துக் கடைசி வெள்ளிக்கிழமைகளில் (ஒடுக்கத்து வெள்ளிக்கிழமை) இங்கு வந்து வணங்கும் முருக பக்தர்கள் ஏராளம். கேரள நாட்டு மக்கள் வேளிமலைக் குமரனைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். குமரனின் திருவடியிலே மலர்களை இட்டு வணங்குகின்றனர். அவ்வழிபாட்டைப் பெரிதும் உவந்து ஏற்று அவ்வூரிலேயே முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கிறுர். இதைத்தான் நக்கீரர் ''விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து ஏரகத் துறைதலும் உரியன்'' என்றுர். வேளிமலைக் குமாரகோவிலிலே நடைபெறும் புஷ்பாபிஷேகம் மிகவும் பிரசித்தி பெற்றது.

இங்குள்ள அர்ச்சகர்களை நக்கீரர் ''உயர் குடியில் தோன்றி நாற்பத்தெட்டாண்டுகள் பிரம்மச்சரியங் காத்து அறங்கூறும் கொள்கையும் நாடோறும் முத்தீயோம்பும் முறைமையும் உடைய இரு பிறப்பாளராகிய வேதியர்'' என்கிறுர். இவ்வட்டாரத்திலுள்ள திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவிலிலும், திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலிலும் பூசை செய்யும் அர்ச்சகர்கள் கோவிலை விட்டுச் சில ஆண்டுகள் வெளியே செல்லக்கூடாது என்ற கடுமையான சட்ட திட்டத்திற்கு உட்பட்டுத் தங்கள் வாழ்வைத் தெய்வப் பணிக்கே அர்ப்பணித்துள்ளதை நாம் இன்றும் காணலாம்.

இனி வேளிமலைக் குமாரகோவிலினுள் நுழையலாம். மலையின் அடிவாரத்திலிருந்து 38 படிகள் ஏறிச் சென்றுல் கோவிலை அடையலாம். முகமண்டபத்தின் இருபுறமும் வீரபாகுவும், வீரமகேந்திரரும் நிற்கின்றனர். வீரபாகுவை அடுத்து வள்ளியம்மையாரை மணம் முடிக்க உதவிய கலியாண விநாயகர் அமர்ந்துள்ளார். எட்டடி எட்டு அங்குலம் உயரம் உள்ள மூலவரான முருகன், இங்கு வரதஹஸ்தத்தில் விசுவரூபத்துடன் நின்றிருக்கின்றுர். அவரது இடது பக்கத்தில் நிற்கும் வள்ளியம்மையாரின் உயரம் ஆறுஅடி இரண்டு அங்குலம். இங்குக் காணும் முருகன், வள்ளி உருவச் சிலைகளைப் போன்று வேறு எங்கும் காணமுடியாது. திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை அம்மையாரைத் திருமணம் செய்து கொள்ளும் தோற்றத்தில் காட்சியளிப்பது போல் இங்கு வள்ளி அம்மையாருடன் வேலவன் காட்சி தருகிறுர். முதல் பிராகாரத்தின் தென்மேற்கு மூலையில் இளையவராகவும், வடமேற்கு மூலையில் மணவிடகுமாரராகவும் முருகவேளைக் காணலாம். மூலவரை அடுத்து நந்தியோடு கூடிய சிவனது சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. ஆறுமுக நயினுரும் நடராசரும் தெற்கு நோக்கி நிற்கின்றனர். வேங்கை மரத்திற்காக அமைந்த தனிச் சந்நிதியும் தெற்கு நோக்கியே உள்ளது. இம்மரம்தான் குமாரகோவிலின் ஸ்தலவிருட்சம். ''வேங்கையின் உருவமாகி வேற்படை வீரன் நின்ற'' இடமேதான், வேங்கை மரச் சந்நிதி என்பர். மேலும் நடராசரும், வேங்கை மரச் சந்நிதியும் அடுத்திருப்பது ''வேங்கை உரித்த பரம்பரன் மாமகன் வேங்கையுருக் கொளவே'' என வரும் கந்தபுராணத்து அடிகளை நமக்கு நினைவூட்டுகிறது.

கோவிலிலிருந்து இரண்டு மைல் தொலைவில் மலையின் மேல் திருக்கலியாணமண்டபம் உள்ளது. வள்ளியம்மையாரின் திருவுருவத்தைக் கொண்டுள்ள ஒரு குகைக் கோவிலையும் அங்குக் காணலாம் அதனை அடுத்துத் தினைப்புனம், வள்ளிச்சோலை, வட்டச்சோலை, கிழவன்சோலை என்றழைக்கப்படும் இடங்கள் உள்ளன. இவையெல்லாம் வேளிமலைக் குமாரகோவில் தேவத்தானத்திற்கு உரிமைப்பட்டவை. வேளிமலையின் அருகே ஓடும் ஆறும், வள்ளியம்மையாரின் பெயராலேயே அழைக்கப்படுகிறது. இத்திருக்

கோவிலில் நடைபெறும்திருவிழாக்களில் சிறந்து விளங்குவது வள்ளியம்மையாரின் திருக்கலியாணம்தான். அந்நாளிலே முருகப் பெருமான் மலைமேல் எழுந்தருளி வள்ளியை அழைத்துவர, அதுகண்ட குரவர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்திப் போர் புரியும் காட்சி காணத் தக்கது. இப்போர் நடைபெறும் இடம் ''குறவர் படுகளம்'' என்றழைக்கப்படுகிறது. இப்போர் நிகழ்ச்சிகளில் அம்மலைப் பகுதிகளில் வாழும் குறவர் இனத்தவர்களே கலந்து கொள்வர். அவர்களுக்கு தேவத்தானத்திலிருந்து ஆண்டு தோறும் ''படித்தரம்'' அளிக்கப்படுகிறது.

முருகப் பெருமானுக்குக் காதல் வேள்வி நடந்த இடமானதால், இவ்விடம் வேள்வி மலை என்றழைக்கப்பட்டு, அதுவே நாட்படவேளி மலையாயிற்று என்று கருத இடமிருக்கிறது. இம்மலையைத்தான் திரிகூடராசப்பக் கவிராயர் தமது குற்றாலக் குறவஞ்சியில் ''நாஞ்சில் நாட்டு வேள்விமலையம்மே'' எனக் குறிப்பிடுகிறார். அதனைத் தொடர்ந்து ஐங்கரன் யானையாக வந்து, வள்ளியைப் பயமுறுத்திய விளையாட்டுக்களையும், தினைப்புனத்தில் வேலவன் வேங்கை மரமாக மாறியதையும், வள்ளியம்மையாரை அவன் மணமுடித்ததையும்,

''வெருவிவருந் தினைப்புனத்திற்
பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில் மறைத்த
பாங்குதனைக் குறித்தே
அருள்இலஞ்சி வேலர் தமக்கொரு
பெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகளெல்லாம்
சீதனமாகக் கொடுத்தோம்''

எனக் கவிராயர் அழகுறக் கூறியுள்ளார். வேளிமலை வட்டாரத்தில் யானைக் கூட்டங்களை நாம் இன்றும் காணலாம்.

கந்தபுராணத்திலே ''இவ்வரையில் குமரித்துறை ஆடுற வந்தனம்'' என்று குமரித் தீர்த்தத்தின்கண் பாவம் நீங்க நீராட என்றும், வள்ளியாகிய குமரியுடன் துயர் நீங்கி இன்பமுற என்ற பொருளும் தொனிக்க வள்ளியை நோக்கி விருத்தன் குறிப்பிட்டது, குமரியம் பெருந்துறையிலிருந்து இருபது மைல் வடக்கிலுள்ள வேளிமலைதான் என்பதே மிகவும் பொருந்தும். வேளிமலைக் குமரனுக்குத் தேனும், தினை மாவும் முக்கியமாகப் படைக்கப்படும் நிகழ்ச்சியும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

நாஞ்சில் வள்ளுவனை நாஞ்சில் குறவன் என்றழைப்பர். நாஞ்சில் குறவனைப் பற்றிக் குறிப்பாகக் கோணங்கிக் குறவனைப் பற்றிய சில செய்திகள் நாகமையாவின் திருவிதாங்கூர்ச் சரிதத்தில் கிடைக்கின்றன. அழகிய பாண்டியபுரத்தின் பக்கத்தில் குறத்தியறை என்ற ஊர் இருப்பதையும், அங்கே குறவன்தட்டுவிளை என்ற நிலப்பகுதி இருப்பதையும் அது குறிப்பிடுகிறது. குறவன் குறத்தி வாழ்க்கையை வைத்துப்பின்னப்பட்ட திருக்குற்றாலக் குறவஞ்சி தோன்றியது—நெல்லை மாவட்டத்திலேதான். இவற்றை நோக்கும்போது நாஞ்சில் நாட்டிலும் அதை அடுத்துள்ள நெல்லை மாவட்டத்தின் தென் பகுதியிலும் ஒரு காலத்தில் குறவர்களின் ஆதிக்கம் சிறப்புற்று ஓங்கியிருந்தது என்பது அறியப்படும்.

நெல்லை மாவட்டத்துத் திருக்குறுங்குடியில் வள்ளி நாய்ச்சியார் தோன்றினர் என்றும், அப்பகுதியை ஆண்ட நம்பிராஜன் என்ற வேடர் தலைவனால் வளர்க்கப்பட்டார் என்றும், தமிழ்நாடு அரசாங்க அறநிலையத் துறையினரால் வெளியிடப்பட்ட ''நெல்லை மாவட்டக் கோவில் வரலாற்றி''லிருந்தும் அறியலாம். (பக்கம் 217). வள்ளியூரும் நம்பித் தலைவன் பட்டயம் என்ற சிற்றூரும், இவ்வட்டாரத்தில் ஓடுகின்ற நம்பியாறும் இதனை உறுதிப்படுத்துகின்றன. நாஞ்சில் குறவர்களும் நம்பிராசனும் அடுத்தடுத்து வாழ்ந்ததால் அவர்களுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கவேண்டும். அத்தொடர்பினால் வள்ளியம்மையார் தினைப்புனங் காக்க வேளிமலை வந்தடைந்தார்என்றும் அதைத் தொடர்ந்து வள்ளித் திருமணம் அங்கு நடந்திருக்கிறது என்றும் கொள்ளலாம்.

மேற்கூறிய ஆதாரங்களிலிருந்து வேளிமலைக் குமாரகோவில்தான் திருவேரகம் என்பதும், வேலவன் வள்ளியம்மையாரை மணம் முடித்ததும் இம்மலையிலேதான் என்பதும் ஐயமற விளங்குவனவாம்.

***

காந்தி சமாதான நிறுவனம் (தஞ்சாவூர் கேந்திரம்-திருவாரூர்)

காந்தி அடிகளின் 106-ஆவது பிறந்த நாளை ஒட்டி, தமிழ்நாடு உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நடத்திய கட்டுரைப் போட்டியில், **திருவெண்காடு-அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயில்** ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில், பத்தாம் வகுப்பில் படிக்கும் மாணவர் **தெ. ஜவகர்குமார்**, முதற் பரிசு பெற்றுள்ளார். முதற் பரிசாகக் காந்தியடிகளின் திருவுருவம் பொறித்த தங்கப் பதக்கம் **(Gold Medal)** பரிசாக அளிக்கப்பட்டுள்ளது.

பி. அகோரமூர்த்தி, B.Sc., B.T.,
தலைமையாசிரியர்,
அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி
தேவத்தான ஆண்கள் உள்ர்நிலைப்பள்ளி,
திருவெண்காடு, சீர்காழி வட்டம்,
தஞ்சைமாவட்டம்.

ஈ. முத்துராமலிங்கம்,
செயலாளர்,
காந்தி சமாதான நிறுவனம்,
திருவாரூர்,
தஞ்சைமாவட்டம்

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் வகையரு திருக்கோயில், மதுரை.

விளம்பரச் செய்தி

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மகளிர் உயர்நிலைப்பள்ளிகள் இரண்டு, ஆலய நிதியிலிருந்து நடத்தப்படுகின்றன. ஏழை மாணவிகளுக்கு மதிய உணவு நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

2. கல்லுப்பட்டி காந்திநிகேதனில் மீனாட்சி இல்லம் 40 மாணவர்களுக்கு உணவு, உடை, விடுதி பள்ளிச் செலவுகளுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் நூல் நிலையம் ஒன்று தெற்காடி வீதியில் நடத்தப்படுகிறது. அன்பர்கள் பயன்பெறக் கோரப்படுகிறது.

4. யாத்ரீகர்கள், நவீன வசதிகளுடன் தங்க, மேலச் சித்திரை வீதியில் ''பிர்லா விஷ்ரம்'' என்ற பெயரில் நடத்தப்படுகிறது. கட்டிடம் கட்டும் செலவில் ஒருபகுதி தொழில் அதிபர் பிர்லா அவர்களால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. மதுரையிலுள்ள போது ''பிர்லா விஷ்ரத்தில்'' தங்கி ஆனந்தமடையுங்கள்.

5. ஆயிரங்கால் மண்டபத்தில் எழில்மிகு கலைக்கூடம் காண வாரீர்.

6. கடல்செங்குளம் பண்ணை திருக்கோயில் நேரடிப் பார்வையில் விவசாயம் நடைபெறுகிறது.

7. ஏழை மக்களுக்கு ஆலய நிதியிலிருந்து இலவசத் திருமணம் நடத்தப்படுகிறது.

8. திருப்பரங்குன்றத்தில் முதியோர் இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. இதில் ஆதரவற்ற பெண்களுக்கு உணவு, இருப்பிட வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

9. இத்திருக்கோயிலின் உபகோயில்களில் படைவீடுகளில் ஒன்று, திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம், இங்கு இரண்டு கலியாண மண்டபங்கள் உள்ளன. மண்டபம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 125/- வீதம் வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது.

10. சமயக்குரவர்களில் ஒருவரான அருள்மிகு மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த ஊரான திருவாதவூரிலுள்ள அருள்மிகு திருமறைநாத சுவாமி திருக்கோயில் இத்திருக்கோயிலின் உபகோயிலாகும்.

11. ஆலய நிதியிலிருந்து ஏழைக் குழந்தைகளுக்குக் காலை, மாலை இலவசமாகப் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

12. இத்திருக்கோயில் வெளியீட்டுப் புத்தகங்கள், திருவிளையாடற்புராணம் கும்பாபிஷேக மலர், மற்ற புத்தகங்களும் கும்பாபிஷேக வெள்ளி டாலர் முதலியன 'பிர்லா விஷ்ரம்' திருக்கோயில் கலைக்கூடம், திருக்கோயில் புத்தகக்கடையில் விற்பனைக்குக்கிடைக்கும்.

13. திருப்பரங்குன்றத்தில் 100 அனாதைச் சிறுவர்களுக்கு உறைவிடம் பள்ளிப் படிப்பு ஆகிய வசதிகளுடன் ஒரு ''கருணை இல்லம்'' நடத்தப்பட்டு வருகிறது.

14. இந்தத் திருக்கோயிலின் சார்பில் ஒரு தேவார பாடசாலை ஒன்றும், சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓதுவார்களுக்குப் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்கும் திட்டம் ஒன்று பரிசிலனையிலிருந்து வருகிறது.

15. பல இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள வைரக்கிரீடம், தங்கக் கவசம், அம்மனுக்குப் பிரதி திங்கட் கிழமை தோறும் சாத்தப்படுகிறது. மெய்யன்பர்கள் தரிசித்து ஆனந்தம் அடையுமாறு கோரப்படுகிறார்கள்.

16. ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும், தமிழ் வளர்த்த தலைநகர்—பாண்டிப் பழம்பதி—மதுரை மாநகரில் அன்பர்களுக்கு அருள் வழங்கும் அருள்மிகு மீனாட்சி, சொக்கநாதரைக் கண்டு வணங்கி அருள் பெற்று உய்யத் திருவாலவாய்க்கு வருகை தருவீர்களாக.

திரு. என். பொன்னப்பன்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. டி. தியாகையா,
திரு. ஆர். கோபால்சாமி,
திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,
திரு. எம். பி. என். பொன்னுசாமி,
அறங்காவலர்கள்.

ஆர். திருவேங்கடசுவாமி,
உதவி ஆணையர் மற்றும்
நிர்வாக அதிகாரி.

திருவண்ணாமலையும் கார்த்திகைத் தீப விழாவும்

ந. ரா. முருகவேள் M.A., M.O.L.

''அண்ணாமலை தொழுவார் வினை
வழுவா வண்ணம் அறுமே''
—சம்பந்தர்

''ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமது உள்ள வினைகளே''
—அப்பர்

முன்னுரை :

நமது அருமைத் தமிழ் நாட்டிற்குப் பெருமை தரும் எண்ணற்ற பல திருத்தலங்களுள், திருவண்ணாமலை மிகவும் தலைசிறந்த தொன்றாகும். பஞ்சபூதத் தலங்களுள், நெருப்புத் தலம் எனவும்; ஆறு ஆதாரத் தலங்களுள் மணிபூரகத் தலம் எனவும், இதனைப் பெரியோர்கள் விதந்து கூறுவர். சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம் என்று சமய இலக்கியங்கள் இதனைப் பெரிதும் புகழ்ந்து கூறும். இவ்வரலாற்றுக்கேற்ப நில நூல் அறிஞர்களும் (Geologists), இம்மலை நெருப்பினால் அமைந்தது — நெருப்புத்தன்மை உடையது (Igneous Rock) என்று ஆராய்ந்து கூறுகின்றனர்.

திருவண்ணாமலைச் சிறப்பு :

திருவண்ணாமலையை, அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய குரவர்கள், தமது திருப் பாடல்களில் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், இத்தலத்திலேயே தோன்றி வாழ்ந்து அருள் பெற்று விளங்கியவராவர். குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்களும், இங்கு வாழ்ந்து இத்தலத்தைப் போற்றியிருக்கின்றனர். இங்கு ஈசானிய மடம் என்பது அமைந்து, சிறந்து விளங்குகின்றது. குன்றக்குடி ஆதீனத்தின் முதற் பெருங் குரவராகிய தெய்வசிகாமணி தேசிகர் இந்தத் தலத்திலேயே தோன்றியவராவர். உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களாகிய சாமர் செட் மாம் (Somerset Maugham), பால் பிரண்டன் (Paul Brunton) முதலிய மேலைநாட்டுப் பேரறிஞர்கள் பலரும், வியந்து போற்றி மகிழ்ந்த சிறப்பு உடையவராகிய இரமண முனிவர் அவர்கள் வாழ்ந்து அமைத்த இரமணாசிரமமும், இத்தலத்திற்கு ஒரு பெரும் சிறப்பை அளிப்பதாகத் திகழ்ந்து வருகின்றது. சேஷாத்திரி சுவாமிகள் என்பவரும், இங்குத் தவம் செய்து அருள் பெற்றார்.

தலமும் கோயிலும் :

திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டத்தில், விழுப்புரத்திற்கு வடக்கே 42 கல் தொலைவில், விழுப்புரம்—காட்பாடி இருப்புப் பாதையில், ஒரு நிலையமாக உள்ளது. அண்ணாமலையார் கோயில், மலையின் அடிவாரத்தில் இருக்கின்றது. திருவண்ணாமலையில் நிகழும் கார்த்திகை விளக்கீடு பற்றிய குறிப்புக்கள், பண்டைச் சங்க நூல்களிலேயே ஆங்காங்கு அமைந்திருக்கக் காண்கின்றோம். நாட்டுக்கோட்டை நகரத்தார் இத்தலத்திற் பற்பல அறங்கள் செய்துள்ளனர். மாணிக்கவாசகர், திருவெம்பாவையும், திரு அம்மானையும் பாடிய தலம். மலைச்சுற்றில் 'அணி அண்ணாமலை' என்ற ஒரு கோயிலும் உள்ளது. அதனையும் சமயாசாரியர்கள் வழிபட்டுள்ளனர். இத்தலத்தில் மொத்தம் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன என்பர். இங்குள்ள வல்லாள மகாராஜன் கோபுரம், கிளிக்கோபுரம் என்பன குறிப்பிடத்தக்கவை. கிருஷ்ணதேவராயர், கி.பி. 1524-ஆம் ஆண்டில் ஆயிரக்கால் மண்டபத்தையும், எதிரிலுள்ள திருக்குளத்தையும், பதினொரு நிலைக் கோபுரத்தையும், வேறு சில திருப்பணிகளையும் செய்துள்ளார். கோயில் ஐந்து பெரிய பிராகாரங்களைக் கொண்டுள்ளது.

கிழக்கே இராசகோபுரம் (உயரம் 217 அடி); தெற்கே திருமஞ்சனக் கோபுரம் ; மேற்கே பேய்க் கோபுரம் ; வடக்கே அம்மணி அம்மாள் கோபுரம் ஆகியவை உள்ளன. கோயில் 25 ஏக்கர் நிலப்பரப்பு உடையது. பதினாறு கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், ஞானப்பால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், திருவருள் விலாச மண்டபம், மாதப் பிறப்பு மண்டபம், உருத்திராக்க மண்டபம், நந்தி மண்டபம், அமாவாசை மண்டபம், காட்சி மண்டபம், பன்னீர் மண்டபம், வசந்த மண்டபம், மகா மண்டபம், திருக்கல்யாண மண்டபம், புரவி மண்டபம் எனப் பற்பல மண்டபங்கள் இங்குள்ளன. சித்தி விநாயகர், மங்கல விநாயகர், கொத்தள விநாயகர், யானை திறை கொண்ட விநாயகர், சம்பந்த விநாயகர் எனப் பல விநாயகர்கள் இங்குள்ளனர்.

அருணகிரிநாதர் :

அருணகிரிநாதர் தம் உயிரை மாய்த்துக் கொள்ள, வல்லாள மகாராஜன் கட்டிய கோபுரத்திலேயே ஏறிக் கீழே குதித்தனர் என்பர்.

அப்பொழுது அவரைக் காப்பாற்றிய முருகன், 'கோபுரத்து இளையனார்' என வழங்கப்படுகின்றார். 'அதல சேடனா ராட' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடிப் பிரபுட தேவ மகாராயர் (கி.பி. 1428—1446) என்னும் விசயநகர அரசருக்கு, முருகனின் தரிசனம் கிடைக்கும்படி செய்தார், அருணகிரி நாதர் என்பது வரலாறு. அங்ஙனம் தரிசனம் வழங்கிய முருகனே 'கம்பத்து இளையனார்' எனப்படுகின்றார். அருணகிரி நாதர் சம்பந்தாண்டான் என்பவனோடு வாது செய்து, பாரி சாத மலரைக் கொணரக் கிளி வடிவம் கொண்டு விண்ணுலகம் சென்று திரும்பினார் என்பது வரலாறு. இவ்வரலாற்றை நினைவூட்டும் முறையில், கிளி உருவம் அமைந்த கிளிக் கோபுரம் விளங்குகின்றது.

கல்வெட்டுக்கள் :

சேரர், சோழர், பாண்டியர், பல்லவர், இராஷ்டிரகூடர், ஒய்சளர், துளுவர் முதலிய அரசர்களின் கல்வெட்டுக்கள் பல இக்கோயிலில் காணப்படுகின்றன. இக்கோயிலில் மொத்தம் 125 கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவைகள், சோழப் பேரரசனாகிய முதற் பராந்தகன் காலம் முதல், விசய நகர மன்னர் மரபைச் சார்ந்த சதாசிவ ராயர் காலம் வரையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகும். அவைகள் நமது தமிழக வரலாற்றின் ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை புரியக்கூடியன.

இக்கோயிலின் முதற் பிராகாரத்து வட சுவரிலுள்ள மூன்றும் இராசராசன் (கி.பி. 1216—1246) காலத்துக் கல்வெட்டு ஒன்றின் துணை கொண்டே, சிவஞான போதம் அருளிய ஆசிரியர் மெய்கண்ட தேவரின் காலம் (கி.பி. 1232), ஆராய்ந்து உறுதி செய்யப்பெற்றது. சைவ எல்லப்ப நாவலர் பாடிய அருணசல புராணம் மிக்க சிறப்பு வாய்ந்த நூலாகும். தலவிருட்சம் மகிழ மரம். சுவாமி அண்ணாமலையார், (அருணசலேசுவரர்) ; அம்பிகை உண்ணாமுலையம்மை (அபீதகுசாம்பாள்).

நினைக்க முத்தி தரும் தலம் :

திருவண்ணாமலையின் தன்னிரகற்ற பெருஞ் சிறப்பினை, நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் வலியுறுத்தி யுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர் ; தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காசி; ஆனால் நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை என்பது, நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

''துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்
துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
உவப்புடன் நிலைத்து மரிக்கும் ஓர்பதியும்
ஒக்குமோ நினைக்கும்நின் நகரை?''

என இத்தலத்தின் சிறப்பைச் சிவப்பிரகாச சுவாமிகள், திறந்தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்து மகிழ்ந்துள்ளார். இவ்வாறே இற்றைக்குச் சற்றேறழத்தாழ 1,300 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கியிருந்த திருஞான சம்பந்தப் பெருமானும், திருவண்ணாமலை நினைக்க முத்தி தரும் தலம் என்பதனை,

''எனைத்தோர் ஊழி அடியார் ஏத்த
இமையோர் பெருமானார்,
நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும்
நிமலர் உறைகோயில்,

கனைத்த மேதி காணாது ஆயன்
கைம்மேற் குழல் ஊத
அனைத்துஞ் சென்று திரளும்
சாரல் அண்ணாமலையாரே ''

என்று, தமது தேவாரத் திருப்பதிகத்தில் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தல், சிந்தித்து உணர்தற்குரியது.

திருவண்ணாமலையில் சிவபெருமான் :

(1) சிவபெருமான் திருவண்ணாமலையில் மலைவடிவம் கொண்டு திகழ்தலைக் குறித்துப் பின்வருமாறு துறைமங்கலம் சிவப்பிரகாசர் பாடுகின்றார் : — ''மனத்திற்கும் எட்டாத நுண்ணியன் என்று மறையாகமங்கள் எல்லாம் கூறும் குறையறும்படி உலகுயிர்களெல்லாம் தம் கண்களால் கண்டு மகிழும் வண்ணம், மிகவும் பெரிய மலையுருவில்—அதிதூல வடிவில்—இறைவன் இங்கு எழுந்தருளி விளங்குகின்றான்.''

''கருத்தினும் கருத அரியநுண்ணியன் என்
கடன்அற உலகெலாம் காண்பான்
தரித்து அதிதூல வடிவுறும் சோண
சயிலனே கயிலை நாயகனே.''

(2) காலம் தவறாமல், உரிய நேரம் உணர்ந்து கோயிலுக்குச் சென்று, முறைப்படி மக்கள் நம்மைத் தரிசித்து உய்தல் அரிது. ஆதலின் அவரவர்கள் தாம் தாம் இருந்த இடத்தில் இருந்தே, நம்மைக் கண்டு வணங்கி உய்தி எய்துக! என்றே, இறைவன் இங்கு மிகப் பெரிய மலைவடிவுடன் திகழ்கின்றான்.

''காலம் நன்குணர்ந்து சினகரம் புகுந்து
காண்பரிது என உலகனைத்தும்
சாலநின் றுழியே கண்டிடும் சோண
சயிலனே கயிலை நாயகனே.''

(3) ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில் இருக்கும். அக்கோயிற் கருவறையில் சிவலிங்கம் விளங்கும். அது போன்று, இவ்வண்டமே ஓர் ஊர் எனக் கொளின், அண்டத்தின் சுவர் மதிலாகவும், அண்ட வெளிப்பரப்பு கோயிற் பரப்பாகவும், திருவண்ணாமலைத் தலம் கோயிற் கருவறையாகவும், மலை அக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகவும் திகழ்கின்றது.

''ஏருலாம் அண்டச் சுவர்மதில் மிசைப்பால்
இலங்குறும் அண்ட கோளகையாச்
சாரும் ஆலயத்தின் இலிங்கமாம் சோண
சயிலனே கயிலை நாயகனே.''

(4) சிறந்த மலைகளில் சுனைகள் இருக்கும். அவற்றில் குவளை முதலிய மலர்கள் பூக்கும். அவற்றை மலையரமகளிர், வான் அர மகளிர் முதலிய தேவ கணத்தார் பறித்து அணிந்து மகிழ்வது உண்டு. ஆனால் திருவண்ணாமலை மலையிலுள்ள சுனைகளிற் பூக்கும் மலர்களை,

வானவர்கள் எவரும் சூடுதற்கு அஞ்சுவர். ஏனெனில் இம்மலை பிறமலைகளைப் போல்வது அன்று. இறைவனே மலைவடிவம் கொண்டு விளங்குகின்றான். ஆதலின், இம்மலைச் சுனை களிற் பூக்கும் மலர்களை, இறைவனின் திரு மேனியிற் சாத்தப்பெற்ற நிருமாலியப் பொருள் களுக்கு உரிமையுடைய சண்டேசுவரர் ஒருவரே, மகிழ்ந்து ஏற்று அணிந்து கொள்ளும் தகுதி யுடையவர் ஆவார்.

வண்டுழும் குவளை மலர்த்தடஞ் சுனையின்
மற்றைவா னவர்க்கு உரித்தன்றிச்
சண்டிஉள் மகிழ்ந்து கொளமலர் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(5) உயிர்கள் உணர்த்த உணரும் தன்மை யன. தாமே ஒன்றை யுணர்ந்து கொள்ள வல்லன அல்ல. யாம் காட்டி உணர்த்தினால் தான், உயிர்கள் ஒன்றைக் காண இயலும். இவ்வுண்மை, யாம் இத்துணைப் பெரிய மலை வடிவமாகத் தோன்றியும், அயனும் மாலும் எம்மை உணர்ந்து கொள்ள இயலாமையால் தெளியப்படும் என்று, உலகுக்கு அறிவுறுத்தவே இறைவன் மலை வடிவில் ஓங்கி உயர்ந்து எழுந்து விளங்குகின்றான்.

யாம்முனர் மிகுபே ருருவமாய் வரினும்
இருவரும் உணர்த்திடின் அன்றித்
தாம் உணர்கிலர் என்று எழுந்துயர் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(6) மலைகளில் மேகங்கள் கவிந்து தவழ் தல் இயல்பு. திருவண்ணாமலையிலும் மேகங்கள் அங்ஙனம் மலைமேற் படர்ந்து தவழ்கின்றன. கறுத்த மேகங்கள் தவழ்வது, புகை சூழ்ந்தது போலக் காணப்படுகின்றது. புகையிருந்தால் நெருப்பு இருக்கும் அன்றோ? சிவபிரான் திரு வண்ணாமலையில் நெருப்பு வடிவமாக — சோதி சொரூபமாக—ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியாகத்தானே விளங்குகின்றான்! மேகங்கள் புகைபோலப் படர்ந்து தவழ்வதனா லேயே, இறைவனின் நெருப்புருவம் திருவண் ணாமலையில். மலைவடிவமாக அமைந்து விளங்கு கின்றது என உணரலாம்.

மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரும்
மலிதரு புகைஎன எழுந்து
தழலுரு வுண்மை விளக்குறும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(7) பிற மலைகள் எல்லாம் உடல் நோய் தீர்க்கும் மருந்திற்குப் பயன்படும் சில மூலிகை களை மட்டுமே பெற்றிருக்கும். ஆனால் திரு வண்ணாமலையோ, தன்னை உட்கொள்பவர் (தியா னிப்பவர்)களின் எல்லா நோய்களுக்கும் மூல காரணமான பிறவி நோயையே தீர்த்துவிடும் சிறந்த மருந்தாக விளங்கும்.

சினவும்நோய் மருந்து வேறுகொண் டிருக்கும்
சிலம்புகள் நாண, உட்கொள்வோர்
சனனநோய் மருந்தாய் எழுந்திடும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(8) இறைவன் கருணையுடையவன், மலை போன்ற பெருமையுடையவன். அதனால் அவனைக் ''கருணைமலை'' எனச் சான்றோர்கள் போற்றுவர். ''மன்னிய கருணை மலையே போற்றி'' என்று, மணிவாசகர் போற்றுதல் காணலாம். இறைவனுக்குரிய தசாங்கங்கள் என்பனவற்றில், அவனுக்குரிய மலையாக விளங் குவது ''கருணை'' என்னும் பண்பாகக் கொள்ள லாம். அதனால் இறைவனைக் குறிக்கும் ''கருணை மலை'' என்னும் தொடர், ''கருணையாகிய மலை யையுடையவன்'' என்றோ, 'மலைபோலும் கருணையையை உடையவன்'' என்றோ, அன் மொழித் தொகையாக வைத்துப் பொருள் கொள்ளப்படும். ஆனால் இறைவனே திருவண் ணாமலையில் மலை வடிவம் கொண்டு விளங்குத லின், அத்தொடர் ''கருணையை யுடைய மலை'' என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொள்ளக் கிடக்கின்றது.

மொழிதரு கருணை மலைஎனும் பெயர்அன்
மொழிஒரீஇ, வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(9) மற்ற மலைகள் யாவும் தம்மீது ஏறின வர்களுக்கு உலகைக் காட்டி மயக்கும். திரு வண்ணாமலையோ உலகை வெறுத்துத் தன்பால் அடைந்த அடியவர்க்குத் தன்னையே—சிவபரம் பொருளையே—காட்டி உய்விக்கும்.

தன்னை ஏறினர்க்குச் சகம்எலாம் காட்டும்
தரணியோ டிகலி, மேவினர்க்குத்
தன்னையே காட்டும் மலைஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(10) ஏனைய மலைகள் வீடு கட்டுபவர் களுக்கு மரங்களைத் தரும். திருவண்ணாமலையோ தன்னை நினைத்தவர்களுக்கு வீட்டையே — மோட்சத்தையே கொடுத்து வாழ்வளிக்கும்.

ஒவுறும் மனைசெய் பவர்கொள மரம்தாங்கு
ஓங்கல்கள் நாண, உன்னினர்க்குத்
தாவுறும் உயர்வீடு அளித்தருள் சோண
சயிலே கயிலை நாயகனே.

(11) இத்தகைய பற்பல சிறப்புடைமை யினாலன்றோ எத்தனை தலங்களுக்குச் சென்றா லும், அத்தலங்களுக்குரிய பதிகங்களிலெல்லாம் ஒன்பதாம் பாடலில், திருவண்ணாமலையின் சிறப்பினை மறவாமற் குறிப்பிட்டுப் புகழ்ந்து ஓதிப் பரவுகின்றார் திருஞானசம்பந்தர், எனப் பாடி மகிழ்கின்றார் சிவப்பிரகாசர்.

பூம்பொழிற் புகலிக்கு இறைவன்நா னிலம்சேர்
புண்ணியத் தலங்களின் அடைந்து
தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சயிலனே கயிலை நாயகனே.

கார்த்திகைத் தீபச் சிறப்பு :

இங்ஙனமெல்லாம் திருவண்ணாமலையின் சிறப்பினைப் போற்றிப் பாடும் சிவப்பிரகாசர், அங்கு நிகழும் கார்த்திகைத் தீபச் சிறப்புப் பற்றிப் பாடாமல் இருப்பாரா? அதனைத் தம் வாழ்நாளில் அவர் பலகாலும் தரிசித்து மகிழ்ந் திருப்பாரன்றோ? தாம் பலகால் தரிசித்து மகிழ்ந்த கார்த்திகைத் தீபத்தின் சீர்த்தியினை மிகவும் வியந்து போற்றி, அவர் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.

(1) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, புற இருளை மட்டுமேயன்றி, அதனைக் கண்டு வழிபடும் அன்பர்களின் அகஇருள் ஆகிய அறியாமையையும் போக்கி, மெய்யுணர்வு ஒளியை நல்கி நலம் புரிந்து விளங்குகின்றது.

கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்து நின்றெழுந்து விளங்குறுஞ் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(2) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்தின்கண் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப் பெறும் சிறு சிறு விளக்குப்போல் இல்லாமல், உலகம் முழுவதற்கும் இடப்பெற்ற ஒரு பெரும் ஒளி விளக்கு எனும்படி சிறந்து திகழ்கின்றது.

சீர்தரும் மணியின் அணிந்தன எனக்கட்
செவியும், ஒண் கேழலின் மருப்பும்,
சார்தரும் உலக விளக்குஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(3) திருவண்ணாமலையில் கார்த்திகை மாதத்தில், முழு நிலா நாளில், மலையுச்சியின் மீது பேரொளி விளக்கு ஏற்றப்படும் இனிய காட்சியானது, எவருள்ளத்தினையும் கவர்ந்து கொள்ளை கொள்ளும் மாட்சிமை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழு வெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும், அதனருகே செழுஞ்சுடர்ப் பேரொளி விளக்குச் சுடர்விட்டு எரிதலும், கவின்மிகுந்து, காண்பவர் உள்ளத்தைக்களி துளும்பச் செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர், செந்தாமரை மலரைப் போலவும், அதனை அடுத்து விளங்கும் முழுவெண்ணிலாவின் தோற்றம், அத்தாமரை மலரின் மருகு சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம் போலவும், அமைந்து காணப்படுகிறது.

மடலவிழ் மரைமாட்டு எகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(4) திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்கீடு, ஒரு கலங்கரை விளக்குப் (Light - house) போல, உயர்ந்து சுடர் பரப்பி ஒளி தந்து விளங்குகின்றது. அது பிறவி ஆகிய கடலைக் கடந்து, வீடுபேறு ஆகிய கரையினை அடைய விரும்புபவர், வழி தெரியாமல் ஏற்படும் திகைப்பு நீங்கித் தவவொழுக்கம் ஆகிய கப்பலைச் செலுத்தி உய்யும்படி உதவுகின்றது.

பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

முடிவுரை :

இத்தகைய பல சிறப்புகளை உடைய திருவண்ணாமலையையும், அங்கு நிகழும் கார்த்திகைத் தீப விளக்கீட்டு விழாவினையும், நாம் அனைவரும் அன்புடன் கண்டு வழிபட்டு, அண்ணாமலை அண்ணலின் அருளைப் பெற்று உய்ய முற்படுவோமாக!

—ஆசிரியர்.

கருணையா? கடவுளா?

கவியோகி சுத்தானந்த பாரதியார்

நம்மிற் பெரும்பாலோர், வெறும் பேச்சளவில் ஆத்திகர்களாகவும், செயல் நிலையில் பெரும் நாத்திகர்களாகவுமே இருந்து வருகின்றோம். சமயநெறிகள் போதிக்கும் உண்மை, நன்மை, ஒழுக்கம், அன்பு, இரக்கம் முதலியனவற்றை நம் வாழ்க்கையிற் புறக்கணித்து விடுகின்றோம். பொய்மையும், போலித் தன்மையும் நிறைந்த நமது வாழ்க்கையே நாத்திக உணர்வுக்கு வித்திடுகின்றது

"Almost all of us are atheists in practice, though we may profess belief in God. We may visit temples, attend services, repeat prayers; but we do all this with a kind of reverent inattention, or sacred negligence. We deny God's existence in every thing we do. If we are truly religious, we must live our religion. Militant atheism is the result of dishonest religion. True worship is in the service of suffering humanity."

— Dr. S. RADHAKRISHNAN

ஆதலின், இறைவனின் படைப்பாகிய உயிர்களிடத்திலெல்லாம் நாம் உண்மையன்பும், பரிவும் உடையவர்களாக விளங்குதல் வேண்டும்; "எவ்வுயிரும் நீங்காது உறையும் இறைசிவம் என்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு" என்னும் உயரிய கருத்தினை, நமது தமிழகப் பெருஞ்சான்றோர் **கவியோகி தமிழ் முனிவர் சுத்தானந்த பாரதியார்** அவர்கள், இக்கட்டுரையில் அழகுற இனிய முறையில் விளக்கியருள்கின்றார்கள்.

— ஆசிரியர்.

தாயுமானார் வேண்டுகிறார்: "எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே; வள்ளலார் 'தனிப்பெரும் கருணையே அருட் பெருஞ்ஜோதி' என்றார். "கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கு அடுத்த கடுந்துயர் அச்சமாதிகளைத் தவிர்க்கவே" அவர் வேண்டினார். வாழ்ந்தார். புத்தர் கடவுளைப் பற்றிப் பேசவேயில்லை. அவர் வானுலகம் சென்றபோது, மண்ணுலகைஎட்டிப் பார்த்தார்; மக்கள் துயரைக் கண்டு கருணைக் கண்ணீர் வடித்தார். அக்கண்ணீர் சக்தி வடிவெடுத்தது; அதையே சீனரும், ஜப்பானியரும் வணங்குகின்றனர். அத்தேவதைக்குக் "கொஞ் ஞின்" என்று பெயர்.

ஒரு நாள் நான் சைக்கிள் ரிக்ஷாவில் செல்ல நேர்ந்தது. வழியில் அண்ணா சிலையைத் தாண்டி, கருணாநிதியின் சிலை வந்த போது ரிக்ஷாக்காரன் நின்று வணங்கி, "கருணாநிதியே என்னைக் காக்கும் தெய்வம்" என்றான். அவன் பேசப் பேச, என் கருத்தில் எழுந்த உணர்ச்சிகளை இந்தச் சொல்லோவியமாகத்தீட்டுகிறேன். காந்தியடிகள் "உண்மையே கடவுள்; கடவுளைக் கூட மறுக்கலாம், உண்மையை மறுக்க முடியாது" என்றார். அதே மாதிரி கடவுளை மறுக்கலாம், மறக்கலாம், ஆனால் கருணையை மறக்க முடியாது. கருணையா? கடவுளா? என்று கேட்டால் கருணைதான் நமக்கு முன்னின்று உதவும். கருணையின்றிக் கடவுளில்லை.

நமது அமைச்சர் சிங்கம் கருணாநிதியைச் சிறு வயது முதலே அறிவேன். அவர் படிப்பினால் இல்லை; பகுத்தறிவுப் படிப்பினால், தமிழர் முன்னேற்றத் துடிப்பினால் உயர்ந்து இன்று தமிழுலகை ஆளும் தனிப் பெருங் கருணையாக விளங்குகிறார். அவர் வாழ்வையும் செயலையும் நான் தொலைநோக்கியால் கண்டு மகிழ்கிறேன். இனிக் கதைக்கு வருவோம்.

டே ரிக்ஷா!

படபடக்கும் வெய்யில். முனியன் நடை வண்டிக்கு ஆளைப் பார்த்து அலைகிறான். ஒரு பெரிய நாமக்காரர் மனைவியுடனே பெட்டி படுக்கைகளுடன் வருகிறார். அவர் திருப்பதி ஆண்டவனைத் தரிசித்து, பிரசாத மூட்டையொன்று மூடிக் கொணர்கிறார். அதை யாரும் தொடாமல் பாராமல் மிகக் கருத்துடன் கொண்டு வந்து வண்டி பேசுகிறார்.

"டே, ரிக்ஷா! என்ன கேட்கிறாய் தம்புச் செட்டித் தெருவுக்கு?"

"ஐந்து தந்திடுங்க, தருமராசா!" (ஐந்து விரல்களைக் காட்டுகிறான்).

"இரண்டுதான் தருவேன். சம்மதமா?"

"என்ன ஐயா! மலை போல நீங்க, அம்மா, பெட்டி, படுக்கை, பொட்டணம். இத்தனையும்

வைத்து இழுக்கும் இந்த ஒரு சீவனுக்கு ஐந்து தரக் கூடாதா?''

''முடியாது. மூன்று தருகிறேன்.''

''இன்னொரு ரூபாய் தாருங்க. பஞ்ச காலம். மனைவியும் நாலு பிள்ளைகளும் பிழைக்க வேண்டும். ஏழை வயிற்றில் அடிக்காதீங்க. அரிசி பருப்பு விலை என்ன . . காய்கறி விலை யென்ன?''

''வண்டி சரியாயிருக்கிறதா? குடை சாயாதே?''

இரண்டு ரூபாவுக்குத் தொங்கின பிடிவாதம், மூன்றில் மல்லாடுகிறது. முடிவில் ரிக்ஷாக்காரன் நான்கு ரூபாவுக்கு இசைகிறான்.

அடப்பாவி :

இழுக்கிறான். இருபதடி. சோர்ந்து போகிறான். சவாரியன் மிரட்டுகிறான். அத்தாடி யானைக் கனத்தை எப்படியிழுப்பேன். ஏஞ்சாமி. ஏஞ்சாமி. ரிக்ஷாக்காரன் அப்படியே அயர்ந்து விடுகிறான். சிறிது தேனீர் பருக வேண்டிச் செல்லுகிறான். அப்போது ஒரு காக்காய் வந்து பணியாரப் பையைக் கொத்திக் கீழே தள்ளுகிறது. சவாரி செய்பவன் ''டே டே ஓஞ்சு'' என்கிறான். பணியாரம் கீழே விழுந்ததும் ஒரு நாய் ஓடிவந்து அதில் வாய் வைக்கிறது. உடனே சவாரி-ஆள் 80 கிலோ உடலைத் தூக்கிக் கொண்டு ''கோவிந்தா'' போட்டுக்கொண்டு கீழே குதிக்கும்போது தவறி விழுந்து விடுகிறான். இந்தச் சமயம் ரிக்ஷாக்காரன் ஓடி வந்து அவனைத் தாங்கித் தூக்கிவிட்டு நாயை விரட்டி அடித்து, கீழே விழுந்த பிரசாதப் பொட்டணத்தை எடுக்கிறான். அதில் ஒரு லட்டு பாதி உதிர்ந்திருந்தது. அதை வாயில் போட்டுக் கொள்ளுகிறான்.

''அடடா—அட பாவி . . பெருமாள் பிரசாதத்தைத் தொட்டு எச்சில் செய்தாயேடா. ஹ ஹூம். . கோவிந்தா கோவிந்தா. இந்த நாத்திகப் பதர்களை என்ன செய்வது'' என்று பாய்கிறான். அம்மாளும் சேர்ந்து ''கட்டையிலே போறவனே. என்று கோவிந்தா'' போடுகிறாள்.

ரிக்ஷாக்காரன் ''ஐயா (சாமி என்ற காலம் மலையேறிவிட்டது). உமது பிரசாதத்தைக் காக்கை கொத்தி நாய் வாய்வைத்துச் சுவைத்து விட்டதே. நாயின் பிரசாதத்தையே நான் சிறிது உண்டேன். என்னைப் பாவி என்று திட்டுகிறீரே. முதல் பாவி யார்?'' என்று கேட்டு விட்டான்.

டே பயலே, போலீசில் மாட்டுவேன் :

''டே பயலே, இவ்வளவு துணிச்சலா உனக்கு? உன்னைப் போலீசில் மாட்டுவேன். இதோ. கூப்பிடுகிறேன் போலீசை'' என்று அவர் குதித்தபோது, பூணூல் இரும்புப்பெட்டி ஆணியில் மாட்டி அறுந்தது. ''கோவிந்தா கோவிந்தா ! என்று சிரித்தான். ''அட அயோக்கியா, எனக்கா கோவிந்தா போடுகிறாய்'' என்று நாமக்காரர் ''போலீஸ், போலீஸ்'' என்று கூச்சலிட்டார். ரிக்ஷாக்காரன் ''இல்லை ஐயா திருப்பதி பிரசாதத்துக்கும்நாய்க்கும்கோவிந்தா போட்டேன்'' என்று சிரித்தான். நான் ஒன்றும் செய்யலேங்க!

அந்தச் சமயம் உந்து வண்டி வந்தது ; ரிக்ஷா குறுக்கே இருப்பது கண்டு நின்றது. ''நிறுத்து'' என்றது ஒரு குரல். ரிக்ஷாக்காரன் நடுங்கிப் போனான். ஆம் முதலில் வந்தவர் இரண்டு காவல் வீரர். பின்னர் இறங்கியவர் சாதாரணமான தடுக்கு வேட்டியணிந்து மேலே ஒரு குடுத்துணி போட்டு, தோளில் ஒரு துண்டு போட்டுக் கொண்டிருந்தார்.

''இந்தத் தடுக்கு வேட்டி யார்? செய்தித் தாளில் பார்த்ததுபோல் இருக்கிறதே'' என்று நாமக்காரர் சிந்தித்தார்.

ரிக்ஷாக்காரன்: ஐயா, ஐயா. நான் ஒன்றும் செய்யலீங்க. இவங்க பணியாரம் காக்காய் கொத்திக் கீழே விழுந்துதுங்க. அதை நாய் வாய் வைத்துச் சாப்பிட்டது. எனக்கும் பசி நான் பாதி லட்டு சாப்பிட்டேன். அதற்காக இந்த நாமக்காரரு என்னைப் போலீசில் இஸ்துகினு போவேன்றுருங்க. நான் ஏழைங்க. வண்டி யிழுத்துப் பிழைக்கிறேனுங்க. படபடத்த வெய்யிலில் இந்த இரண்டு பேரையும் யானை குதிரை கூட இழுக்காதுங்க. ஐந்து ரூபா வாடகை கேட்டேன். சண்டை போட்டு நாலு ரூபாவுக்கு இசைந்தாருங்க.''

ரிக்ஷாவை இப்படியே வைத்துவிடு :

தடுக்கு வேட்டிக் காரர் : ''ஐயா, ரிக்ஷாவை இப்படியே விட்டுவிடும்.

ரிக்ஷாக்காரன்: அது தானே என்பிழைப்பு. நாளெல்லாம் இப்படிப்பட்ட பெரிய பூதங்களை இஸ்து இஸ்து வீட்டுக்குப் போனால், உடம்பெல்லாம் வலிக்கும். என் மனைவி உடம்பைப் பிடித்து விட்டு, தவிட்டை வைத்து வெதுவெதுப்பாக்கி ஒத்தடம் கொடுப்பாள். வெந்நீரிலே குளித்து விட்டு, கருணாநிதியை நினைத்து கேப்பைக் கூழ் உண்போம். எனக்கு வேறே தொழில் தெரியாதுங்க.''

கருணாநிதியையா ?

தடுக்கு வேட்டிக்காரர் : ''கருணாநிதியையா நினைப்பாய். அவர் என்ன செய்தார்?''

இதற்குள் அந்த வண்டியில் வந்த நாமக்காரர் காதைப் பொத்திக் கொண்டு ''அட வேங்கடரமணா . . இந்தப் பயல்கள் புத்தி இப்படிப் போச்சே . .டே ரிக்ஷா பரம நாஸ்திகனையா நினைப்பாய்? வெங்கடேசப்பெருமாளைப் பார்த்திருக்கிறாயா? திருப்பதிக்குச் சென்றது உண்டா? பாமரப் பயல்களா . . .எல்லாம் நாஸ்திகக் கூட்டம். சீ உன் வண்டியில் உட்கார மாட்டேன்.'' என்று இறங்கினார். அவர் மனைவி பெட்டியைத் தூக்கிக் கொண்டு பிரசாதத்தை மடியில் முடிந்து கொண்டு . .பின்னே நின்றாள்.

தடுக்கு வேட்டிக்காரர் காவலரை நோக்கி ''இவர்களை அதோ தெரியும் பெரியார் சிலை முன் நிறுத்து . . வேறெங்கும் விடாதே'' என்று உத்தரவிட்டார்.

சைக்கிள் வீரர் :

ரிக்ஷாக்காரன்: ''ஐயா, மனைவியும் நாலு பிள்ளைகளும் இன்று வயிறு பிழைக்க வேண் டுமே. சவாரிப் பணமில்லாது சாப்பிட முடி யாதே. ஐயா. நான் ஏழைங்க'' என்று அழுதான்.

தடுக்கு வேட்டிக்காரர் : ஐயா நீர் சைக் கிள் விடுவீரா? பெயர் என்ன?''

ரிக்ஷாக்காரன் : ''ஐயா, நான் சைக்கிள் விடுவேனுங்க. பழுது கூடப் பார்ப்பேனுங்க. என் பெயர் முனியனுங்க.''

இதற்குள் நாமக்காரர் ''நாஸ்திகப் பயல் கள். போங்கோ பெருமாள் தரிசனத்திற்கு. புத்தி வரும்'' என்று முணுமுணுத்தார்.

ரிக்ஷாக்காரன் : ''சாமி நான் சக்கிலி. கோவிலுக்குள்ளே போகக்கூடாது. யாரையும் தொடக்கூடாதுங்களே.''

நாமொரு குலமே :

தடுக்கு வேட்டிக்காரர் : ''முனியா அந்தக் காலம் போச்சுதப்பா. தெரியாதா? இப்போது எல்லாரும் சரி நிகர். தீட்டுக்கெல்லாம் வேட்டுப் போட்டாய் விட்டதே. தெரியாதா. நீ கோவிலுக்குப் போவதைப் பெருமாள் கூடத் தடுக்க முடியாதே?''

ரிக்ஷாக்காரன் : ''என்னமோ ஐயா, எனக்கு ஒரு பாட்டுத்தான்பிடிக்கிறது. எனக்குப் பெருமாளைத் தெரியாது. கருணைப் பெருமானைத் தெரியும். ''

உலகே கோவில்
உயிர்களே சாமி
நலமே பூசை
நாமொரு குலமே

நானும் பார்த்தேன். கல்லுச்சாமிக்குக் கைச்சாமி சாப்பிடுவதில்லை. பூப்போட்டு, தண்ணீர் சுற்றுகிறான் மனிதன். ஓம் அரகரானு சொல்லி, பொங்கலும் புளியோதரையும், தயிர்ச் சோறும், வடை பாயசமும் சாப்பிடுவது மனிதனே. சாமி மட்டும் பாதியைச் சாப்பிட்டு வந்தால், பிறகு படையல் இராது. ஆள் விழித்துக் கொள்வான். இல்லாவிட்டால் சாமியே படையலில் பாதி எடுத்து ஏழை எளிய வருக்குக் கொடுத்தால் ''ஐயோ'' என்பான். சாமி சாப்பிடுவதில்லை. அதனாலேதான் மணி யாட்டி, தீபதூபம் காட்டிவிட்டு, சோற்றைப் பட்டை போட்டு விற்றுவிடுகின்றனர். அல்லது வீட்டிற்கு எடுத்துச் சென்று உண்கின்றனர். எல்லாம் சாமி பார்த்துக் கொண்டுதானிருக் கிறது.

அடிமைத்தனம் ஒழிக !

தடுக்கு வேட்டிக்காரர் : ஹ ஹ ஹ . . . முனியா நீ நல்ல பகுத்தறிஞன். ஏ, நூற்று நாற்பத்தைந்து, நீ சென்று ஒரு சைக்கிள் ரிக்ஷா ஓட்டி வா. முனியா, நீ இனி வண்டி இழுக்க வேண்டாம். ஆளை ஆள் இழுத்துச் செல்வது அடிமைத்தனம். எந்த உருவிலும் அடிமைத்தனம் கூடாது. சொல், அடிமைத் தனம் ஒழிக! அடிமைத் தனம் ஒழிக'! சாதி மதம் சாமி, கோவில், பள்ளிக்கூடம் எங்கும் அடிமைத்தனம் கூடாது. எல்லாரும் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்''.

கிணுகிணு சைக்கிள் ரிக்ஷா :

இதற்குள் கிணுகிணு மணியடித்துக் கொண்டு ரிக்ஷா வந்தது. ''முனியா இதில் ஏறு. அந்த ஆள் உன்னைத் தாழ்வாகப் பேசியதற்காக மன்னிப்புக் கேட்டால் இதில் ஏற்றி வீடு சேர். இன்றேல் வேறு சவாரி பார்''.

நீயே கருணாநிதி :

முனியன் வயிறு குளிர்ந்தது.

டெலிவிஷனில் காட்சி

அதற்குள் வானொலிக்கு போனொலித்தது. டெலிவிஷன் படக்காரர் விரைந்தனர். நிகழ்ச்சி முழுவதும் அப்படியே படம் பிடித் தனர். நாமக்காரர் மனமும் மாறியது. பெரு மாள் பிரசாதத்தைப் பிட்டுப் பிட்டு எல்லா ருக்கும் தந்து ஒரு லட்டு தடுக்கு வேட்டிக் காரருக்கும் தந்தார். அவர் ''முனியா நீ உன் குழந்தைகளுக்குத் தா'' என்று தரும்போது ''கருணாநிதி வாழ்க!'' என்று கூட்டம்ஆரவாரம் செய்தது. முனியன் திகைத்தான். ''கருணையே கடவுள். கருணையே கடவுள்'' என்று காலில் விழுந்தான். கருணாநிதி அவனைத்தூக்கியணைத்து இனி யார் காலிலும் விழாதே. முனியா நான் கடவுளில்லை. கடவுளையும் கண்டதில்லை. உன்னைப் போன்ற ஏழையெளியவருக்கு என் னாலான தொண்டு செய்வதே என் வழிபாடு'' என்று ஐந்து நிமிஷம் கூட்டத்தை நோக்கி ஆரவாரக் குரல் கொடுத்தார்.

கருணாநிதி :

கருணைத் தொண்டே களிப்பு.

நான் ஏழையாகப் பிறந்தேன். ஏழையாக வளர்ந்தேன். ஏழைபடும் பாட்டைக் கண்டு இரங்கினேன். என் பெயர் கருணாநிதி. நான் என் முயற்சியில் தொண்டிற்குத் தொண்டு உயர்ந்தேன். இப்போது தமிழக முதலமைச்ச ரையிருக்கிறேன். எனக்கு இயன்ற நிதியினால் தமிழுக்கும் தமிழருக்கும், ஏழை எளியவருக் கும் தொண்டு செய்து மகிழ்கிறேன். கடவுளை நான் கண்டதில்லை. கருணையைக் காண்கிறேன். கருணைத் தொண்டிலே நான் களிப்புறுகிறேன்.

கருணையின் செயல்கள் :

கூட்டத்தில் பெரிய ஆரவாரம் எழுந்தது. ''கருணை வாழ்க! நான் கிழவன். இவர் தந்த ஊன்றுகோலால் நடக்கிறேன். நான் கைம் பெண். இவர் தந்த தையல் பொறியால் மானமாகப் பிழைக்கிறேன். என் பார்வை மங்கியது. இவரால் மருத்துவ உதவி பெற்றுக் கண் பார்வை அடைந்தேன். நான் தீண்டாப் பிள்ளை. இவரால் கோவில் வேலை பார்க்கிறேன். நான் மாணவன். இவரால் படித்து முன்னுக்கு வந்தேன். நான் திருக்குறள் அன்பன். இவரால் எங்கும் திருக்குறளைக் காண்கிறேன். வள்ளுவர் கோட்டத்தைக் கண்டு மகிழ்கிறேன். நான் சிலம்புப் புலவன் பூம்புகாரைக் கண்டு உளம் பூத்தேன். என்று பலர் கருணாநிதியைப் புகழும் போது முனியன் தனது சைக்கிள் ரிக்ஷாவைக் கிணுகிணு என்றொலித்து ''இந்தப் புண்ணிய வானால் நானும் அடிமைத்தனத்தை விட்டுப் பிழைத்தேன். கருணை வள்ளல் வாழ்க!'' என்றான்.

அங்கே ஒரு பாட்டெழுந்தது !

கருணையே கடவுள் கருணையே சமயம்
கருணையா ரமுதமே கல்வி!
கருணையே கடமை—கருணையே உடைமை
கருணையே யான்பெற்ற செல்வம்
இருளிடர் அச்சம் இனமனப் பகையால்
இடர்படும் உலகினுக் கெல்லாம்
அருளுடன்கருணைத் தொண்டுசெய்யின்பம்
அதனினும் இன்பமொன் றுளதோ?

—சுத்தானந்தபாரதி.

அருள்மிகு அண்ணாமலையார்
திருக்கோயில் திருப்பணிக்குழு

திருவண்ணாமலை : : வ. ஆ. மாவட்டம்

நினைக்க முக்தியளிக்க வல்லதும், பஞ்ச பூத ஸ்தலங்களுள் நடுநாயகமாக விளங்கக் கூடியதும் திரு அண்ணாமலை. இந்தியாவிலேயே மிக உயரமான 217 அடி உயரமுடைய இராஜ கோபுரத்தைக் கொண்டது இத்திருக்கோயில். உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலை அண்ணலின் வானளாவிய 7 கோபுரங்கள், விமானங்கள், ஸ்தூபிகள், மதில் சுவர்கள் ஆகிய திருப்பணி வேலைகளை நிறைவேற்றிப் பாக்கி வேலைகளையும் முடித்து, நிகழும் இராக்ஷச வருடம் பங்குனி மாதம் 22-ஆம் தேதி (4-4-76) ஞாயிறு காலை 8-15 மணி முதல் 9 மணி வரையில் ரிஷப லக்கினத்தில் குடமுழுக்கு விழா நடைபெறும். இதற்குத் தாங்கள் அருள் கூர்ந்து உடனே தங்கள் நன்கொடையை அனுப்பிவைத்துக் கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தி வைக்கப் பணிவுடன் வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,

T. V. சுப்பரமண்யம் செட்டியார்

தலைவர், அறங்காவலர் குழு.



மனித மனம்

கே. எஸ். ஜெகன்நாதன்

இல்லாத ஒன்றுக்காக ஏங்கித் தவிப்பது. சொல்லால் பிறரை வதைத்து வேடிக்கை பார்ப்பது.

உள்ளதை மறைத்துப் பொய்ம்மையாய் உலகில் வாழத் துடிப்பது.

இப்படிப்பட்ட மனித மனத்தை உருவாக்கி உலகில் நடமாட விட்டுப் பார்த்து ரசிக்கின்றான் ஒருவன். அவன்தான் இறைவன்.

இறைவனின் சந்நிதானத்தில் மனித மனங்கள் தங்களது ஆசைகளை நிறைவேற்றிடத் தினம் தினம் வந்து போகின்றன.

நம்பிக்கைகளே வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் தீர்மானிக்கிறது.

வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் அனுபவம் வித்தாகிறது.

அனுபவம் தருகின்ற வித்து நம்பிக்கைக்கு உரம் ஏற்றுகிறது.

உரம் மனித மனத்தைச் செழிப்பாக்குகிறது.

செழிப்பான மனித மனம் உயர்வானவைகளை எண்ணுகிறது.

உயர்வான எண்ணங்கள் உயர்வான செயல்களுக்கு மூலமாகிறது.

இவைகளே நம்பிக்கைப் பெருக்கத்திற்கு காரணமாகிறது என்று உணர்கிறோம்.

உணர்வுகள் பெருகப் பெருக நம்பிக்கைகளை ஒவ்வொன்றிலும் அழுந்த வைக்கிறது.

நம்பிக்கைகள் ஒவ்வொன்றிலும் அழுந்த அழுந்த மனித மனம் ஆசைகளின் பக்கம் செல்கிறது.

ஆசைகள் மனித மனத்தை அலைக்கழிக்கத் துவங்குகிறது.

''ஆசைதான் அழிவுக்குக் காரணம்'' என்பதை மனித மனம் மறந்துவிடுகிறது.

அதை மறந்துவிடும் போது அங்கே, தான், தனது என்னும் எண்ணம் மேலோங்கிவிடுகிறது.

இந்த எண்ணம் மேலோங்கும்போது மனித மனம் மற்றவர்களின் துயரங்களை, துன்பங்களை நினைக்க மறுக்கிறது.

தன்னுடைய எண்ணங்களுக்கு மட்டுமே வடிவம் கொடுத்து அழகு பார்க்க ஆசை கொள்கிறது.

நிரந்தரமான வெற்றிக்காக அது காத்திருப்பதில்லை.

கண நேரத்திற்காக எதையும் செய்திடத் துணிகிறது.

சாதகமான முடிவைக் கண்டு களிப்படையும் மனித மனம், எதிரான முடிவைக் கண்டு சோர்வு கொள்கிறது.

வாழ்க்கை முடிவற்ற சிக்கல் என்பதையே அப்போதுதான் உணர்கிறது.

மனச்சோர்வு மனிதனைப் புலம்ப வைக்கிறது.

தேரோட்டத்தின்போது சக்கரங்கள் உருண்டு உருண்டு தேய்கிறது.

வாழ்க்கை ஓட்டத்தில் மனித மனம் எண்ணி எண்ணிச் சோர்வு கொள்கிறது.

சோர்வு மனக்கவலையை வளர்க்கிறது.

இன்பம் எப்பொழுது வரும் என ஏங்க வைக்கிறது.

தரிக்கும் கவலைகள் அவனை அச்சுறுத்துகின்றன.

அதிகார தாகம் அவனை ஆட்கொள்ளும்போது அவன் ஆடம்பரத்தின் கைகளிலே சிக்கிக் கொள்கிறான்.

வாழ்க்கையின் சிக்கல்கள் இப்போது நர்த்தனமாடத் தொடங்குகின்றன.

மனம் நூறு விதமாகப் பார்க்கிறது. ஆயிரம் விதமாகக் குழம்பித் தவிக்கிறது. எதை எதையோ காணத் துடிக்கிறது. சிக்கல்களிலே

சிக்கித் தத்தளிக்கிறது. அந்தச் சிக்கல்களிலிருந்து விடுபட மனித மனம் போராடுகிறது. பரம்பொருளை நாடுகின்றது.

இன்பத்தில் துய்க்கும் மனித மனம் இறைவனை எண்ணிப் பார்க்க மறந்துவிடுகிறது.

சிக்கல்கள், சோதனைகள், வேதனைகள், சூழும்போது எங்கும் நிறைவான சோதியை மனம் நாடுகிறது.

மனம் நாடித் தொழும்போது ஒரு அமைதியைக் காண்கின்றது.

ஆண்டவனின் சந்நிதானத்திலே கிடைக்கும் அமைதி மனித வாழ்க்கையை விலை மதிப்பற்றதாக எண்ணத் தூண்டுகிறது.

விலைமதிப்பற்ற வாழ்க்கையில் மனித மனம் பயணம் செய்கிறது.

அது நீண்ட பயணம்.

மனித மனம் கரடுமுரடான பாதையில் வாழ்க்கை என்னும் நெடும் பயணத்தைத் துவக்கி விட்டது.

அனுபவங்கள் இப்போது மனத்தை மென்மையாக்கிவிட்டிருக்கின்றது.

மென்மையான மனித மனத்தில் இப்போது அதிகார தாகம் இல்லை. ஆணவச் செருக்கு இல்லை. தான் என்ற அகந்தை இல்லை. ஒருவனை வீழ்த்தி இன்பம் பெறும் எண்ணம் இல்லை.

இவைகளை யெல்லாம் துறந்து மென்மை பெற்ற மனித மனம் நெடும் பயணத்தைத் துவக்கியிருக்கிறது.

ஆண்டவனின் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதைப் போல் மனித மனம் அனைவருக்கும் பொதுவாக இயங்கத் துவங்குகிறது.

இப்போது துன்பமில்லை, துயரமில்லை, துர்க்குணங்களில்லை. இவைகள் அனைத்தையும் கடந்த மனித மனம். இப்போது உருவாக இருக்கிறது.

இப்படிப்பட்ட மனித மனத்தை ஒவ்வொருவரும் பெறுவோம். பேரின்ப வாழ்வில் நிலை பெறுவோம்.

அருள்திரு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

சிவந்திபட்டி, மம்சாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்.

கோயில் சிறப்பு விவரம்

மேற்படி திருக்கோயில் அருள்மிகு ஆண்டாள் பிறந்த ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு மேற்கே 7 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்து இருக்கிறது. மிகப் பழமையானது. மிகப் புராதனமானது. கல்வெட்டுக்கள் உள. தெளிவாகத் தெரியவுமில்லை. புரியவுமில்லை. ஏழூர்க் கொடி வழி வேளாளர்களுக்குப் பாத்தியப்பட்டது. என நூல் வாயிலாகத் தெரிகிறது. ஐப்பசி மாதம்—கந்தர் சஷ்டித் திருவிழா—கார்த்திகை மாதப்—கார்த்திகைத் திருவிழா. வைகாசி மாதம்—விசாக விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் உத்தரவுப்படி டிஸ். எண். 68145/74-ல் வழங்கப்பட்ட நிதி உதவித் தொகை ரூ 12,000-யுடன், அனைவரும் நிதி உதவித் தொகை தந்து கோவில் திருப்பணியை நிறைவேற்றி முருகன் அருள் பெற அழைக்கிறோம்.

இடம்: மம்சாபுரம்.

தேதி: 30—9—75

பு. முத்துப்பிள்ளை, மா. வெங்கடாசலம் பிள்ளை,
கோ. கோவிந்தம்பிள்ளை.
(அறங்காவலர்கள்)

ஆணையர் அலுவலகம், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034

சந்தாதாரர் விவரக் கேட்புத்தாள்

பொருள் : திருக்கோயில் சந்தா செலுத்திய விபரம் கோருதல்

திருக்கோயில் சந்தாதாரர்கள் திருக்கோயில் சந்தாவினைச் செலுத்திய விபரங்களைக் கீழேகண்டவாறு குறித்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விபரங்கள்

திருக்கோயில் சந்தா எண்.	ஆண்டு	சந்தா செலுத்திய தொகை ரூபாய்	நிரந்தர ரசீது எண் மற்றும் தேதி	சந்தா செலுத்திய அலுவலகம்
	1958—59			
	1959—60			
	1960—61			
	1961—62			
	1962—63			
	1963—64			
	1964—65			
	1965—66			
	1966—67			
	1967—68			
	1968—69			
	1969—70			
	1970—71			
	1971—72			
	1972—73			
	1973—74			
	1974—75			
	1975—76			

சந்தாதாரரின் முழு முகவரி :

சந்தாதாரரின் கையொப்பம்.

1. பெயர்...
2. வீட்டு எண்...
3. தெருப் பெயர்...
4. ஊர்ப் பெயர்...
5. அஞ்சலகப் பெயர்...
6. பின்கோட் எண்...
7. வட்டம்...
8. மாவட்டம்...

158609

நூல் அஞ்சல்

பெறுநர்:

உயர்திரு. ஆணையர் அவர்கள்,

இந்து சமய அறநிலையத் துறை,

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,

சென்னை - 34.

பின்கோட் எண். **600 034**

இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள் கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180
காதி கிராப்ட் களிலும்
மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!

வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

திருக்கோயில் டிசம்பர் 1975 ரு. 1 பதிவு எண். எம். 7039

பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009



நெடுங்கல் மன்றம்

எழுநிலை மாடம்

வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.